சக்தி

மாத வெளியீடு

•

சாரத் திரள்

என் மனம் உருகுகிறது	... கான் அப்துல் கப்பார்கான்	1
ராஜாஜி	... காளை அப்பா ராவ	5
மலையாள இலக்கியம்	... கே. எ. தாமோதர மேனன்	7
ஐந்தாண்டுத் திட்டம்	அரசியல் வாதி	11
தேவையும் தெய்வமும்	... கு. அழகிரிசாமி	14
வெள்ளைக்கார திவான்	... அரு. சொக்கலிங்கம்	23
மனத்திலே இளமை	... ஜார்ஜ் லாட்டன்	25
புதியன புகுதல்	... மு. வரதராஜன்	28
ஜெயப்பிரகாஷ் செய்த..	... பி. டி. தாண்டன்	29
புற்று நோய்	... ஆர். ஆர். ஸ்பென்சர்	33
குழந்தைப் புத்தகங்கள்	... 'பதி'	45
நிறுவையும் அளவையும்	... ராஜாஜி	48
ராஜாவின் ரயில்வண்டி	... 'பிரயாணி'	52
ருஷ்ய-அமெரிக்க...	... ஏர்ல் ப்ரௌடர்	55
மூளைக்குப் புதிய சிகிச்சை	ஜான் பார்சன்ஸ்	62
எஸ். ஏ. டாங்கே	... தொழிலாளி	65
வியட் நாமில் இளைஞர்.....	மாய் தி சாவ்	68
காதலினும் மானிடர்க்கு?	... பி. பிஜோர்ன்சன்	71
மார்க்ஸீயம்	... ச. ஹாலாஸ்யநாதன்	74
புது வைஸ்ராய்	... விமரிசகன்	77
புத்தக உலகம்	.. ரசமையா	78

முதலியவை

✲

விய பங்குனி

மலர் 13 இதழ் 12

சக்தி

அணா 8

88869

புது வருட

மங்கல வாழ்த்துக்கள்

வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திருநாடு

—பாரதியார்

அசோகா

சுகந்த பாக்குத்தூள்

No. 1506 அசோகா MILD SCENTED ASOKA

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி. :: கோயமுத்தூர்

For SILKS and SAREES
நாகரீகமான பட்டு புடவை
கள் பல ரகங்களில் ஏராள
மாக கிடைக்குமிடம்
S. R. B.
குப்புசாமி அய்யர் & சன்
(பழைய விலாசம்)
S. R. பாலுசாமி அய்யர்
& சன்ஸ்
117, நயினியப்ப நாய்க்கன்
தெரு, P. T. மதருஸ்
230, கீழமாரெட் வீதி, மதுரை
SRB
MSD

THE UNITED COMMERCIAL BANK LIMITED

யுனைடெட் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்

2, ராயல் எக்ஸ்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 4-கோடி
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 2-கோடி
ரிசர்வு நிதி	ரூ. 17½-லட்சம்

ஸ்ரீ. ஜி. டி. பிர்லா
(சேர்மன்)

ஸ்ரீ. எம். ஏ. இஸ்பஹானி
(வைஸ்-சேர்மன்)

ஸ்ரீ. ரமன்லால் ஜி. ஸரய்யா
(வைஸ்-சேர்மன்)

எல்லா விதமான பாங்கு அலுவல்களும் நடத்தப்படுகின்றன

பிராஞ்சுகளும் ஏஜன்ஸிகளும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளன

பி. டி. தாகூர்
ஜெனரல் மானேஜர்

சென்னை கிளைகள்:

310-311, லிங்க செட்டி தெரு
கே. ஆர். கே. ஐயங்கார்
கிளை மானேஜர்

சௌகார்பேட்டை
ஆர். வேணுகோபால்
கிளை மானேஜர்

UCB 3

உங்கள் தினசரி உபயோகத்திற்கு

பனிமலைத் தென்றல் போன்று குளிர்ச்சிவாய்ந்ததும், அரிய மலர்களின் நறுமணம் போன்று களைப்பாற்றுவதுமான டாடா ஒடிகொலோன் உங்கள் தினசரி உபயோகத்திற்காயினும் சரி, ஜுரத்தால் வேகும் நெற்றித் தடத்தை குளிரப்பண்ணுவதற்காயினும் சரி உகந்தது தான்.

எப்பொழுதும் ஒரு பாட்டில் வீட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்.

டாம்கோ விற்பனை இலாகா : 19-A, வாணியர் தெருவு, தபால் பெட்டி நெ. 31, மதராஸ்

2000 வருஷங்களுக்குமுன்
முன்னோர்கள் சந்தனத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்
டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின்
"ரோல்ஸ் ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்
னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தனத்திற்கு
சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாச
னைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தனத்தைலம் இன்றி
யமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும்
குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனுண்ட காலத்தின்
உண்மை என்றும் உண்மையே.
மைசூர்
சந்தண சோப்
சந்தணம் குறிப்பது குற்றமற்ற குணமே
மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

நீங்கள் நேரில் வந்து பரீக்ஷை செய்யுங்கள்

முதல்தரமான வஸ்துக்களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானால் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் பாபாலால் கம்பெனியிலிருந்து வாங்கினதானால் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்கு கவலை வேண்டியதில்லை. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராக இருக்கின்றன.

பாபாலால் & கம்பெனி

கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்

மதராஸ்

DIRECT IMPORTERS OF QUALITY DIAMONDS

விய
மலர் 13

சக்தி

பங்குனி
இதழ் 12

மெய்ப் பொருள் காண்பது அறிவு

28 APR
MADRAS

என் மனம் உருகுகிறது

கான் அப்துல் கபார்கான்

ஹிந்துஸ்தானத்தை அந்தகாரம் சூழ்ந்துகொண்டுவிட்டதாக இன்று எனக்குப் புலப்படுகிறது. எந்தத் திசையிலாவது ஞான ஒளி வீசாதா என்று வீணில் இங்கு மங்குமாய்த் திரும்பித் திரும்பிப் பார்க்கிறேன்.

இன்னும் பதினைந்து மாச காலத்திற்குள் இந்தியாவை விட்டு வெளியேறிவிடப் போவதாய்ப் பிரிட்டிஷார் சொல்லியிருக்கிறார்கள். இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

உங்களுக்கு வரப்போகிற அந்தஸ்தை நீங்கள் மறந்துவிடக்கூடாது. இப்படிப் பலாத்காரத்திலும் ரத்தக் களரியிலும் ஒரு தேசம் மூழ்கிவிட்டால், சுயராஜ்யத்தை அவர்கள் எப்படிக் கௌரவித்தவர்களாவார்கள்? இந்தச் சுதந்தரம் பாமர மக்களின் நலனுக்காக எப்படிப் பயன்பட முடியும்?

நான் எந்த அரசியல் நோக்கத்துடனும் பீகாருக்கு வரவில்லை. அரசியல் பிரசங்கம் நிகழ்த்தலாம் என்ற எண்ணம் எனக்குத் துளியளவுகூடக் கிடையாது. எல்லைப் புறத்தை விட்டு நான் புறப்பட்டபோதே, அரசியல் விஷயங்களையெல்லாம் ஆற்றிலே விட்டுவிட்டு, இங்கே சேவை செய்வதற்கென்றே வந்திருக்கிறேன்.

நான் உண்மையைச் சொல்லுகிறேன்; இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஹிந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியர்களும் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொள்வதைப் பார்க்க என் மனம் வேதனைப்படுகிறது.

நாமே நம் வீடுகளுக்குக் கொள்ளிவைத்துக் கொள்வதைப் பார்க்க என் மனம் துடிப்பாய்த் துடிக்கிறது. நம் சொந்த சொத்துப் பத்துக்களை நாமே நாசமாக்கிக்கொண்டிருக்கிறோம் இல்லையா? இவ் வெறி பிடித்த செயல்களின் விளைவு என்னாகும்?

நமக்கு ஏற்படும் ஆத்திர உணர்ச்சிகளின் விளைவாய், நாம் செய்கிற காரியங்கள் விவேகம் பொருந்தியவையாக இருப்பதில்லை. பீகாரில் நான் பார்த்துக் கொண்டிருப்பவைகளும் பாஞ்சாலத்தில் நடந்துகொண்டிருப்பவைகளும் ஜனங்களுக்குத் தெரியாதவை அல்ல. இச் சம்பவங்களின் விளைவு என்னாகும் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

நீங்கள் ஆத்திரங்கொண்டு எதையும் செய்ய முற்படக் கூடாது. எனது பேச்சுத் திறமையைக் காட்டுவதற்காக நான் உங்கள் முன் பேசவில்லை. நான் உணருவதைத்தான் உங்களிடம் தெரிவிக்கிறேன். இதே சமயத்தில் என் மனம் வேதனைப்படுகிறது.

ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் இன்னும் ஹிந்துஸ்தானில் வசிக்கும் சகலருக்கும் ஹிந்துஸ்தானம் தாய் நாடு. ஹிந்துஸ்தானம் இவர்கள் எல்லோருடைய நலனுக்காகவும் உள்ளது. என்றென்றைக்கும் ஹிந்துஸ்தானம் இவர்களுடையதுதான்; இவர்களுடைய நலனுக்காக உள்ளதுதான்.

ஹிந்துஸ்தானம் என்பது பிரிக்க முடியாத ஒரே முழுத் தேசம். இதில் சகலருக்கும் சம கௌரவம் உண்டு.

ஹிந்துஸ்தானத்தில், மதக் கொள்கைகளை இன்று ஜனங்கள் மறந்துபோயிருப்பது ஒரு துர்ப் பாக்கியம். கடவுளின் மதமாகிய உண்மையான மதத்திலிருந்துநாம் தட்டுக்கெட்டு விலகிவிட்டோம்.

ஹிந்துஸ்தானத்தில், அந்த அந்தக் காலத்திலே, சிலர் இஸ்லாமிய மதத்திற்கோ ஹிந்துமதத்திற்கோ சீக்கிய மதத்திற்கோ ஆபத்து என்று வீண் கூப்பாடு போடுவது ஒரு துரதிர்ஷ்டமான விஷயம்.

பல்வேறு மதங்களிலும் உள்ள உண்மைகளை நாம் உள்ளூரக் கவனித்துப் பார்ப்பதில்லை. ஆகையால், நாம் வெறி பிடித்தவர்கள் போலாகி, நம் சகோதரர்களின் குரல்வளைகளை நெறிக்க ஓடோடித் தாத்திச் செல்கிறோம்.

ஜனங்களுக்கு உண்மையான மத சுதந்தரம் வேண்டுமானால், ஒருவரையொருவர் கௌரவிக்கவும் நேசிக்கவும் வேண்டும்.

குரு நானக் அன்பை உபதேசிக்க வந்த ஒரு மகான். இந்த அன்பு ஒவ்வொருவரிடத்திலும் நிலவ வேண்டுமென நான் எதிர்பார்க்கிறேன். மனிதனுக்காக உள்ளது மதம். மனிதன் தனது நன்மையை முன்னிட்டுக் கடவுளை வழிபடுகிறான். ஆனால், மக்கள் வழிபடுகிறார்களா இல்லையா என்பதைப் பொறுத்துக் கடவுள் இருக்கவில்லை. மதத்தின் உண்மையான கருத்தை நீங்கள் மறந்துவிடக் கூடாது. குரோதத்துக்கும், சச்சரவுக்கும், கொள்ளைக்கும், ரத்தக் களரிக்கும் மதம் இடமளிக்கவில்லை. தவிர, பெண்களையும், குழந்தைகளையும், கிழவர்களையும் கொல்லுவதற்கு மதத்தில் இடமும் கிடையாது.

மதம் என்பது அன்பு. துன்பத்திலும் துயரத்திலும் கிடந்து அவதிப்படுவோர்க்கு உதவி செய்ய வேண்டுமென்று மதம் உங்களுக்கு விதித்திருக்கிறது. உலகத்திலுள்ள சகல மதங்களும் இந்த அடிப்படையான குண விசேஷங்களையே போதிக்கின்றன.

ஜனங்கள் உண்மையைவிட்டுத் தவறி விலகிப்போய், இப்படியாக ஒருவரோடு ஒருவர் பிரிந்து கிடக்கிறார்கள்; ஹிந்துஸ்தானம் தட்டுத் தடுமாறி நாசமடையும் வழியில் சென்றுகொண்டிருக்கிறது.

ஒவ்வொரு மதத்தின் சாரமும் அன்புதான். ஆகையால், இந்த அன்பெனும் விதிக்கு நீங்கள் மறுபடியும் கட்டுப்பட்டு அவ் வழியில் செல்லுவீர்களாக.

[நாட்டில் நடக்கும் ரத்தக் களரியைக் கண்டு மனம் உருகிக் கான் அப்துல் கபார்கான் பாட்னாவில் பேசியதன் சாரம்.]

*

ராஜாஜி

காஸா சுப்பா ராவ்

காங்கிரஸ் ஸ்தாபனத்தில் ஒரு பெரும் பதவியேற்று நாடு அறியும்படி தலைவராக இருக்க, மகாத்மாவின் உதவியும் அவருடைய ஆசியும் தேவை என்பது பலரும் அறிந்த விஷயம். ஆனால், இதற்கு விதிவிலக்காக இருப்பவர் ராஜாஜி ஒருவர்தாம்.

அரசியலில் முக்கியத்துவம் பெற வேண்டுமானல், தியாக சிந்தனை அவசியம் என்பது காந்தீயவாதிகளின் நோக்கம். 'தியாகம்' என்னும் பதத்திற்குச் சிறை செல்லுவது, தடி அடிகளை அஞ்சாது ஏற்பது, கோபங் கொண்டு சீறி எழுகின்ற அதிகார வர்க்கத்தின் ஆக்கிரமிப்புக்குத் தலை வணங்காது இருப்பது போன்றவைகள் மட்டுமேயன்றி, தனக்கென்று எதையும் வைத்துக்கொள்ளாத பரந்த சிந்தனை, எளிய வாழ்க்கை, தேவைக்கு மீறிய ஆடம்பர வாழ்வை வெறுத்துப் பொருள் தேடும் நோக்கத்தை விட்டு, தங்களுடைய உடல் பொருள் ஆவி அனைத்தையும் சமூகத் தொண்டுக்கும். நாட்டு முன்னேற்றத்துக்கும் அர்ப்பணம் செய்தல் என்பனவும் ஆகும். காந்தீயத் தொண்டர்கள் தங்களுடைய மாடு, மனை அனைத்தையும் துறந்து நாட்டுச் சேவையில் ஈடுபடுகின்றனர். ஏன்? உலக சுகங்களைத் தரும் பொருள்களை விடுத்து மக்கள் மனத்தில் குடிகொள்ளுகின்றனர்.

தியாகம் செய்வது சுலபமானது; அது மட்டுமல்ல, லாபகாமானதும்கூட. தியாகம் செய்வதால் வரும் பெயரும் புகழும் மகத்தானது; அதனல் மக்களிடையே தலைவனாகத் திகழலாம். ஆனல், ராஜாஜி இந்தக் குறுகிய நோக்கங்களுக்காகத் தியாகம் செய்யவில்லை. கடந்த இருபது ஆண்டுகளாக இடைவிடாது காந்தி காட்டிய வழியில் சென்று நாட்டுக்கு நற்பணி புரிந்தாரேயன்றி, அந்தச் செல்வாக்கை வைத்துக்கொண்டு அரசியலில் வியாபாரம் செய்யவில்லை. அவருடைய சேவை, வீட்டுப் பேறு எய்துவதற்காக உலகியற் சுகங்களைத் துறப்பது மட்டுமல்லாமல், கைக்கெட்டும் வீட்டுப் பேற்றையும் துறப்பதற்கு ஒப்பாகும்.

இவ்வாறு அவர் செய்யக் காரணம் என்ன?

காந்திஜியைச் சுற்றி இருப்பவர்கள், காந்திஜியினுடைய நல்லெண்ணத்தைப் பெற விழைகிறார்கள். அதற்காக அவர்கள் எதை வேண்டுமானலும் செய்யத் தயார். கொள்கையில் முழு ஈடுபாடு இல்லாமலிருந்தாலும், தாங்கள் முழுமனத்துடன் ஆதரிப்பவர்கள்போல் சொல்லிக் கொள்கிறார்கள். இதுதான் முதல் காரணம். சென்னை மாகாணக் கதர்த் திட்டத்தை எதிர்ப்பவர்களும் இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள்தாம். பீகார் மாகாணத்தில் பெரும்பாலான மக்கள் தங்களை அஹிம்சாவாதிகள் என்று சொல்லிக் கொண்டு சமயச் சச்சரவுகளில் ஹிம்சை முறையை மேற்கொண்டனர். இம்மாதிரியான துக்க

அரசியல் உலகில் ராஜாஜிக்கு உரிய ஸ்தானம் எது என்பதை இந்தக் கட்டுரை மூலம் கூறுகிறார் ஸ்வதந்த்ரா ஆசிரியர் சுப்பா ராவ். சோஷியல் வெல்ஃபேர் ஆண்டு மலரிலிருந்து எடுத்த கட்டுரை.

கரமான நடவடிக்கைகள் நமக்குப் பாடங் கற்பிப்பதற்கு முன்னாலேயே, காந்திஜியின் தெய்விகத் தன்மை, மக்கள் தங்களுடைய மனத்தில் உண்மையில் நம்பாதவற்றை வெளிப் பகட்டுக்கு நம்புவதாகச் சொல்லத் தூண்டுகிறது என்ற உண்மையை ராஜாஜி கண்டுகொண்டார்.

காந்திஜியைத் தெய்வமாக வைத்து வழிபடுவதனால், மக்கள் அனைவரும் அவர் சொல்வதற்கெல்லாம் சரி போட்டுக் கொண்டு இருக்கச் செய்கிறது. இது தீங்கை விளைவிக்கும். ஏனெனில், அவற்றை நடைமுறையில் கொண்டுவருவதற்கு நம்பிக்கை என்னும் உயிர்ச் சத்து அவசியம். நம்முடைய அரசியல், தவறான எண்ணங்களையும் நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தத் தப்பபிப்பிராயங்களையும் தவறான கொள்கைகளையும் விடுத்து, நடைமுறையில் கொண்டுவரக் கூடிய கொள்கைகளைக் கொண்ட இயக்கமாகக் காங்கிரஸைச் செய்வதற்காகத்தான் ராஜாஜி காங்கிரஸிட மிருந்து சிறிது மாறினார். சில கொள்கை வேறுபாட்டில் மகாத்மாவுடன் சண்டைபோட்டாலும், மகாத்மாவுக்கு உயிர் போன்ற வாய்மையினின்றும் ஒரு சிறிதும் வழுவமாட்டார். அதனாலேதான் இருவரிடையேயும் நட்பு வளர்ந்ததே யன்றிக் குறைவுபட வில்லை.

ராஜாஜியின் கொள்கை வேறுபாட்டிற்குக் காரணமான பிரச்னை இன்னும் தீர்ந்தபாடில்லை. உண்மையில் அது இன்று பயங்கரமான சமயச் சண்டைகளாக மாறி யுள்ளது. ஜின்னா தூண்டிவிட் டிருக்கும் இந்தக் கிளர்ச்சியைத் தடுத்து, அமைதி நிலவச் செய்ய ராஜாஜிக்கு ஒப்பானவர் இல்லை என்றே சொல்ல வேண்டும். ஏனெனில், ஜின்னாவை நிறை போட்டு அளந்து வைத்திருப்பவர், காங்கிரஸிலாவது அல்லது காங்கிரஸுக்கு வெளியிலாவது சரி ராஜாஜி ஒருவர்தாம். கல்வியறிவற்ற, முன்னேற்ற மில்லாத ஒரு ஜன சமூகத்தை, மதத்தின் பெயரால் ஒன்றுபடுத்தி இந்துக்களுக்கு விரோதமாகத் தூண்டிவிடுவதுதான் ஜின்னாவின் நோக்கம். இதன் விளைவு ஆழ்ந்த சிந்தனையின் பாற்பட்ட முடிவுக்கு விரோதமானது; பிற சமயத்தவர்களுக்குத் தீங்கை விளைவிப்பது. அந்த மதத்திலேயே இருந்துகொண்டு அவர்களுடைய கொள்கைகளை முழுவதும் ஆதரிக்காதவர்களைப் பெரிதும் பாதிக்கிறது. ஜின்னாவைப் பிறர் எவ்வளவுக் கெவ்வளவு தாக்குகின்றனரோ, அவ்வளவுக் கவ்வளவு அவர் தம் மதத்தினரிடையே செல்வாக்கு பெறுகிறார். மேலும், 'இவ்விதத் தாக்குதல்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குள் இருக்கும் முஸ்லிம்களின் நிலையை மோசமாக்குகிறது, பொருத்த மற்ற ஒன்றாக ஆக்குகிறது' என்று காஸ்னஃபர் அலி கான் சமீபத்தில் சொன்னார். இந்த விஷயம் ஜின்னாவுக்கு நன்றாய்த் தெரியும். காலதத்துக் கேற்றவாறு நடிக்கத் தெரிந்த ஜின்னா, தமது விட்டுக் கொடுக்காத தன்மையினால் பிறரிடமிருந்து வசைமாரி வாங்கி, அதனால் முஸ்லிம்களின் உள்ளத்திலே இடம்பெற்றுவிட்டார். அரசியல் தலைவர் என்ற முறையில் இதைக் கையாளுவதில் பெயர் பெற்றுவிட்டார். மிகவும் திடமான மனம் படைத்த, காங்கிரஸி லுள்ள சில அரசியல் வாதிகள்கூட ஜின்னாமீது தாங்

சீன மக்களும் சீனமும்

எழுதியவர் :

லின்-யூ-டாங்

நோபல் பரிசுபெற்ற அமெரிக்கப் பிரபல ஆசிரியை யான பேர்ள் பக் அம்மையார், "சீன மக்களும் சீனமும் என்ற நூலைப் பற்றிக் கூறியிருப்பதாவது :

" இப்படிப்பட்ட புத்தகம் சீனத்தான் ஒருவனைத் தவிர வேறு யாரும் எழுத முடியாது. எந்தச் சீனனாலும்கூட இப்படிப்பட்ட ஒரு புத்தகத்தை எழுத முடியாதோ என்று நான் நினைக்கத் தொடங்கிவிட்டேன்.

"சிறந்த புத்தகங்கள் எல்லாவற்றையும் போலவே, இதுவும் திடீரென்று வெளிவருகிறது. இதிலிருந்து நாம் என்ன என்ன எதிர்பார்க்கிறோமோ அவை அனைத்தையும் இது தருகிறது. உள்ளத்தைச் சொல்லுகிறது. உண்மையைக் கண்டு வெட்கப்படவில்லை. பெருமையோடு எழுதப் பெற்றிருக்கிறது. நகைச் சுவையும் அழகும் இருக்கின்றன. வேடிக்கையிருக்கிறது. விஷயம் இருக்கிறது. பழைமைபுதுமை இரண்டையும் புரிந்துகொண்டு பாராட்டுகிறது. சீனாவைப்பற்றி இதுவரைஎழுதப்பெற்றுள்ள புத்தகங்கள் எல்லாவற்றுள்ளும் இது மிகவும் பரிபூரணமானது; மிகவும் ஆழமானது ; மிகவும் உண்மையானது.''

விலை ரூ. 7-8-0 தபால் செலவு தனி

புதுமைப் பதிப்பகம் லிமிடெட்

கல்லுக்கட்டி
காரைக்குடி

14, வேளாளர் தெரு,
புரசைவாக்கம், சென்னை

ஸ்ரீவிஸ் - அம்லா ஹேர் ஆயில்

உயர்ந்த மூலிகைகளைக்
கொண்டு தயாரிக்கப்பட்டது.
குளுர்ச்சியாயும் புத்துணர்ச்சி
அளிப்பதாயுமிருக்கிறது.

ஸ்ரீவிஸ் பர்பியூமரி ஒர்க்ஸ்

பூரண உரிமையாளர்கள் :

S. விஸ்வநாதம் & கம்பெனி

44, பந்தர் தெரு : மதராஸ்-1

கிரைப்-டில்-வாட்டர்
GRIPE-DIL-WATER

குழந்தைகளின்
ஆரோக்கியத்திற்கு உகந்தது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

BHARATH DRUG HOUSE
MADURA

Children's necessity-Pet drink of the Child-Mother's ready-at-hand remedy-for all disorders of Stomach and Children's General Tonic

டிஸ்டிரிபியூடர்கள்:-T.N.C.நாகலிங்கம் பிள்ளை & ஸன்ஸ், மருந்து ஷாப், மதுரை

பாட்டில் 1-க்கு ரூ. 1-4-0

யூட்டிரோனு UTERONA

பெண்களுக்கு ஏற்படும் சூதக வலி, சூதகக் கட்டு, அகால பழுக்கடை, மலட்டுத் தன்மை இவைகளை நீக்கி புத்திர சந்தானத்தைக் கொடுக்கும் அரிய டானிக்.

MANUFACTURED BY
BHARATH DRUG HOUSE
MADURA

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

டிஸ்டிரிபியூடர்கள்:-T.N.C.நாகலிங்கம் பிள்ளை & ஸன்ஸ், மருந்து ஷாப், மதுரை

கள் கொண்டுள்ள சீற்றத்தையும் மறந்து, அவருடன் கைகோத்து அவர் வீட்டிற்குச் சென்றிருக்கிறார்கள். ஆனால், ராஜாஜி ஒரு முறைகூட அவ்வாறு செய்தது கிடையாது.

ஜின்னாவை வார்த்தைகளால் வென்றுவிட முடியாது என்று தெரிந்துகொண்டுள்ளார் ராஜாஜி. அநாவசியமாக வார்த்தை யளவில் ஜின்னாவுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதால், நம் கட்சியைக் காட்டிலும் ஜின்னாவினுடைய ஸ்தானம் தான் வலிவுறுகின்றது. ராஜாஜி ஒருவர்தாம் பாகிஸ்தான் பேயை விரட்டியடிக்க வழி கண்டுபிடித்துள்ளார். அதைக் கண்டு ஓடுவதில் பயனில்லை. அதை எதிர்த்து நிற்க வேண்டும். ஓர் உருவும் இல்லாத ஒன்றை, உருப்பெற்ற ஒன்றாக மாற்ற வேண்டும். அந்தப் பாகிஸ்தானுக்கு ஓர் உருவம் கொடுத்து நன்கு விளக்கினோமானால், ஜின்னாவுங்கூட அதை விட்டு ஓடிவிடுவார்.

தங்களை அடிபணிந்து போற்றிப் பின்தொடருகின்றவர்களிடையே, தான் மதிப்பு வாய்ந்து விளங்க வேண்டும் என்பது சர்வாதிகாரிகளுக்கு அவசியம். தங்களுடைய மதிப்பையும், பொய்யான கண்யத்தையும் இழக்க நேர்ந்தால், எந்த மக்கள் அவர்களைப் போற்றினார்களோ அவர்களே அவர்களைத் தூஷித்துக் கேவலமாக நடத்துவார்கள்.

காங்கிரஸ்—லீக் ஒத்துழையாமை மிருகத்தனமான ஹிம்சையாக உருவெடுத்தால், இன்று காங்கிரஸி லுள்ள கண்ணியமான, அறிவிற் சிறந்த, சிறு புத்தி என்பதே சிறிதும் இல்லாத தலைவர்களே தலைமை தாங்குவார்களா என்பது சந்தேகம்தான். மனித இனத்தை அடியோடு அழிக்கக் கூடிய அணுக் குண்டு போன்ற ஆயுதங்கள் தோன்றியிருப்பதால், தங்களுடைய நோக்கங்களை யுத்தத்தின் உதவியால் நிறைவேற்றிக்கொள்ளலாம் என்ற தவறை உணர்ந்து, தங்களுடைய பொருள், படைப் பலத்தை, உலக சமாதானத்தை நிலைநாட்ட நிறுவப்படும் ஸ்தாபனத்திற்குக் கொடுத்து உதவ வேண்டும். அரசியல்வாதிகள் அனைவரும் கூடி, உலக மக்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டுச் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்று முடிவு கட்டினால், அதன் படியே நாமும் நமது நாட்டினருடன் சகோதர பாவத்தோடு வாழ வேண்டும். இம்மாதிரி மக்கள் வாழவேண்டுமென்று, நல்லனவற்றை உதறித் தள்ளும் முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த பிற்போக்காளரும்கூட எண்ணும் படி செய்ய வல்லவர் ராஜாஜி ஒருவர்தாம்.

கல்வியறிவு என்பது குறுகிய வகுப்புக்குள் மட்டும் இருந்து பயில்வ தன்று; ரேடியோ, சொற்பொழிவாற்றும் மேடை, தினசரித் தாள்கள் முதலியன கல்வியறிவைப் பரப்பும் சக்தி மிகுந்த சாதனங்கள் எனலாம். இந்த மூன்று பிரசார வலிமை வாய்ந்த விஷயங்களை, ராஜாஜியைப்போல் அறிவோடும் திறமையோடும் நடத்த வல்லவர் ஒருவருமில்லை. அவருக்குச் சமானமானவர் ஒருவருமில்லை என்றே சொல்லலாம். அவருடைய சமூகச் சீர்திருத்த எண்ணம், பண்டிதர்களைப்போல் பரந்த படிப்பினாலோ, இடைவிடாத ஆராய்ச்சியினாலோ உருவான தல்ல. வாழ்க்கையில் நிதரி

சனமாக அவர் காணும் உண்மைகளைக் கண்டே கொண்ட கருத்து அது. பொது அறிவு, ஆற அமர யோசித்து முடிவு கட்டிய தீர்ப்புக்கள், கூர்ந்த மதி, சூட்டிகை நிறைந்த சூக்ஷ்ம திருஷ்டி, முயற்சி எடுத்துத் தயார் செய்யாமல் திடீரென எந்த விஷயத்தைப்பற்றியும் தெளிவாகப் பேசும் திறமை முதலியனதாம் அவருக்குப் பல துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர் என்ற பெயரைக் கொடுத்துள்ளன. ஆசிரியர், பொருளாதார நிபுணர், ஆட்சி முறையில் அநுபவம் பெற்றவர், எழுத்தாளர், பிரசாரகர், வேதாந்தி ஆகிய அனைவரும் ஒன்று கலந்து ஓர் உருவத்தில் வந்ததுபோல் காட்சி அளிக்கிறார் ராஜாஜி. அவருக்கு எதிராக நடத்தப்பெறும் சண்டை, சச்சரவுகள் அனைத்தையும் நகைமுகத்தோடு ஏற்று, அவைகளைவாழ்க்கையில் விளையாட்டுக்களாக மதித்து அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. அவருடைய அஞ்சா நெஞ்சம் ஒருபொழுதும் பின்வாங்கியதில்லை. அவருடைய கஷ்டங்கள் அவருக்குத் துன்பத்தை விளைவிப்பதற்குப் பதிலாக இன்பமூட்டும் சாதனமாக விளங்குகின்றன. அவருடைய சரளமான நடையும், இனிமையான குரலும் கேட்போர் உள்ளத்தைத் தொடுகின்றன. அப்பொழுது அவருடைய முக பாவத்தைப் பார்த்துக்கொண் டிருப்பதிலேயே ஒரு தனி இன்பம் தான். தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று விடாப்பிடியாக இருப்பவர்களையும் தம்முடைய வாக்கு வன்மையால் தம் பக்கம் திருப்பிவிடும் ஆற்றல் படைத்தவர். தாம் முயன்று சாதித்த பல காரியங்களுக்குக் கிடைக்கும் பாராட்டுக்கள் தமக்கே உரியவை என்ற சுய நல எண்ணம் மற்றவர். நம் நாட்டிலுள்ள பல தலைவர்களின் கடந்த கால தேசத் தொண்டைக் கணக்கெடுத்துப் பார்த்தோமானால், ராஜாஜியைப்போல் (காந்திஜியைத் தவிர) மக்களின் போக்கை மாற்றி, இன்று இருக்கும் நிலைக்குக் கொண்டு வந்தவர் வேறு யாருமில்லை. அவரிடத்தில் இரண்டு அரும் பெரும் குணங்கள் உண்டு. அவர் சாந்த ஸ்வரூபி; தற்புகழ்ச்சி இல்லாதவர். தாம் கொண்ட கருத்துக்களைப் பிறர் நடைமுறையில் செய்யும்படி தூண்டி, அவர்களே அதன் பெருமையை அடையும்படி செய்வார். இரண்டாவதாக, பிறர் உதவி சிறிதும் இன்றி முன்னுக்கு வந்த பல பெரிய தலைவர்களில் இவரும் ஒருவர். இந்த இரண்டு மேன்மையான அருள்கள்தாம் அவரை மற்றத் தலைவர்களைக் காட்டிலும் பிரச்னைகளைத் (குறிப்பாகப் பாக்கிஸ்தான் பிரச்னையை) தீர்ப்பதில் தலை சிறந்து விளங்கும்படி செய்கிறது.

✲

......முளையில் தெரியும்

பிரபல குத்துச் சண்டை நிபுணனான ஜோ லூயி சிறு குழந்தையாக இருந்த பொழுது, அவரது தாய் அவரை, குழந்தை நலம் விரும்பும் கழகம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒரு மனோதத்துவ சாஸ்திரி அவரைப் பரிசோதனை செய்துவிட்டு, "உங்களுடைய மகனை, கைகளுக்கு வேலை தரும் காரியங்களைச் செய்யப் பழக்குங்கள்" என்று சொன்னாராம்!

மலையாள இலக்கியத்தின் மறுமலர்ச்சி

●

கே. ஏ. தாமோதர மேனன்

மலையாள இலக்கியத்தைப்பற்றி மேலோட்டமாக ஆராயும் இந்தக் கட்டுரையில், அதனுடைய பழைய இலக்கியத்தைப்பற்றிக் கூற இடமில்லைதான். ஆனாலும், இலக்கியத்தின் மறுமலர்ச்சியைப் பற்றிச் சரியாக ஆராய, அதன் கடந்த காலத்தையும் நன்கு அறிவது அவசியமாயிருக்கிறது.

திராவிட பாஷைகளில் பிறந்து வளர்ந்தது மலையாளம். ஆரம்ப காலத்தில், சின்னஞ் சிறிய நாடோடிப்பாட்டுக்களே பெரும்பான்மையாக மலையாள இலக்கியத்தில் தோன்றின. அநேகமாக அடியோடு மறைந்துபோயிருந்த இவைகளை ஒரு சிலர் தேடிக் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார்கள். புதிதாகத் தலையெடுக்கும் இளம் கவிஞர்களுக்கு இவை இப்போது வழிகாட்டிகளாயிருக்கின்றன.

சம்ஸ்கிருதக் கலப்பு ஏற்பட்ட பின்னரே மலையாள பாஷை வளம் பெற்றது. இரண்டாவது சகாப்தத்தில் பாஷைக்கு உயிர் கொடுத்த பிரபல இலக்கியக் கர்த்தாக்கள் தோன்றினார்கள். துஞ்சத் ராமானுஜன் எழுத்தச்சன் என்ற மகா கவி ராமாயணத்தையும், பாரதத்தையும் எழுதினார். இன்றும் இது மலையாளிகளில் பெரும்பான்மையினரால் பக்தி சிரத்தையுடன் வாசிக்கப்பெற்று வருகிறது. சேருசேரி, குஞ்சன் நம்பியார், உண்ணாயி வாரியர், எராயிம்மன் தம்பி போன்ற கவிஞர்களின் பெயர்கள் மலையாள மொழி உள்ளளவும் மறையப் போவதில்லை என்று சொல்லலாம். சம்ஸ்கிருத இலக்கியங்களில் காணப்படுவது போலவே, இவர்களுடைய காவியங்களிலும் நடைவேகம், அற்புதமான கற்பனை, உள்ளங் கவரும் உவமைகள், பக்தி ரசம் முதலியன வெல்லாம் வெளிப்பட்டன. சம்ஸ்கிருத நாடகங்களைக் 'காப்பி' அடிக்க இவர்கள் முயலாமலிருந்ததே, இவர்களுடைய கீர்த்தியை அதிகப்படுத்தியது.

மலையாள இலக்கியத்தின் மூன்றாவது பகுதி, அது ஆங்கிலத்தையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டபோது ஆரம்பமாகிறது. அந்தக் காலத்திலிருந்த நிலவரங்களுக்கேற்ப மலையாள இலக்கியமும் திரும்பியது. அரசியல் அடிமைத்தனமும், ஆள்பவர்களின் மொழி, நாகரிகம் இவைகளின் மேலிருந்த ஒரு பைத்தியக்கார மோகமும் மக்களின் கலாசாரத்தையே குலைய வைத்தது. தாய்ப் பாஷையைப் படிப்பது வெட்கக்கேடான காரியமாகவும், ஆங்கில சர்வகலாசாலைகளில் படித்துப் பட்டம் பெறுவது ஒரு பெரிய யோக்யதாம்சமாகவும் பொதுவாகக் கருதப்பட்டது. மலையாளம் முற்றிலுமே சிருஷ்டி சக்திக்கு வறட்சி ஏற்பட்டது. மலையாள இலக்கியம் ஸ்தம்பித்து நின்ற

மலையாள நாட்டின் இயற்கைச் சிறப்பைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அதனுடைய இலக்கியமும் அதே அழகுடனும், வளமையுடனும் இருப்பது, இக் கட்டுரையின் மூலம் தெரிகிறது. த்ரிவேணி பத்திரிகையில் வெளிவந்ததன் சாரம்.

அந்தக் காலத்தில், வெளியான ஒன்றிரண்டு சிருஷ்டிகளும், இலக்கிய முத்திரை பெறலாயக் கற்றனவாகப் போயின.

நம் தேசிய ஆர்வத்துக்கு எழுச்சி ஏற்பட்ட சமயத்திலே தான், இந்தப் பரிதாபகரமான நிலைமைக்கும் ஒரு விடிவு ஏற்பட்டது. காந்திஜியின் தலைமையில் காங்கிரஸ் விடுதலைப் போராட்டத்தில் இறங்க மக்களை அழைத்தது; மகாத்மாஜியின் நிர்மாணத் திட்டம் மக்கள் தேகத்தில் புது ரத்தத்தை ஓடச் செய்தது; தேசத்தில் புது வாழ்வு தொடங்கிற்று; இலக்கியத்திலும் புது வழி தென்பட்டது.

இந்தப் புரட்சியின் பின்னணியில் நிற்பவர்களில் இருவர் முக்கியமானவர்கள். ஒருவர், கேரளவர்ம வலிய கோயில் தம்பிரான்; மற்றவர், அவருடைய பருமகன் ராஜ ராஜ வர்ம கோயில் தம்பிரான். படித்த மக்களிடையே தாய் மொழிப் பற்று உண்டாக்க அவர்கள் செய்த முயற்சி குறிப்பிடத் தகுந்தது. மலையாள இலக்கிய மறுமலர்ச்சி பற்பல வழிகளில் ஏற்பட்டது. புதுப் புதுக் கவிஞர்கள் புதுப் புதுப் பாதைகளை வகுத்தார்கள். விடுதலை குறித்து அடக்க முடியாத தாகம் பிறந்தது; தீண்டாமையின்மேல் சினம் பொங்கி எழுந்தது; இன்னும் எத்தனையோ அக்கிரமங்கள் அற்புதமான சிருஷ்டிகளுக்கு அஸ்திவார விஷயங்களாக ஆகி, வியக்கத்தக்க கவிதைகளாக வெளிவந்தன. சம்ஸ்கிருதத்தை ஒட்டிய சீர், மோனை முதலியன போய், பண்டை முறையிலேயே கவிதைகள் எழுதப்பட்டன. வள்ளத்தோல், குமரன் ஆசான், உள்ளூர் முதலிய அறிஞர்கள் இந்தப் புதிய இயக்கத்தின் தலைவர்கள் ஆனார்கள். இவர்கள், இந்தியாவின் பழைய புராணக் கதைகளையே கையாண்டு, அவைகளின் உன்னதமான லட்சியக் கருத்துக்களைக் காலத்துக்கு ஏற்பச் சமைத்துக் கொடுத்தார்கள். இந்தத் தீரர்கள் செய்த காரியங்களைப் பற்றி மேலோட்டமாகக் கூறுவதுகூட இயலாத காரியம்.

வள்ளத்தோலின் "என் குரு" என்ற, காந்திஜியைப் பற்றிய காவியம், மிகவும் அழகான நடையுடன், தேசிய ஆர்வத்தின் அடிப்படையில் தோன்றியது. வள்ளத்தோலின் சிருஷ்டிகளில் காணும் ஒயிலைப் பின்பற்றக் கூடிய எழுத்தாளர்கள் மிகச் சிலரே இருக்கின்றனர். "தாய்க்கு வணக்கம்" என்ற அவருடைய காவியம் கேரள நாட்டின் சிறப்பைக் கூறுவதாகும். தாய் நாட்டின் இயற்கை எழில் மட்டுமின்றி, அதைச் சீரழிக்கும் பசியின் கோரத் தாண்டவமும், வறுமைக் கொடுமையும்கூட அவருடைய இதயத்தை உருக்கி, சிறந்த ஒரு கவிதைப் பிரவாகமாகப் பெருக்கெடுக்கச் செய்தன.

இந்தத் துறையில் மங்காத ஒளியுடன் பிரகாசிக்கும் இன்னொருவரான குமரன் ஆசான் கேரள நாட்டின் தலைசிறந்த, முதல் நாடோடிக் கவியாவார். மலையாள இலக்கியத்தின் நாட்டுப் பாடல்களுக்குள் அவருடைய "உதிர்ந்த மலர்" முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. ஜாதிக் கொடுமையை அவர் தாமே அநுபவித்தவர். அவருடைய கவிதையில் காணப்படும் இந்தக் கொடுமையைப் பற்றிய உணர்ச்சி வேகத்தை வேறு எந்தக் கவிதையிலும் காணமுடியாது. அவரு

டைய கவிதைகள் சிந்தனையைத் தூண்ட வல்லன. வாழ்க்கையின் ஆழ்ந்த ரகசியங்களிலே புகுந்து, அடிப்படையான உண்மைகளை வெளிப்படுத்தும் தன்மை அவர் கவிதையில் நிறைந்து விளங்கு கிறது.

சிறந்த ஆசிரியர்களுடைய சிருஷ்டிகளில் காணப்படும் எல்லாச் சிறப்புக்களையும் உள்ளூரின் எழுத்தில் காணலாம். புத்துணர்ச்சியுடன் எழுந்து, மலர்ந்து நிற்கும் புது வாழ்வுக்கு அவருடைய எழுத்து ஓர் உதாரணம். நாளப்பட் நாராயண மேனன், குட்டிபுரம் கேசவன் நாயர் போன்ற கவிஞர்கள், இவர்களுக்குப் பின்னால் புது யுகம் சமைத்த சிற்பிகளாகத் திகழ்கிறார்கள். மலையாள இலக்கியத்துக்கு உயிர் கொடுத்து, வளம் ஊட்டிய இந்த மகான்கள் வரப் போகும் இளம் தலைமுறைக்கு வழிகாட்டி யிருக்கிறார்கள்.

இளம் கவிஞர்களைப் பற்றிச் சிறிதுதான் குறிப்பிட்டிருக்கிறேன். பொதுவாக, இவர்களில் இரண்டு வகையினர் இருக்கின்றனர். தகுந்த கண்ணோட்டத்துடன் வாழ்க்கையை ஆராய்ந்து எழுதும் முதல் வகையினர் எழுதும் கவிதைகள், முன்னேற்றத்துக்கு வழி சொல்லுகின்றன. இரண்டாவது ரகத்தவர்,தோல்வி மனப்பான்மை கொண்டவர்கள். இவர்களின் கவிதைகளில் ஜீவ சக்தி தென்படாது. தற்போதைய சமூக அமைப்பின் கொடுமையினால் மனம் உடைந்து போனவர்கள் இவர்கள். ஆனால், செயலில் இறங்குவதற்கு வகை தெரியாமல், ஆழ்ந்த சோகத்திலே மூழ்கி, விம்மி அழுது, பரிதாபகரமாக முறையிடுகின்றனர். உலகத் துன்பங்களி லிருந்து விடுதலை காண இவர்கள் தற்கொலையிடம் சரணடைகிறார்கள். இவர்களில் எழுத்துவன்மை படைத்த அநேகர் இருக்கின்றனர். ஆனால், பெருகிவரும் மறுமலர்ச்சி ஓட்டத்தில் கலந்துகொள்ளாமல், ஒதுங்கி நிற்கிறார்கள் இவர்கள். சங்கம்புழை கிருஷ்ண பிள்ளை இந்தத் தோல்வி மனப்பான்மையாளர்களுக்குத் தலைமை தாங்குகிறார்.

முதல் வகையினரில் முதல் ரகக் கவிஞர்கள் பலர் இருக்கிறார்கள். உதாரணமாக, ஜி. சங்கர குரூப், பி. குன்னிராமன் நாயர், பாலாமணி அம்மா போன்றவர்கள் எழுத்து உலகத்தின் சிகரத்தை எட்டியவர்கள். இவர்களுடைய சாதனையைப் பற்றி மலையாள இலக்கியமே பெருமைப்பட இடம் உண்டு. குரூப்பின் கவிதைகள் மிகவும் ஆழ்ந்த கருத்துடையவை. நடை வேகத்தை ரசித்தாலும், அவைகளின் உள் அர்த்தத்தைச் சாதாரணமாகப் பலர் புரிந்துகொள்ள முடியாது. குன்னிராமன் நாயர் அதிசயிக்கத்தக்க கற்பனை உள்ளம் படைத்தவர். கேரள நாட்டின் இயற்கைக் காட்சிகளையும், வளம் குன்றாத கிராம வாழ்க்கையையும் படம் பிடித்ததுபோல் காட்டும் வன்மை இவரிடம் அசாதாரணமாக அமைந்துள்ளது. பாலாமணி அம்மா குடும்ப வாழ்க்கையைப் பாடுகிறவர். உள்ளம் நிறைந்த குடும்ப வாழ்க்கையி லிருக்கும் மேன்மையையும், மண வாழ்க்கையின் இன்பத்தையும் பாடும் இவர், நிகரற்று விளங்குகிறார்.

வசனத்தைச் சற்றுக் கவனிப்போம். கவிதைத் துறையைப் போல வசனத் துறை அவ்வளவு வளர்ச்சி அடையவில்லை. ஆங்கிலம் புகுந்து ஆதிக்கம் செலுத்

தியதாலேயே, அதை ஒட்டிய மலையாள வசன நடையும் ஏற்பட்டது. இந்தக் காரணத்தினால் அதற்குக் 'கடந்தகாலச் சிறப்பு' எதுவும் கிடையாது. சி. வி. ராமன் பிள்ளை, ஓ. சந்துமேனன் முதலிய சிலர் எழுதியவற்றைத் தவிர, மலையாள இலக்கியம் பெருமைப்படத்தக்க நாவல்கள் அதிகம் கிடையா. வசன நாடகங்களிலும் இதே நிலைமைதான். ஆனால், அந்நிய மொழிகளிலிருந்து மிகச் சிறந்த நாவல்களும், நாடகங்களும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. விஞ்ஞான முக்கியத்துவம் வாய்ந்த புத்தகங்கள் எழுதச் சிலர் சமீப காலமாக முற்பட்டிருக்கிறார்கள். கே. பாஸ்கரன் நாயர் இந்தத் துறையில் சிறந்து விளங்குகிறார். மலையாளம் பல சிறந்த சிறு கதை எழுத்தாளர்களையும் பெற்றிருக்கிறது. இவர்களில் சிலர் அபாரமான எழுத்து வன்மையும், சுய கற்பனையும் பெற்றுத் திகழ்கிறார்கள். தலையெடுத்து வரும் இந்தக் கூட்டத்தில் எஸ். கே. பொற்றைக்காட் முன்னணியில் நிற்கிறார்.

மலையாளிகள் தமாஷையும், வேடிக்கையையும் ரசிப்பவர்கள். ஹாஸ்யத்தை அலாதியாக ரசிப்பார்கள். பழித்தும், இடித்தும் கூறுகிற அநேக ஹாஸ்ய சிருஷ்டிகள் மலையாள இலக்கியத்தில் பரவிக் கிடக்கின்றன. தற்சமயம் கேசரி, ஈ. வி. கிருஷ்ண பிள்ளை, சஞ்சயன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். மறுமலர்ச்சி இலக்கியத்தின் தலைசிறந்த ஹாஸ்ய எழுத்தாளராகச் சஞ்சயனையே குறிப்பிடலாம். பரந்த ஞானமும், சிறந்த பண்பாடும் பெற்றிருந்த இவர், தம் பேனாவினால், சிரிப்பின் மூலமாகவே தேசபக்தியின் சிகரத்துக்கு வாசகனை அழைத்துச் செல்லக் கூடியவர். இவருடைய அகால மரணம் மலையாள இலக்கியத்துக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டத்தை உண்டாக்கிவிட்டது. கொச்சியில் சில பெண்களை ஆஸ்திரேலிய சோல்ஜர்கள் சிலர் பலாத்காரம் செய்ததை வன்மையாகக் கண்டித்து இவர் எழுதினார். இது இவருடைய கடைசிக் காலத்தில் எழுதியவற்றுள் ஒன்று. "மாத்ருபூமி"யில் வெளியாயிற்று இந்தக் கட்டுரை. மிகக் காரமாக இருந்தாலும், அவருடைய எழுத்துப் பாணி, கட்டுரையாளரையோ பிரசுரித்த பத்திரிகையையோ கோர்ட்டுக்கு இழுக்க முடியாதபடி அரசாங்கத்தைச் செய்துவிட்டது. கடைசியில், பத்திரிகையையே நிறுத்த உத்திரவிட்டது அரசாங்கம்.

மிகச் சமீபத்தில் மலையாள இலக்கியத்தில் ஏற்பட்டிருக்கும் ஒரு நிகழ்ச்சி, சில வாலிபர்கள் தங்களுக்குள் 'முன்னேற்ற எழுத்தாளர்கள்' என்று ஒரு சங்கத்தை ஸ்தாபித்துக்கொண்டிருப்பதுதான். இலக்கியத்தைச் சாதாரண மனிதனின் வாழ்வுக்குத் தகுந்த முறையில் அமைத்து, எழுத்தின் மூலம் அவனுக்குச் செய்யக் கூடிய நன்மையைச் செய்வதுதான் இவர்களின் லட்சியம். இது உயர்ந்ததே. ஆனால், இந்த முன்னேற்ற எழுத்தாளர்களில் பெரும்பாலோர், ஒன்றுக்கும் உதவாத குப்பைகளைச் சிருஷ்டிப்பதுடன், முன் குறிப்பிட்ட தோல்வி மனப்பான்மையாளர்களின் வழியில் செல்லுபவர்களாகவும் இருக்கிறார்கள். சீக்கிரமே இவர்கள் திருந்துவார்கள் என்று நாம் எதிர்பார்ப்போமாக.

ஐந்தாண்டுத் திட்டம்

●

அரசியல்வாதி

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் (1938-42) இரண்டாவது உலக யுத்தத்தினுல் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆகவே, ருஷ்ய நாட்டு வளர்ச்சி ஒரு விதத்தில் தடைப்பட்டது என்று சொல்ல வேண்டும். யுத்தம் முடிந்த பிறகு ருஷ்ய நாட்டார் தங்களுடைய நாட்டைச் சீர்படுத்தும் புனிதப் பணியில் ஈடுபட்டனர். அதற்கென புதிய ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று தயாரித்தனர். அந்தத் திட்டம் அமலுக்கு வந்து இன்று ஒரு வருஷம் ஆகிவிட்டது. அவர்கள் தயாரித்திருக்கும் திட்டத்தின்படி வருகிற 1950-ம் ஆண்டில் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கிற பொருள்கள், 1940-ம் ஆண்டில் இருந்ததைவிட 48 சத விகிதம் அதிகம் இருக்க வேண்டும். ஆனல், சென்ற யுத்தத்தின் காரணமாக மக்களின் தொகை முன்பிருந்ததைவிட அதிகம் குறைந்துவிட்டது. 1950-ல் தொழிலாளரின் எண்ணிக்கை 33,500,000-க்கு மேற்படாது என்று அபிப்பிராயப்படுகின்றனர்.

இரும்பு உற்பத்திச் சாலைகள் தாம் அதிகமாகப் பெருக வேண்டும். புதிதாக அமைக்க வேண்டியவையோ, அல்லது சீர்படுத்த வேண்டிய இரும்புத் தொழிற்சாலைகளோ அதிகம் உள்ளன. இரும்பைக் காய்ச்சி உருக்கும் சாலைகள் 200-க்கு மேல் இருக்கும். இந்தத் திட்டத்தின்படி செம்பு உற்பத்தி இப்பொழுது இருப்பதைவிட ஒன்றரை மடங்கு அதிகமாக வேண்டும். அம்மாதிரியே அலுமினியம் இரண்டு மடங்காக உற்பத்தி செய்யப்பட வேண்டும்.

யுத்த காலத்தில் நிலக்கரி உற்பத்தி அதிகமாகப் பெருக வழியில்லாமல் தடங்கல் ஏற்பட்டுவிட்டது. 1950-ம் ஆண்டு ருஷ்ய நாட்டு நிலக்கரி உற்பத்தி இரண்டு கோடி ஐம்பது லட்சம் டன்னுக்கு மேற்பட வேண்டும். கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தின்படி உக்ரேன், காகசஸ் முதலிய பாகங்கள் கைத்தொழில் மிகுந்த பிரதேசங்களாக ஆக்கப்படும்.

தொழிற்சாலை முன்னேற்றத்துக்கு இன்றியமையாத யந்திர சாதனங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் அதிகமாகப் பரவ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மோட்டார் உற்பத்தியும் அதிகரிக்க எல்லாவிதமான சாதனங்களும் அளிக்கப்படுகின்றன. 1950-ம் ஆண்டில் இரண்டு லட்சம் கார்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படலாம். நிலத்தை உழுது செப்பனிடப் பல ட்ராக்டர் (யந்திரக் கலப்பைகள்) உற்பத்தி செய்வார்கள். மோட்டார் வண்டிகளுக்கு வேண்டிய ரப்பர், செயற்கை முறைப்படி பெருத்த அளவில் உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருக்கின்றனர்.

அவர்கள் திட்டத்தில் ஆடை உற்பத்தி திருப்திகரமாக இல்லை.

ருஷ்யாவில் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை யுத்தம் முடிந்தவுடனேயே, ருஷ்யா நிறைவேற்றத் தொடங்கிவிட்டது. அதை விவரிக்கும் இக் கட்டுரை நியூஸ் ரெவ்யூவில் வெளியானதன் சாரம்.

ஐந்தாண்டுத் திட்டத்தின்படி உற்பத்தி செய்யப்படும் மற்றப் பொருள்களைக் காட்டிலும் மிகக் குறைவாக உள்ளது ஆடை உற்பத்திதான். 1950-ல் மூன்று கோடி முப்பது லட்சம் கஜம் கம்பளித் துணி உற்பத்தி செய்யலாம். ஆனால், இந்தத் துணி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யாது. மக்களுக்குத் தலைக்கு ஒரு கஜம்கூட வராது. பருத்தித் துணி ஒவ்வொருவருக்கும் 30 கஜத்திற்கு மேல் கிடைக்கும். சாதாரணத் துணி எவ்வளவு கிடைத்தாலும் பயன் இல்லை. ருஷ்யாவின் சீதோஷ்ண ஸ்திதிக்குச் சாதாரணப் பருத்தித் துணி சிறிதும் ஒவ்வாது.

ருஷ்ய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான் தங்களுடைய முக்கிய நோக்கம் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய விழுமிய நோக்கம், எளிதில், விரைவில் கைகூடுவதாகத் தெரியவில்லை. ருஷ்ய மக்கள் உணவுக்காகப் பிற நாடுகளை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. ருஷ்யாவைச் சுற்றியுள்ள சிறு நாடுகள் தாம் ருஷ்யாவின் உணவுக் களஞ்சியம். அவைகளும் சென்ற யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டுச் சீர்குலைந்திருக்கின்றன. அவைகளை முன்போல் வேலை செய்யத் தூண்டுவதற்கு நிறையப் பணமும் இடைவிடாத உழைப்பும் அவசியம். யுத்தத்தின் போது, உழவுத் தொழிலுக்கு இன்றியமையாத கால்நடைகள் அழிந்தொழிந்தன.

இந்தப் புதிய திட்டத்தின் பிரகாரம், 1950-ம் ஆண்டில் பன்னிரண்டு கோடி எழுபது லட்சம் டன் தானியம் உற்பத்தி செய்யப்படும். இது அதிகமாகத் தோன்றினாலும், உண்மையில் அப்படி இல்லை. 1940-ம் ஆண்டில் தானிய உற்பத்தி பதினொன்று கோடி எண்பது லட்சம் டன். உழவுத் தொழிலுக்குத் தேவையான யந்திரங்கள் போதாமையும், நிலத்தின் சீர்கெட்ட தன்மையும்தாம் இதற்குக் காரணங்கள். தானிய உற்பத்தி முன்னிருந்ததைவிட அதிகமாக இருந்தாலும் ருஷ்ய மக்கள் பிற நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யாமல் முடியாது. அப்படிப் பிற நாட்டு உணவுப் பொருள்கள் வந்தாலும், ஒரு ருஷ்யனுக்கு மாசம் கிடைக்கும் உணவுப் பொருள்கள் $16\frac{1}{2}$ பவுண்டு மாமிசம், $3\frac{1}{2}$ பவுண்டு வெண்ணெய், 31 பவுண்டுச் சர்க்கரை—இவ்வளவுதான்.

1950-ம் ஆண்டில் வியாபாரக் கப்பல்களும் அதிகமாகக் கட்டப்

எழுத்தாளர்கள் பிரதாபம்

"ஜேம்ஸ் மெக்னில் விஸ்ட்லரும் ஆஸ்கார் ஒயில்டும் நேற்று, வழக்கம்போல் தங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்" என்று ஓர் ஆங்கிலத் தினசரி ஹாஸ்யமாகக் குறிப்பிட்டிருந்தது.

விஸ்ட்லர் அதைப் படித்துவிட்டு, "இந்தச் செய்தி முழுவதும் உண்மை என்று நம்புகிறேன். நேற்று என்னைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?" என்று ஒரு குறிப்பெழுதி ஆஸ்காருக்கு அனுப்பினார்.

"ஆம், உண்மைதான்; உங்களைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம்; ஆனால், நான் மட்டும் என்னைப்பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்!" என்று ஆஸ்கார் பதில் எழுதி அனுப்பினார்!

—ஏஷியாட்டிக் டைஜெஸ்ட்

லீலா சிட்னிஸ்
தினமும் லக்ஸ்
டாய்லட் சோப்பினால்
அழகுபடுத்திக்கொள்ளும்
முறையை காண்பிக்கிறார்
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின் மேல் தடவுகிறேன்..
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்..
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினால் முகத்தை துடைக்கிறேன்
LUX TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்
வசீகரமான சருமம் ஒரு சினிமா நட்சத்திரத்திற்கு மிகவும் முக்கியமானது. நீங்களும் உங்களுடைய கட்டழகை மதித்தால் உங்களுக்கும் அது அவசியமே. இந்தியாவில் முன்னணியிலுள்ள சினிமா நட்சத்திரங்களின் அருமையான மேனியை காப்பாற்றும் இனிய பாதுகாப்பு முறையை ஏன உங்கள் சருமத்திற்கு அளிக்கக் கூடாது? இந்த சுலபமான அழகுபடுத்தும் முறையை நீங்களே 30 நாட்கள் கையாளுங்கள் — லக்ஸ் டாயலட் சோபபின் வெண்மையான சுகந்த நுரையை பிரியப்படுவீர்கள். அது சருமத்தை, குளுமையாகவும், மழமழப்பாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுகிறது.
LTS. 153-50-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

சிறந்த சேவை செய்து வருகிறது.

நெருப்பு, மோட்டார் விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000

கிளைகள்: பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

பிரதம ஏஜெண்டுகள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை Etc.

படும். 378 பேர்களுக்கு ஒரு தையல் யந்திரம், 194 பேர்களுக்கு ஒரு ரேடியோ என்ற விகிதப்படியே தையல் யந்திரத்தையும், ரேடியோவையும் உற்பத்தி செய்வார்கள் என்று திட்டத்தின் மூலம் தெரியவருகிறது.

தொழிலாளர்களின் கூலியைப் பற்றி இந்தத் திட்டம் தீர்மானமான முடிவைக் கொண்டுள்ளது. 1950-ம் ஆண்டில் ஒரு தொழிலாளிக்குக் கிடைக்கும் வருஷக் கூலி 300 பவுன்.

இந்தத் திட்டம் நமக்கு இரண்டு உண்மைகளைப் புலப்படுத்துகிறது. ஒன்று, தங்களுடைய நாட்டு நிலைமையை நன்கு உணர்ந்த ருஷ்யர்கள் தங்கள் நாட்டைப்பற்றித் தலைகால் தெரியாமல் புகழ மாட்டார்கள். ருஷ்ய மக்களும் மேலை ஐரோப்பியக் கண்டத்திலுள்ள மக்களைப் போன்ற உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற அதிகம் பாடுபட வேண்டும். பொது உடைமைச் சுவர்க்கத்தை நிர்மாணிக்க ருஷ்ய மக்கள் இடைவிடாது உழைக்க வேண்டும்; அப்பொழுதுகூட விரைவில் அவர்களுடைய நோக்கம் கிட்டும் என்று சொல்லுவதற்கு இல்லை. மற்றொன்று, இப்பொழுதுதான் ஆசிய கண்டத்திலுள்ள ருஷ்யப் பிரதேசங்களை முன்னேற்றமடையச் செய்யும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். ருஷ்யாவே பல துறைகளில் இன்னும் முன்னேற்றமடையவில்லையென்றால், ருஷ்ய நாட்டைச் சேர்ந்த, குளிர்ப் பிரதேசமாகிய சைபீரியாவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். ருஷ்யாவிலுள்ள பதினேழுகோடி மக்களும் நல் வாழ்வு பெற வேண்டுமானால், ருஷ்யாவின் பரந்த சமவெளிகளைச் செம்மைப் படுத்தி, வளம் பெறச் செய்ய வேண்டும். அப் பெரும் முயற்சியில் மக்கள் அனைவரும் ஈடுபட வேண்டும்.

✲

தஸ்தாவேஜு யாத்ரீகர்

இத்தாலி, ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா, பின்லாந்து முதலிய நாடுகளுடன் நேச நாடுகள் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கைதான் உலகத்திலேயே வெகுதூரம் பிரயாணம் செய்துள்ளது.

இந்த உடன்படிக்கை, பலநாட்டு அதிகாரிகளின் கையொப்பம் பெறுவதற்காக ஏழாயிரம் மைல்கள் பிரயாணம் செய்திருக்கிறது! இந்த உடன்படிக்கை அமெரிக்காவில் அச்சடிக்கப்பட்டு, அங்கேயே பைர்னஸின் கையொப்பமும் பெற்ற பிறகு, மறுபடியும் மாலட்டோவின் கையொப்பம் பெறுவதற்காக ருஷ்யாவுக்குப் பறந்து சென்றது.

அங்கிருந்து நேரே இங்கிலாந்துக்கு வந்து பெவினின் கையெழுத்தைப் பெற்றுக்கொண்டு, இப்பொழுது எம்.பிடால்ட்டைத் தேடிப் பிரான்சுக்கும் வந்திருக்கிறது!

தாராளமாய்ச் சொல்லலாம்

"தயவு செய்து" என்றோ, "வந்தனம்" என்றோ சொல்லுவதனால் எந்த விதமான அபாயமும் உங்களுக்கு நேர்ந்துவிடாது.

—சீனப் பழமொழி

தேவையும் தெய்வமும்

●

கு. அழகிரிசாமி

முன்னால் ராமகிருஷ்ண நாயுடு என்றும், இப்போது ராம கிருஷ்ணன் என்றும் கையெழுத்துப் போட்டுவரும் இந்த நாற்பத்திரண்டு வயசு நிரம்பிய குசேலப் பிறவிக்குச் சொந்த ஊர், திருநெல்வேலி ஜில்லா, டோணை வூரைச் சேர்ந்த செட்டிமேடு. கல்யாண மாகும்போது, வயசு இருபத்தாறு. பிதுரார்ஜிதத்தில் பாதிக்கு மேலேயே விழுங்கி ஏப்பம் போட்டுவிட்ட பி. ஏ. என்னும் அந்தப் பகாசுரப் படிப்பை முடித்து விட்டு, செட்டிமேட்டுக்கு வந்த இரண்டொரு வருடங்களிலேயே, சிறு கதை எழுதுவது என்னும் அளப்பரும் சலதியில் கால் வைத்துவிட்டார். ஆகவே, அவருடைய முகூர்த்தப் பத்திரிகையிலும், எழுத்தாளர் ராம கிருஷ்ண நாயுடு என்று அச்சிடப் பட்டதில் புதுமை ஒன்றுமில்லை. ஊரிலேயிருந்து கதைகள் எழுதி வந்த அந்த நாளையிலே, சுற்றுப் புறங்களில் கிடைத்த பெருமையையும் மதிப்பையும் பரிபூரண விசுவாசத்துடன் நம்பி, இருபது வயசில்தான் கதை எழுதத் தொடங்கும் ஓர் எழுத்தாளனுக்குக் கருவிலேயே ஒட்டியிருக்கும் குணமான, சொந்தப் பத்திரிகை என்ற அளகாபுரி ராஜ்யத்தையும் நடத்திப் பார்க்க வேண்டுமென்ற நியாயமான ஆசை ராமகிருஷ்ண நாயுடுவைப் பீடித்தபோது அவருக்குச் சரியாக வயசு இருபத்தைந்து.

ஆகவே, மனைவி ரங்கநாயகி, ஒன்றரை வயசுத் தவழும் குழந்தை பார்த்தா என்னும் பார்தஸாரதி, கையில் ரொக்கமாக ரூபாய் இரண்டாயிரத்துச் செல்வானம், தெய்வ பக்தி—இத்யாதி பரிவாரங்களுடன் சென்னை மாநகரத்து மஜராவாக இலங்கும் மயிலாப்பூரில் முகாம்போட்டார். வந்த இரண்டொரு மாசங்களுக்குள் தாம் முதலாளியாகவும் பிரதம ஆசிரியராகவும் அமர்ந்து ஸ்ரீ ராமஜெயம், கடவுள் வாழ்த்து முதலிய பீடிகைகளுடன் 'கலாநேயன்' என்ற 'இனிய தமிழ் மாதாந்திர சஞ்சிகை' வெளியிட்டதும், சஞ்சிகையின் எட்டாவது இதழ் வெளிவந்ததும் சஞ்சிகைக்கு அட்டமத்துச் சனி தசை கண்டு அது அத்துடன் நில்லாமல் செட்டிமேட்டில் எஞ்சி இருந்த கொஞ்ச நஞ்ச பூர்வீக ஆஸ்தியையும் பீடித்து விட்டதும் சுமார் பதின்மூன்று வருஷங்களுக்கு முந்திய கதை.

இப்போது பதின்மூன்று வருஷம் கழித்து ராமகிருஷ்ண நாயுடு ஈறு கெட்டு ராமகிருஷ்ணன் என்ற பெயரில் இலக்கிய உலகத்தில் வாங்கும் மேதா விலாசப் பட்டத்தைக் கழித்து விட்டுப் பார்த்தால், ராமகிருஷ்ணன், சைதாப்பேட்டை தர்மராஜா கோவில் தெருவில் வசிக்கும் ஓர் ஒண்டுக் குடித்தனக்காரர். மூன்றணா பஸ்செலவு தூரத்துக்கப்பா

'ஜடத்தைத் தெய்விகத் தன்மை இகழ்ந்து பேசலாம். ஆனால் மனிதனுக்கு ஏன் உபதேசிக்கிறது அதை? ஜடத்தின் உயர்வு தாழ்வுகளை ஆராய மனிதனிடம் அமைந்த மூல சக்திகள் தாம் மனிதனுக்குத் துணை புரியும். ஆகவே, ஜடத்தையோ தெய்வத்தையோ மதிப்பது அவனவன் சௌகரியத்தைப் பொருத்திருக்கிறது' என்று சொல்லுகிறது இக் கதை.

லுள்ள மவுண்ட் ரோடில், ஒரு பத்திரிகாலயத்தில் மாசம் நூறு ரூபாய் சம்பளத்தில் வேலை பார்க்கும் ஒரு கூட்டு ஆசிரியர். மக்கள் பேறு பற்றிய அபிப்பிராயத்தில் திருவள்ளுவரோடு வெட்டியும் ஒட்டியும் சமயத்துக் கேற்பப் பாடும் ராமகிருஷ்ணனுக்குப் பதினைந்து வயசு பார்த்தஸாரதியிலிருந்து ஆறுமாசப் பாப்பு வரை ஆணும் பெண்ணுமாய், செல்லுபடியானது போகப் பாக்கி ஆறு குழந்தைகள். மற்றப்படி, அவர் மனைவி ரங்கநாயகி வருஷத்தில் முக்கால் வாசிநாள் கர்ப்பிணியாக இருப்பது இந்தியாவில் அதிசயமான விஷயமல்ல......

பத்திரிகாலயத்து வேலைகளை உடனுக்குடன் நிர்ப்பந்தத்தினால் முடிப்பதைத் தவிர சம்பாவனையை உத்தேசித்து வெளியிடத்துக்குப் புத்தகம் எழுதிக் கொடுக்கும் காரியம் எந்தக் காலத்திலும் பாக்கியிருந்து கொண்டே இருக்கும். பாக்கி என்ற சொல் ராமகிருஷ்ணன் குடும்பத்தில் நித்திய வழக்கில் இருந்து கொண்டிருப்பது நியதி. வாடகை பாக்கி, கடன் பாக்கி, ... என்று எத்தனை எத்தனையோ!

ராமகிருஷ்ணனுக்கு எதிலும் நிச்சய புத்தி லவலேசமும் கிடையாது. அவருடைய அபிப்பிராயம் எதற்கும் கடவுள் பார்த்து சிரஞ்சீவிப் பட்டம் கொடுத்தால் அது ஐந்து நிமிஷத்துக்குமேல் நீடித் திராது. அவரிடம் மனித குணங்களில் சகலத்தையும் காணலாம். நேரத்துக்கு ஒன்றாகவோ இரண்டாக விரவப் பெற்றோ அவை வெளிப்படும். அன்றும்.........

அன்று புரட்டாசி மாசம் மூன்றாம் சனிக்கிழமை. வைணவ கோஷ்டிக்கு அது ஒரு புண்ணிய தினம். மாலை ஐந்து மணிக்கெல்லாம் சமையல் அறையில் ரங்கநாயகி 'உக்கரை' தயார் செய்து கொண்டிருக்க, ராமகிருஷ்ணன் இன்று திருவல்லிக்கேணிப் பார்த்தஸாரதி கோவிலுக்குப் போய் வருவோமா வேண்டாமா? என்ற சம்வாதத்தில் மனம் கவிந்தவராய் கிழிந்து போன தலையணை ஒன்றைத் தைத்துக் கொண்டிருந்தார். வயிற்றில் அஜீர்ணம்; அதனடியாகப் பிறந்த வயிற்றுவலி. இதற்கு உலாவி வருவது நல்லதுதான் என்றாலும் வண்ணான் வரும் தவணை தப்பிப்போய் விட்ட துரதிர்ஷ்டத்தினால் கிழிந்த சட்டையைப் போட்டுக் கொண்டுதான் போவது எப்படி? கழுதை (அதாவது ரங்கநாயகி) சோப்புப் போட்டுத் தப்பினாலும் எதனம் பதனம் வேண்டாம்? 'கை முழைத்த கிழிசலிலே தலை முழையுது' என்று நெஞ்சொடு கிளந்து எதிலும் நிச்சயமற்றுத் தையல் வேலையில் ஈடுபட்டிருக்கும் தருணத்தில் வந்தார் அவருடைய எழுத்துலகத்துச் சகபாடி ரகுநாதன். வரும்போதே அவர் தமக்குத்தாமே கட்டியம் கூறிக் கொண்டவராய், "என்ன ஐயா, தையல் வேலை மும்மரமாய் இருக்கு போலிருக்கே! வெளியே போகலாம் இன்னாலே வந்தேன்" என்று புகையிலை எச்சிலைத் துப்பாமல் அந்த ஒப்பாரத் திலேயே பேசிக்கொண்டு வந்தார்.

தையல் வேலை முடிந்தது. "வெளியே போறதுன்னா அப்படியே போறதுதானே? இங்கே வருவானேன் பின்னே?" என்று ஒரு ஹாஸ்ய வெடியைக் கிளப்பி விட்டு எழுந்தார் ராமகிருஷ்ணன்.

"வேய், உம்மகிட்ட உண்மையைச் சொல்றதுக் கென்ன? போகலாமின்னுதான் இருந்தேன். வண்ணான் வரவில்லை. உள்ள ஒரு சட்டையும் கிழிஞ்சி போயிட்டது. ஆகவே, வெளியே கிளம்பறது எப்படி என்ற யோசனை........."

கொஞ்சம் நிறுத்திப் பழைய படியும், "போகணும்னு போவோம். இன்னும் கொஞ்ச நேரத்திலே ராத்தரி ஆய்விடும். அதனாலே அழுக்குண்ணாலும் பாதகமில்லே..." என்று சொல்லிவிட்டு அழுக்குக் கூடையில் கிடந்த ஓர் அழுக்கான சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு புறப்பட்டார்.

ரகுநாதனுக்கு இதைப் பார்க்கச் சகிக்கவில்லை. இருந்தாலும் மனிதன் மானம் காத்துக் கொள்ளச் சிரிக்கப் படித்திருக்கிறுனே! சிரித்தார். சிரித்துக் கொண்டே, "உம், இப்பத்தான் உண்மையா ஒரு 'ஜர்னலிஸ்டு' ஆய்ட்டிங்க" என்று சொல்லிவிட்டு எழுந்தார்.

இதற்குள்ளாக, உள்ளே சமையல் அறையிலிருந்து வந்த ரங்கநாயகி சூடான உக்கரை, சூடான காப்பி இந்த இரண்டையும் கொண்டு வந்து மேஜைமேலிருக்கும் தாள் குப்பையை ஒதுக்கிவிட்டு வைத்தாள்.

"நீர் சாப்பிடும். எனக்கு அஜீர்ணம்" என்று சொல்லிவிட்டுத் தெனுலிராமன் பூனையைப் போல ஒதுங்கிப் போய் நின்று பொத்தான்களை எடுத்து தாம் போட்டுக் கொண்ட சட்டையில் மாட்டிக்கொண் டிருந்தார்.

"அஜீர்ணம் எதுக்கு?" என்று கேட்டார் ரகுநாதன்.

"அஜீர்ணம் எதனுல் வரும்?" என்று ஒரு கேள்வியைப் போட்டு மடக்கப் பார்த்தார் ராமகிருஷ்ணன்.

"கொஞ்சமாகச் சாப்பிடணும்."

"உமக்காவது இந்த ரகசியம் தெரிந்திருக்கே?"

இந்தச் சந்தர்ப்பத்தில் வெளியே வந்த ரங்கநாயகி, "வெளியே போறீகளே, அந்தச் செருப்பை ஏன் எடுத்துப் போட்டுக் கொள்ளல்லே? வாங்கின செருப்பைக் காலிலே போடாமே, வீட்டிலே வைத்துப் பூசை பண்ணவா?" என்று கேட்டாள். ஆகவே, அதற்கு முதல் நாள் வாங்கியிருந்த அந்தப் புதுச் செருப்பை எடுத்துக் காலில் மாட்டிக் கொண்டார் ராமகிருஷ்ணன்.

"என்னய்யா, அதிசயமாயிருக்கு? இதை எப்போ வாங்கினேன்? என்ன சமாச்சாரம்? எனக்கெல்லாம் சொல்லக் கூடாதா?" என்று எகத்தாளத்துடன் சாப்பிட்டுவிட்டு எழுந்தார் ரகுநாதன்.

"வெற்றிலையைப் போடுங்கோ முதலிலே. அப்புறம் 'பீச்'சுக்குப் போகிற வரைக்கும் 'செருப்'பையே 'சப்ஜெக்ட்'டாகப் போட்டுப் பேசிக் கொண்டு போகலாம்" என்று ராமகிருஷ்ணன் சொல்லிக் கொண்டே வெற்றிலைச் செல்லத்தைத் திறந்தார்.

வெற்றிலையைப் போட்டுக் கொண்டு இருவரும் புறப்படும் போது, பள்ளிக்கூடத்திலிருந்து வந்த பார்த்தஸாரதி, "நாளைக்குத்தான் ஃபைனேடே (அபராதம்) பே (சம்பளம்) கட்டுற கடைசி நாளாம். கட்டலேன்னு பேரை அடிச்சூடுவாங்க" என்பதைத் தெலுங்கிலே சொன்னுன்.

'மஞ்சிதி' (நல்லது) என்று சொல்லிவிட்டு ராமகிருஷ்ணன் ஒரு சிரிப்புச் சிரித்துக் கொண்டார். ஏதோ 'அபராதம்' என்றும் சம்பளம் என்றும் இரண்டொரு சொற்கள் ஆங்கிலப் பிரயோகமா யிருந்ததால், அந்த விஷயத்தை ஊகித்துக் கொண்டு அதைப் பற்றி மேலும் ராமகிருஷ்ணனிடம் கேட்க வேண்டாமென்று இருந்து விட்டார் ரகுநாதன்.

ராமகிருஷ்ணன், "நீர் கொடுத்து வச்சவர்தான் வேய், தனிக் கட்டை. துண்டை விரிச்சுத் திண்ணையிலே சாஞ்சிட்டா ஒரே நிம்மதி. நமக்கு எத்தனை பொறுப்பு! எத்தனை கவலை!" என்றார்.

"இங்கேயும் வாழ்றது. நீங்க தான் மெச்சணும் என் குபேர சம்பத்தைப் பார்த்து. அது சரி, செருப்பு என்ன விலை?"

"ரூ. 6—8—0"

அவ்வளவுதான். ரகுநாதன் அவருக்குச் சோணகிரிப் பட்டம் சூட்ட, ராமகிருஷ்ணன், 'கண்ட்ரோல் விலை' என்றுதானே அழுத்திச் சொல்ல, அவ்வளவில் ரகுநாதன் பெட்டிப் பாம்பாக ஒடுங்கி "ஓஹோ, என்ன அநியாய விலை?" என்று பிரலாபிக்க இந்த வழி நடைச்சிந்தோடு 'பஸ்' நிற்கும் இடத்திற்கு, அதாவது 'பஸ்' நிற்பதாக நினைத்து மனிதர்கள் நிற்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனாலும் அவர்கள் திருவல்லிக்கேணி வந்து சேர ஒரு மணி நேரம்தான் பிடித்தது.

ரகுநாதன் நாஸ்திகர் என்ற முறையில், "கோவிலுக்கு எதற்கு? கடற்கரைக்குப் போவோம்" என்று சொன்னதை ராமகிருஷ்ணன் மறுத்துக் கோவிலுக்குப் போகத்தான் வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது, அவர் ஆஸ்திகர் என்பதற்காக அல்ல. அவருக்கு வாழ்வின் கசப்பு கற்றுக் கொடுத்தவற்றுள், 'அற்பத்துக் கெல்லாம் போராடு' என்ற குணமும் ஒன்று. தவிரவும் எதிலும் நிச்சயமற்ற நிலையில் ஆஸ்திகமோ நாஸ்திகமோ அந்தந்த நிமிஷத்துக்கு எது தர்மமோ அதுதான் தர்மம். இந்த இரண்டாங் கெட்ட நிலையைப் பக்கத்திலே யிருந்து வெகு நாட்களாக அறிந்த ரகுநாதன் பேசாமல் கோவிலுக்கே அவரோடு புறப்பட்டார்.

"மனசுக்கு ஒரு சாந்தி வேணுமா இல்லையா?"

"ஆமய்யா, ஆமாம், சாந்தி தான். கள்ளுக் கடையிலே போய்ப் பட்டை பிடிச்சாலும் சாந்தி கிடைக்குமே?"

"ஆனால், எல்லாருக்கும் ஒரு மருந்து ஒத்து வருமா? கரும்பு தின்றவனுக்குக் கரும்பு ருசி, வேம்பு தின்றவனுக்கு வேம்பு ருசி."

"ஏது? இவ்வளவுக்கு இன்னிக்குத் துணிஞ்சிட்டீகளே, என்ன?"

"அதிருக்கட்டுமய்யா, பையனுக்கு நாளைப் பள்ளிகூடச் சம்பளம் கட்டணும். ஆபீஸிலே அட்வான்ஸ் வாங்கிறதை விடக் கல்லிலே நார் உரிச்சு விற்றுப் பணம் பார்த்திடலாம் போலிருக்கு. ஆபீஸ் இன்ன உடனே ஞாபகம் வந்துடுத்து, நாளைக்குக் கம்போஸுக்கு ஒரு கட்டுரை எழுதிக் கொடுத்தாகணும்..."

"நீங்கள் ஆத்திலே ஒரு காலும் சேத்திலே ஒரு காலும் வைக்கிறதை நிறுத்தி, ஆத்திலே

யும் இல்லாமே சேத்திலேயும் இல்லாமே அந்தரத்துலே நிக்கிறீகளே இப்போ? ஆபீஸ் பேச்சை வெளியிலே பேசப் படாதுன்னு சொல்வீக. இப்போ...''

'கட்டுரை எழுதியாகவில்லை யென்றால் பத்திரிகை தேதியிலே போகாதே, சொந்தக்காரர் என்ன சொல்லுவார்?' என்ற பயம் பிடித்து விட்டது ராமகிருஷ்ணனுக்கு. ஆஸ்தான கவிஞனைப் போலப் பத்திரிகாசிரியனும், அடிமைத்தனமும் சுதந்தர புத்தியும் சமனிடையில் கலக்கப் பெற்ற ஜந்துதான் என்ற ரகசியத்தை உணர ரகுநாதனுக்கு அநுபவம் போதாது......

பார்த்தஸாரதிப் பெருமாள் நகர் வலம் செய்ய எழுந்திருத்தம் ஆய்விட்டார். கோவிலுக்கு முன்னால் உள்ள புஷ்கரணியிலிருந்து, கோவிலின் கூடார வாசல் வரை ஒரே ஜனக் கூட்டம். உற்சவ மூர்த்திகளாகிய பார்த்தஸாரதியும, பட்டர் சாமியும் மனிதத் தலைகள் என்ற அக்குரோணி வெள்ளத்திலே மிதந்து வந்தனர். முன்னால் பிரபலமான நாதஸ்வரக்காரன் ஒருவன் அப்போதுதான் நாட்டை ராகத்தை வெளுத்து வாங்கி விட்டுச் சிம்மேந்திரமத்திமத்தை ஜமாய்த்துக் கொண்டிருந்தான். கூட்டத்தில் ரசிக சிகாமணிகளும், ரசிக சிகாமணிகளாகச் சொல்லிக் கொள்ளுபவர்களும் ராகத்தில் லயித்து சிரக்கம்பம செய்துகொண் டிருந்தனர். கூட்டத்தைக் கதாசிரியப் பாணியில் ஒட்டாமல் நின்று விமரிசனம் செய்யும் ராமகிருஷ்ணனும் சிம்மேந்திர மத்திமத்தில் லயித்தார்; அதன் காம்பீரியத்தில் அவர் மனசு பிடரி மயிரைக் குலுக்கி விட்டு நிமிர்ந்தது. அந்த ஒரு பெருமிதப் பார்வையோடு கூட்டத்தை அலசுப்போது ஓர் உண்மை அவருக்குப் புலப்பட்டது. அதாவது கூட்டத்தில் பார்த்தஸாரதிப் பெருமாள் வகிக்க வேண்டிய பிரதான ஸ்தானத்தைப் பெண்களின் கூட்டம் வகித்திருந்தது. ஆகவே, பார்த்தஸாரதியை யாரும் ஏறிட்டுப் பார்ப்பதில்லை, நினைத்தும் பார்ப்பதில்லை என்ற நிலையில் அவருடைய உடலையெல்லாம் மலர் மாலைகளால் மறைத்ததைப் போல முகத்தையும் மறைத்திருந்தாலும் யாரும் கவலைப் பட்டிருக்கப் போவதில்லை. பட்டர் முதல் பதினாலு வயசுப் பாலகன் வரை பெண்களைப் பார்த்துக் கொண்டு பார்க்காத மாதிரி நடித்தாலும், சங்கீதத்தைக் கேட்டாலும் கேட்காவிட்டாலும், பார்த்தஸாரதியின் கதி தன் கையே தனக்குதவி என்ற அநாதைநிலைதான். இதைக் கண்டு ராமகிருஷ்ணன் தமக்குள்ளேயே சிரித்துக் கொண்டார்.

பெண்கள் கூட்டத்தி லிருந்து வீசும் பூவாடை அஜீரணத்தால் கஷ்டப்படும் அவருக்குக் குமட்டியது. வாந்தி எடுத்து விடுமோ என்ற பயத்தினால், எப்போது இதை விட்டுப் போவோம் என்று துடித்துக்கொண் டிருக்கும் ரகுநாதனையும் அழைத்துக் கொண்டு கோயிலுக்குள் போனார்.

''சிம்மேந்திர மத்திமம் பிரமாதமாக வாசிக்கிறான். அங்கே இன்னும் கொஞ்சம் நின்று கேட்கலாம். ஆனால், புழுக்கமும் பூவாடையும் தாங்கமுடியாமல் மயக்கமாய் வருது'' என்றார் ராமகிருஷ்ணன்.

"பேசாமல் கோயிலுக்குள் போய்த் துண்டைவிரித்துப் படுங்கள் கொஞ்ச நேரம். அப்புறம் வீட்டுக்குப் போகலாம்" என்று ரகுநாதன் சொன்னார்.

கோயிலுக்குள்ளே செருப்புப் போட்டுக் கொண்டு போக முடியாத நிர்ப்பந்தத்தை உத்தேசித்து எங்கே கொண்டுபோய்ச் செருப்பைப் பத்திரப்படுத்துவது என்று ராமகிருஷ்ணனுக்குப் பெரிய பிரச்னையாகிவிட்டது. கடைசியில் ஒரு வழியாக வேறு நிவர்த்தியில்லாமல் மனித வர்க்கத்திடம் நம்பிக்கை வைத்துக் கோவில் வாசலில் குங்குமம், திருச்சுண்ணம், நாமக்கட்டி முதலிய வஸ்துக்களை வைத்து வியாபாரம் பண்ணும் ஒருவனுடைய பாதுகாப்பிலே அவன் பக்கத்தில் வைத்துவிட்டுக் கோயிலுக்குள் நுழைந்தார்கள்.

குங்குமக் கடைக்காரன் ஆக்ஷேபணை செய்யாமல் பளிச்சென்று செருப்பை அடைக்கலப் பொருளாக ஏற்றுக் கொண்டதை நினைத்து அவனுடைய நாணயத்தில் ராமகிருஷ்ணனுக்குச் சந்தேகம் தட்டிவிட்டது. 'திரும்பிப் போய்க் கேட்கும்போது இல்லேன்னு சொன்னா செருப்புக்கு வியாஜ்யம் போட முடியுமா? உம்?' என்ற கலக்கத்துடன் தான் கோயிலுக்குள் அடியெடுத்து வைத்தார்.

'நேற்று வாங்கிய செருப்பு. அது வாங்கப் பட்டபாடு! அந்த ஆறரை ரூபாயிருந்தால் பையனுக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டிவிடலாம். இல்லே, தாராளமா மூணுநாள் பசியில்லாமல் சாப்பிடலாம். வாங்கி வைச்சுக்கிட்டு இல்லேன்னா அவன் தலையை சீவிரப் போறோமா?'

இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கேயிருந்த பிச்சைக்காரக்கூட்டம் கை நீட்டிக் கெஞ்சியது.

"உங்களைப் போலக் கை நீட்டிக்கெஞ்சுறதைத் தவிர்த்துப் பாக்கி எல்லாத்தையுமே செய்துட்டோம். அதுதான் உங்களுக்கும் எங்களுக்கும் உள்ள வித்தியாசம்" என்று சொல்லிவிட்டு நடந்தார் ராமகிருஷ்ணன்.

உள்ளே —

நின்ற திருக் கோலத்தில், குருக்ஷேத்திரத்தில் சாரத்யம் செய்த நாளில் முகத்தில் கணைகள் துளைத்த தழும்புகளோடு வெற்றி வீறுப்பில் மீசை துடிக்க நிற்கும் பார்த்தஸாரதிப் பெருமாள். அவருக்கு முன்னுக, பரஸ்பரம் நமக்குத் துணை நாம் தான் என்று சொல்லாமல் செய்து காட்டும் பட்டர் ஐயர். அவர் சுவரில் சாய்ந்து தூங்காமல் தூங்கும் சுகத்தில் ஆழ்ந்திருந்தார்.

கர்ப்பக் கிரஹத்துக்குள் —வைணவ பாஷையில் கருவில்லத்துள்—நுழைந்ததும், தூக்கத்திலிருந்து துள்ளி யெழுந்து வந்த பட்டரிடம் 'அர்ச்சனைக்கு ஒன்றும் கொடுக்கவில்லை' என்று சொல்லி விட்டனர் இருவரும்.

ராமகிருஷ்ணன் ஒப்புக்குத்தான் கை கூப்பித் தொழுதாரே ஒழிய அவர் மனசு கடையில் வைத்துவிட்டு வந்த செருப்பில் தான் கவிந்திருந்தது.

'கடைக்காரன் 'செருப்பைக் கண்டது யார்? உன்னைக் கண்டது யார்?' என்று சொல்லி விட்டால்?'

இதுதான் அவர் மனசைப் பிசைந்துகொண் டிருந்தது.

ரகுநாதன், மாட்டுக்குத் தண்ணீர் காட்டுபவன் அது குடித்து

முடியும் மட்டும் பக்கத்தில் காத்திருப்பதுபோல, அருகில் 'வெறுமெனே' நின்றுகொண்டிருந்தார்.

கர்ப்பக் கிரஹத்திற்குள் நிலவியிருந்த பூவாடை, கற்பூர நாற்றம், விளக்கின் எண்ணெய் நெடி எல்லாம் 'ஹிப்னடிஸம்' செய்வது போல மயக்கித் தம்மைக் கீழே விழத்தட்டிவிடுமோ, என்று ஒரு கணம் நடுக்கலெடுத்தது ராமகிருஷ்ணனுக்கு. அடுத்த க்ஷணத்தில், 'அடே! நீ உண்மையாகக் கும்பிடவா செய்கிறாய்?' என்று இடி முழக்கம்போல ஒரு சப்தம் ராமகிருஷ்ணனின் செவிகளைப் பிய்த்து விட்டது.

ரகுநாதன் எதிர்பாராத விதமாக, ராமகிருஷ்ணன் மயக்கமாகிக் கீழே திட்டென்று விழுந்தார். அவ்வளவுதான், காற்ரோட்டமாக இருக்க வேண்டுமென்று அவர் ராமகிருஷ்ணனுடைய உடம்பை வெளியே தூக்கியும் தூக்காமலும் தாங்கி இழுத்துக் கொண்டுவர, அங்கே இருந்த நாலைந்துபேர் வந்து கூடிவிட்டார்கள்.

"தண்ணீர்! தண்ணீர்!"

தண்ணீர் கொண்டுவர ஒருவன் ஓடினான்.

அவன் வர நாலைந்து நிமிஷங்கள் பிடிக்கலாம்.

ஆனால் கனவுலகத்துக்கு நிமிஷங்கள் என்றால் என்ன? யுகங்கள் என்றால் என்ன?

* * *

பார்த்தஸாரதி பார்த்தனுக்கு உபதேசம் செய்த நாளில் விஸ்வரூபம் எடுத்து நின்றதைப் போல விண்ணும் மண்ணுமாய் நிற்கிறார்.

அவருக்கு முன்பாக எதிரியிடம் அகப்பட்ட யுத்த வீரனைப் போலக் கை கட்டிக் கொண்டு நிமிர்ந்த பார்வையுடன் நிற்கிறார் ராமகிருஷ்ணன். அவர் மனக் குகையின் ஒரு மூலையில் சிம்மேந்திர மத்திம ராகம் மேல் பஞ்சமத்தைத் தொட்டுத் தனக்குத் தானே வீர்யத்துடன் ஒலி செய்கிறது. அவர் நெஞ்சிலே ஏதோ நெருப்பு தழல் விட்டு எரிந்து சுழலுவது அவரது பூத சடலத்தை ஊடுருவி வெளியே தெரிகிறது.

"தெய்வ சந்நிதியில் வந்து நின்றும் உன்னை இந்தச் சஞ்சல புத்தி விடவில்லையே? செருப்பில் உன் மனம் கவியும்போது என்னை ஏன் தொழுவதாக நடிக்கிறாய்?"

ராமகிருஷ்ணன் இன்னும் சற்று ஏறிட்டு நோக்கினார்.

"ஏன் பேசாமல் நிற்கிறாய்? சொல்."

"நான் நடிக்கவில்லை. நான் செய்தது உண்மை. அதைச் செய்யத்தான் என்னால் முடிந்தது. நான் வேண்டுமென்றா செருப்பில் கவனம் செலுத்தினேன்?"

"பின்?"

"அந்தச் செருப்பு வாங்குவதற்கு தங்களைப் போல ஆயிரம் தெய்வங்கள் இருந்தும் நான் என்ன கஷ்டப்பட்டேன் தெரியுமா? தாங்கள் ஜடத்தை இகழலாம், ஒதுக்கலாம். நான் ஜடம்; நான் வாழும் உலகம் ஜடம். அதில் மனிதன் நினைத்தால் ஜடத்தை வைத்தே உங்கள் வைகுண்டத்தையும் ஆக்குவான் அளகாபுரியையும் ஆக்குவான்; அதிலே மனம் பற்றிப் பரிபூரணத்துவத்தை எட்ட முடியும்

Godrej ગોદરેજ گودرج கோத்ரெஜ்

'CHAVI' BRAND · சாவி மார்க்

டாய்லெட் (ஸ்னான) ஸோப்புகளால்

சுகாதாரம் - ஆரோக்யம் - அழகு

உங்கள் தேகத்தை சுத்தமாய் வைத்துக்கொள்ளவும், தேகாரோக்கியத்தை மிளிரச் செய்யவும், அழகின் நிரந்தரமான வசீகரமும் சுத்தமும் கூடிய தாவர எண்ணெய்களும் மூலிகை சாமான்களும் சேர்க்கப்பட்டு, அத்துடன் புஷ்பங்கள் பூத்துத்தொங்கும் வயல்களையும் பள்ளத்தாக்குகளையும் ஞாபக மூட்டக்கூடிய நறுமணம் வீசும் வாசனைகளும் சேர்க்கப்பட்டுள்ள கோத்ரெஜ் டாய்லெட் (ஸ்னான) ஸோப்புகள், சுத்தம் செய்யவும் உங்களுக்கு புத்தம் புதிய உணர்ச்சியைக் கொடுக்கவும் இயற்கையான சர்ம அழகை அளிக்கவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன.

கோத்ரெஜ் ஷேவிங் ஸோப்பும், (ஸ்டிக் ரவுண்டும்) கூட செய்கின்றனர்.

கோத்ரெஜ் ஸோப்ஸ், லிமிடெட்

மதராஸ்: 164, பிராட்வே ; **எர்ணாகுளம்:** 9/278, ஜெவ் தெரு.

உங்கள் குழந்தையின் ஜீர்ணசக்தி குன்றியிருப்பதாக

தெரிந்தால்

உடனே கவனம் செலுத்த வேண்டும். அது சரல் சம்மந்தமாய் இருக்கலாம். ஒருக்கால் பெருக்கத்திற்கும் காரணமாய் இருக்கலாம்.

ஆரம்ப அறிகுறிகளை கவனிக்கவும்

அடிக்கடி ஜுரம் ஏற்படுதல், மலச்சிக்கல், அதிக மலப்போக்கு, பசியின்மை, வயறு பொருமல், பொதுவாக சோர்ந்திருத்தல், அடிக்கடி சிறுநீர் செலுத்தல்.

உடன் கவனிப்பு காப்பாற்றும்

வியாதி குறிகள் கண்ட உடனே ஜம்மியின் லிவர் க்யூர் கொடுங்கள். அப்படிச் செய்வது உங்கள் கவலையை நீக்கி, பலஹீனத்தைக் குறைத்து, வியாதியை முற்ற விடாமல் செய்து, பின்னிட்டு ஏற்படக்கூடிய அபாயத்தைத் தவிர்க்கும்.

ஜம்மியின்

லிவர்க்யூர்

உபயோகியுங்கள்

குழந்தையின், சரல் குலைக்கட்டுக்கு ஜம்மியின் லிவர் க்யூர் உபயோகியுங்கள். [illegible]

ஜம்மி வெங்கட்டரமணய்யா & சன்ஸ்

[illegible]

[illegible]

அற்புத மருந்துகள்

மூலிகைகளிலிருந்து தயாரிக்கப் படுபவை. பயனில்லையேல் பணம் வாபஸ்.

செமினியா :—(வைடமின் டானிக்) வீரியத்திற்கும், மன சுறுசுறுப்புக்கும் கை கண்ட மருந்து. கெட்ட ரத்தம், சருமக் கோளாறு, தூக்கமின்மை, மன, தேகச் சோர்வு முதலியவற்றுக்குத் தலை சிறந்த மருந்து. நரை மயிரையும் நிரந்தரக் கறுப்பாக்குகிறது. ஒரு முழு முறைக்கு ரூ. 7-0-0

குஷ்டம், வெண்குஷ்டம் :—இதை உபயோகித்து ஹக்கீம்ஸ் டாக்டர்கள் நாட்டு வைதியர்களால் குணப்படுத்த முடியாத நோயிலிருந்து சுகம் பெறலாம். விலை ரூ. 3-0-0

நரை மயிர் நிவாரணி :—ஆயுர் வேத முறையால் தயார் செய்யப் பட்ட எங்கள் பிரைனியா வாசனைத் தைலம் உங்கள் நரை மயிருக்கு இயற்கையான கரு வர்ணத்தை அளிக்கிறது. மூளைச் சோர்வை ஓட்டி ஞாபக சக்தியை விருத்தி செய்கிறது. நரை மயிர் கொஞ்சமாக இருந்தால் ரூ. 2-8-0 அதற்கு மேற்பட்டிருந்தால் ரூ. 3-8-0 எல்லாம் நரையாயிருந்தால் ரூ. 5-0-0

N. B. பார்சலில் எங்கள் பார்மஸியின் பெயர் இல்லா விட்டால் அதை வாங்காதீர்கள்.

பீகார் மாகாண மாஜி மந்திரி குரு ஷலாய்லால் எழுதுகிறார் :

பிரைனியா தலை மயிர்த் தைலத்தை உபயோகித்து, பயனடைந்தேன். குணப்படுத்தும் தன்மை நிறைய இருக்கும் இம் மருந்து மூளையைக் குளிர்ச்சியாக இருக்கச் செய்வதுடன் தலை வலியையும் உடனே போக்குகிறது. குளித்த பிறகும் கூடத் தைலத்தின் மணம் போவதில்லை. இதைப் போன்ற தைலத்தை நான் பார்த்ததே இல்லை. நரை மயிருக்கு இது மிகவும் உபயோகமானது.

SHRi AYURVEDIC PHARMACY,
P. O. No: 36, Katrisari
(Gaya), India

எனக்கு, என்னைப் போன்ற மனிதனுக்கு வேண்டியது செருப்பு.''

"உன் கண்ணுக்குத் தெய்வம் தெரியவில்லை; செருப்பல்லவா உனக்கு விஸ்வரூபம் எடுத்துக் காட்சியளிக்கிறது?''

"ஆம். திரும்பிப் பாருங்கள். இரண்டு செருப்புகள் அங்கே இருக்கின்றன. விண்ணுமண்ணுமாய்த் தங்கள் விஸ்வரூபம் நீண்டு பரந்து இருந்தாலும் உங்களைவிடப் பெரிதாகவும், பண்டு சிவனுடைய பாதமும், முடியும் தேடிச் சென்றது போல வராக அவதாரம் எடுத்துச் சென்றாலும் என் செருப்புகளின் முதல், அந்தங்களைத் தாங்கள் பார்த்துவர முடியும் என்று தோன்றவில்லை'' என்றதும் கோபாவேசத்துடன் திரும்பிப் பார்த்தார் பார்த்தஸாரதிப் பெருமாள்.

"செருப்பா? அது எங்கே? எங்கே இருக்கின்றன அவை?''

"தரையில் கால் பாவாத உங்களுக்கு அந்தச் செருப்பு எப்படித் தெரியும்? தேவைப்பட்டால் அல்லவா உங்கள் பார்வைக்கு அது தென்படும்? எனக்கு அதன் மதிப்புத் தெரியும்......நான் தெய்வத்தை நிந்திக்கவில்லை; செருப்பைப் போற்றவும் இல்லை. அதற்கு மனிதனுக்குச் சக்தி ஏது? துரும்பிலிருந்து தூண் வரை நல்லது இது, கெட்டது இது என்று மனிதன் தராதரம் பார்த்து மதிக்கிறான் என்றால் அது பொய். எதையும் மனித உணர்ச்சி ஒன்று போலவே மதிக்கிறது. மதித்தல் என்ற காரியம் யந்திர கதியில் தானே உற்பத்தியாகிக் கொண்டு வரும்போது, உலகத்து வஸ்துக்கள் மனிதனிடம் எவ்வளவு அநுதாபம் கொண்டுள்ளனவோ அந்த அளவுக்கு அவனிடம் அந்த மதிப்பு என்ற பொருளை அவை பிரித்து எடுத்துக் கொள்ளுகின்றன. அதற்கு மனிதன் என்ன செய்வான்?''

பார்த்தஸாரதிக்கு எப்படியோ கோபம் தணிந்தது. நேரமெல்லாம் கோபம் கொண்டிருக்க துர்வாசருக்கும் முடியாதே! யோசனை செய்தார். கீதா போதகனோடு தத்துவ சம்வாதம் செய்ய வந்த மானிடத் துரும்பாகிய இந்த ராமகிருஷ்ணனை ஒதுக்கித் தள்ளினாலும், அவன் நெஞ்சுக்குள் எரியும் நெருப்பை அவிக்க வேண்டியது தம் கடமை என்று அவருக்குக் கருணை பிறந்தது, ஆனால், ராமகிருஷ்ணன் மேலும்.

"நீங்களும், நானும், இந்த வையத்துப் பிற உயிர்களும், ஜடமும் ஒரே ஆத்ம விகாசத்தின் சொரூபங்களாக இருக்கும் போது மேல் கீழ் என்று தத்துவ ரீதியில் தராதரம் கற்பிக்க இயலுமோ? நீங்கள், நான், செருப்பு—இதில் யாருக்கு யார் விசேஷம்? அவசியம் இருப்பவனுக்குத் தெய்வம் தேவைப்படலாம், இல்லை, செருப்பே தேவைப்படலாம். தேவையில் பிறக்கும் மதிப்புக்கு, வேறு அடிப்படை ஏது?''

"சரி, உனக்கு வேண்டியது தான் என்ன? வாழ்வில் கசந்து போயிருக்கும் உன்னுடைய மனத் தழலை அவிக்க உனக்கு என்ன வேண்டும்?''

ராமகிருஷ்ணன் சிரித்தார்.

"எனக்கு என்னதான் கொடுப்பீர்கள்? முன்னால் பாரதம் கை செய்து, குருக்ஷேத்திரப் போரில் தர்மத்தை நிலை நாட்டி, தாங்கள் கல்லினுள் தேரை முதல் சகல

ஜீவன்களுக்கும் ஒன்று போல் படியளந்து விட்ட பின்னும், ஏன் உலகில் இப்படி இன்று உயர்வு தாழ்வுகள் போரிட வேண்டும்? இன்று என் குறை நிறைவேறி விட்டால் உலகின் குறை என்றென்றைக்கும் நிறை வேறி விட முடியுமா?''

பார்த்தஸாரதி என்ன நினைத் தாரோ, பேசாமல் திரும்பிப் போய் விட்டார். அப்போது அவருடைய பூதாகாரமான காலுக்கும் செருப்பைப் போல ஏதோ தட்டுப்படவே பாம்பணை யில் கண் வளரும் அவருக்கும் பாம்பை மிதித்து விட்ட பயம் குலுக்கியது.

'கடவுளிடம் நாம் வெற்றி பெற்றால்தான் என்ன? தோற்று விட்டால்தான் என்ன? சூரியன் கிழக்கேதான் உதிக்கப் போகி றான். மேற்கேதான் அஸ்தமிக் கப் போகிறான்......'

என்று என்னென்னவோ யோசித்தவராய், செருப்பை மாட்டிக் கொள்ளுவோம்...... இது என்ன? 'ஸ் ஸ்' என்றவார்த் தைகளை முணுமுணுத்ததும் ரகு நாதன், "ஒண்ணுமில்லே ஐயா ஒண்ணு மில்லே. உடம்புக்குச் சுகமில்லாட்டா பேசாமே வீட் டிலே கிடக்காமே கோவில் கோவில் இன்னு வந்து என்ன புதையலை எடுத்தீர்களோ?'' என்று சொன்னார்.

ஓலை விசிறியின் காற்று ராம கிருஷ்ணனுக்குச் சுகமாக இருந் தது. யாரோ ஒருவர் கொடுத்த காப்பியை அவர் வாங்கிச் சாப்பிடும்போது,

"என்ன, புலப்பத்திலும் செருப்பு செருப்புன்னு கிடக் கிறீக! செருப்பை என்ன நாயா தூக்கிக் கிட்டுப் போகுது?'' என்று சிரித்தார் ரகுநாதன்.

✻

இதைச் செய்யுங்கள்

காலையில் சூரிய உதயத்திற்கு முன்பு எழுந்திருந்து, மரப்பட்டைப் பொடியினால் பல் துலக்கி, உடல் முழுவதும் எண்ணெய் தடவி ஸ்நானம் செய்ய வேண்டும். வேலைக்குப் புறப்படுமுன் கொஞ்ச தூரம் நடந்துவிட்டு, எளிய ஆகாரத்தைப் புசிக்க வேண்டும். வேலை செய்ததுபோக ஒழிந்த காலை நேரங்களில், கேளிக்கை இடங்களுக்குச் சென்று, கசரத், குஸ்தி முதலியவைகளில் ஈடுபட வேண்டும். மாலை வேலை முடிந்ததும், காற்றோட் டமாகப் பசுமரத் தடியில் சற்று இளைப்பாறிவிட்டு, வீடு வந்து சேர வேண் டும். சூரிய அஸ்தமனத்திற்குள் இராப் போஜனத்தை முடித்துக்கொள்ள வேண்டும். பழங்கள், ரொட்டி, மீன், இறைச்சி இவைகளுடன் கூடிய ஆகாரத்தைத் திருப்தியான அளவு சாப்பிட்டானதும், கொஞ்ச தூரம் உலாவிவிட்டுச் சீக்கிரம் படுக்கைக்குத் திரும்பிவிடவேண்டும். இத்தகைய வாழ்க்கை வாழ்பவனுக்கு நோய் ஏன் வருகிறது?

—டியோகிளிஸ்

குறை அங்கே

உலகத்தின் பெரிய பெரிய கருத்துக்களையெல்லாம் வரவேற்கும் அளவுக்கு மனித உள்ளம் பண்படாதவரை, அந்தக் கருத்துக்கள் பயனற்றே போகின்றன. உயர்ந்த வகையான கருத்துக்கள் சின்ன உள்ளங்களிலே இடம் பெற முடியாதுதான். இதை உணர்ந்து கொள்ளாத சீர்திருத்தவாதி திரும்பத் திரும்ப ஏமாற்றமே அடைகிறான்.

—ஸ்பெக்டேட்டர்

வெள்ளைக்கார திவான்

●

அரு. சொக்கலிங்கம்

ஒரு மகாமகத்துக்கு மேலாகப் பதவி வகித்து வந்த புதுக்கோட்டை திவான் சர் அலெக்ஸாண்டர் டாட்டன் ஹாம் துரையைப் பற்றிக் கேள்விப் பட்டீர்களா? இவர் பெயரைப் பார்த்தாலே அசல் இங்கிலிஷ்காரர் என்று தெரியும். அதோடு எம். ஏ. இன்னமும்கூட ஐ. சி. எஸ். அரசியல் இலாகாவுக்குப் பாத்திரமானவர். அப்படியிருந்தும் பிச்சைக்காரர்கள்மீது அன்பு கொள்பவராக இருந்தால் ஆச்சரியந்தானே? இதைக் கண்டால் பிச்சைக்காரர்கள் விடுவார்களா? டாட்டன்ஹாம் துரையின் மோட்டார் நின்றால் போதும், பிச்சைக்காரர்கள் சூழ்ந்து கொள்வார்கள். கையிலிருக்கும் பணத்தைப் பகிர்ந்து கொடுத்துவிட்டுத்தான் காரில் ஏறுவார். தலைக்கு ஒரு ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கும். சில பிச்சைக்காரர்களுக்கு மாசச் சம்மானம் ஏற்படுத்தியிருக்கிறார். இந்தத் திவான் காலத்தில் பிச்சைக்காரர்கள் தொல்லையை ஒழிப்பதற்குச் சட்டம் வேறு நிறைவேறியிருக்கிறதென்றால் அதுவும் ஆச்சரியந்தானே? பதினேழு சகோதரர்களுடன் புத்திரபாக்கியம் நிறைந்த குடும்பத்தில் பிறந்த திவான் அறுபத்தேழு வயசுவரைப் பிரம்மசாரியாகவே காலங்கழித்தார்.

அவருக்கு இந்த உலகத்தில் பிடிக்காத விஷயம் ஒன்று உண்டானால், அது சப்தம் என்ற விஷயந்தான். சப்தத்தோடு மட்டுமல்ல, அதைச் சேர்ந்த வர்க்கங்களும் அவருக்குப் பிடிக்காது. கழுதை முதல் வக்கீல் வரை சில சமயம் அவருக்குப் பிடிக்காதென்றால் சப்தத்தி லுள்ள வெறுப்பின் காரணந்தான். அவர் அடிக்கடி மோட்டாரில் சவாரி செய்பவராயிருந்தும் மோட்டார் ஹாரன் சப்தம் கேட்கக் கூடாது. அவருடைய பங்களாவை ஊடுருவிப் போகும் கார்களை எச்சரிக்க ஒரு போலிஸ் எப்பொழுதும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். மழைக் காலத்தில் பங்களாவைச் சுற்றியுள்ள தவளைகளைப் பிடித்து வருபவர்களுக்குச் சம்மான மளிப்பார். பங்களாவுக்குச் சமீபம் வரும் கழுதைகளைச் சத்தம் போடுமுன் பிடித்துத் தூரத்தில் கொண்டுபோய் விடுவதற்காகப் போலிஸ்காரர்கள் உஷாராக இருப்பார்கள். அவர் காதுக்குக் கேட்கும் தூரத்திற்குள் கழுதையும் தவளையும் சுதந்தரமாகக் கத்த முடியாது. அது போலவே அவர் அமர்ந்து விசாரணை செய்யும் நியாய சபையில் வக்கீல்கள் படாடோபமாகச் செய்யும் விவாதங்களை அநுமதிக்க மாட்டார். தந்திரசாலியான வக்கீல்கள் எழுதிக் கொடுத்து விடுவதுதான் வழக்கம். அப்படி யில்லாமல் வக்கீல்கள் ஒத்துழையாமை ஆரம்பித்திருந்தால், அவர்களுக்கும் போலிஸார் நியமிக்கப் பட்டிருப்பார்கள். நல்ல வேளையாக வக்கீல்கள் பாக்கியசாலிகள்.

புதுக்கோட்டை திவானாக இருந்த டாட்டன்ஹாம் துரையின் குணாதிசயங்கள் படிக்க ரசமாயிருக்கின்றன. அவருடைய போக்கே அலாதி.

ஒலி பெருக்கியுடன் நடக்கும் பொதுக் கூட்டங்கள் இரவு ஒன்பது மணிக்கு மேல் நடந்ததில்லை. கல்யாண ஊர்வலங்கள் மேளக் கச்சேரிகள் பதினொன்று மணிக்கு மேல் அனுமதித்த தில்லை. சினிமாக் கொட்டகைகளில் சத்தத்தைக் குறைத்துத்தான் காட்ட வேண்டும். அவ்வளவு கண்டிப்பான அமல். புதுக்கோட்டை டவுனில் மணியை அறிவிக்கும் மின்சாரச் சங்கு பகல் பன்னிரண்டு மணிக்கும் இரவு எட்டு மணிக்கும் ஊளை இடுவதை மட்டும் விட்டதே இல்லை. அந்தச் சமயம் துரை காதில் பஞ்சைக் கெட்டியாக வைத்து அடைத்துக் கொண்டுவிடுவார். இதெல்லாம் அரசியல் இலாகாவின் கௌரவத்தைக் காப்பாற்றவோ, ஐ. சி. எஸ். பதவியின் காரணமாகவோ அவர் செய்ய வில்லை. சத்தத்தை வேண்டாது ஒதுக்கும் அவருடைய காதுகளின் நுண்ணிய ஜவ்வுகள், ஒலியைப் பதின் மடங்கு அவருக்குப் பெருக்கிக் காண்பிப்பதால் ஏற்படும் வேதனையைப் பொறுக்க முடியாமல்தான், துரை இவ்வளவு கண்டிப்பாயிருந்தார். சத்தத்தால் நிம்மதியற் றிருந்த திவான் சாஹேபும் இந்த டிசம்பர் மத்தியிலிருந்து நிம்மதியாக ஆழ்ந்த நித்திரையை அடைந்து விட்டாரென்றால் பாருங்களேன், காலனின் வேடிக்கையை! இனி அப்படி ஒரு திவான் புதுக்கோட்டைத் தனி அரசுக்குக் கிடைப்பாரா என்று எல்லாப் பிச்சைக்காரர்களும் அழுது மயங்குகிறார்கள்.

✲

ஏதாவது ஒன்று

வாழ்க்கையிலே, செய்வதற்கும், காதலிப்பதற்கும், நம்பிக்கை கொள்வதற்கும் ஏதாவது ஒன்று இருக்கவேண்டும். இதுவே இன்பத்துக்கு அடிப்படை.

—தி வோர்ல்டு

விளம்பரப் பித்தம்

பி. டி. பர்னம் என்பவர் தன்னைப்பற்றி விளம்பரப்படுத்திக்கொள்வதில் அதிகச் சிரத்தை காட்டுவார். அவர் மரணத் தறுவாயில் இருக்கையில், அவர் இறப்பதற்கு முன்பே அவருடைய இறப்புச் செய்தியைப் பார்க்க விரும்புவாரா என்று 'ஈவினிங் சன்' என்ற பத்திரிகையின் நிருபர் கேட்டார். 'அது அவருக்குப் பெரு மகிழ்ச்சியூட்டும்' என்று அவருடைய காரியதரிசி சொல்லவே, அவருடைய மரணச் செய்தியும் பிரசுரிக்கப்பட்டது. மறுநாள் பர்னம் தம்முடைய மரணச் செய்தியை மகிழ்ச்சியோடு படித்துவிட்டே இறந்தாராம்!

—ஈவினிங் நியூஸ்

சந்தர்ப்பம் கிடையாது!

சர்ச்சில் ஒரு சமயம் 'கன்சர்வேடிவ்' கட்சியி லிருந்து 'லிபரல்' கட்சிக்கு மாறினார். அவருடைய சகாக்கள் அனைவரும் மனமுடைந்து போயினர். ஓர் இளம் பெண் சர்ச்சிலைப் பார்த்து, "உங்களிடம் எனக்குப் பிடிக்காத விஷயம் இரண்டுதான்" என்றாள்.

"என்ன அது?" என்றார் சர்ச்சில்.

"உங்களுடைய மீசையும், அரசியல் கொள்கையும்தான்" என்றாள் அந்தப் பெண்.

"ஆனால், அந்த இரண்டின் அருகிலும் வர உனக்குச் சந்தர்ப்பமே கிடையாதே!" என்றார் சர்ச்சில்.

—எவ்வரிபடிஸ்

2000 வருஷங்களுக்குமுன்
முன்னோர்கள் சந்தனத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின் "ரோல்ஸ் ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தனத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தனத்தைலம் இன்றியமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனுண்ட காலத்தின் உண்மை என்றும் உண்மையே.
ஸ்ரீ
மைசூர்
சந்தன சோப்
BANGALORE
சந்தனம் குறிப்பது குற்றமற்ற குணமே
மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

மனோஹரன் ஸ்டோர்ஸ்

தந்தி:
"HARANTALKY"

181, கீழ வாசல்
மதுரை

போன் நெ.
219

கீழ்க்கண்ட ஜவுளிகளின் ஸ்டாக்கிஸ்டுகள்:

மோஹன் ராம் கம்பெனியாரின் சேலைகள், வேஷ்டிகள்

✲

M. K. C. "சிங்கம் மார்க்"

பனியன்கள், ஸிலிப் ஓவர்ஸ், அண்டர்வேர்ஸ் சின்டஸ் வகையரா

✲

சென்னை இன்டோ-லங்கா டிரேடர்ஸின்

30-இஞ்ச், 44-இஞ்ச் டோரியா வாயல்கள்

(சுத்த கைத்தறி ஜவுளிகள்) கண்களைக் கவரும் நவ நாகரிக டிஸைன்களின் பற்பல ரகங்களில் கிடைக்கும்

✲

மொத்த & சில்லரை ஆர்டர்களுக்கு எழுதவும்

சக்தி • மாத வெளியீடு

தனிப் பிரதி 'தபால்'	0 8	ஆறு மாதம்	3 8
ஒரு வருஷம்	6 0	2 வருஷம்	11 0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப்பிரதி	0 9	ஆறு மாதம்	4 0
ஒரு வருஷம்	7 0	2 வருஷம்	13 0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப்பிரதி	0 10	ஆறு மாதம்	4 8
ஒரு வருஷம்	8 0	2 வருஷம்	15 0

SHAKTI KARYALAYAM :: MADRAS—14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

மனத்திலே இளமை

ஜார்ஜ் லாட்டன்

'வயசாகிக்கொண்டு வருகிறது' என்றகவலை உங்களுக்கு எந்த நாளில் வேண்டுமானலும் திடீரென்று ஏற்படும். வயசானவர்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து, மனோ தத்துவ நிபுணனாக இருக்கும் நான், இதைப்பற்றிச் சில முடிவுகள் செய்து வைத்திருக்கிறேன். என்னிடம் சிகிச்சை செய்துகொண்டவர்களில் பலர் இன்றைக்கும் — என்றைக்குமே — தங்களுடைய முப்பதாவது வயசிலேயே இருக்கிருர்கள். வயோதிகத்தைப் பற்றிய கவலை அவர்களுக்குக் கிடையாது.

என்னுடைய ஆலோசனையைக் கூறுமுன், இது சம்பந்தமான சில முக்கிய விஷயங்களையும் உங்களுக்குத் தெளிவுபடுத்துவது நல்லது. உங்களுடைய பிறந்தநாளைக் கொண்டு உங்கள் வயசை அளவிடக்கூடாது. காலக் கணக்குப்படி வயசான ஒருவன், உடற் கூறின்படி இளமையுடனேயே இருப்பது சாத்தியம்தான். உடற்கூறுகளின் வளர்ச்சிப்படி பார்த்தால், 25 முதல் 30 வரை மாறுவதுபோல் 30-லிருந்து 40 வரை மாறுவது கிடையாது.

பஞ்சாங்கக் கணக்கின்படி ஏற்படும் வளர்ச்சி தவறு என்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. உங்களுடைய பல்வேறு உறுப்புக்கள் பல்வேறு காலங்களில் மூப்பை அடைகின்றன. பத்தாவது வயசில் உங்கள் கண் மூப்பு அடைகிறது; 20-வது வயசில் காதுக்கு மந்தம் வரும். 30-வது வயசுக்குள் உங்களுடைய தேகபலமும், சுணைப்பும், வேகமும் குறைந்துவிடுகின்றன; உடலின் ஆக்கும் சக்தியும் குறைகிறது.

ஆனல், 50-வது வயசில்கூட உங்கள் மனம் வளருகிறது; இளமையுடனும் இருக்கிறது. 60-வது வயசுக்குப் பிறகுதான் மூளை கிழடு தட்டுகிறது. அறுபதிலிருந்து எண்பது வரை மனோபலம் மிகவும் மெதுவாகக் குறையத் தொடங்குகிறது.

எண்பதாவது வயசில்கூட நீங்கள் முப்பதாவது வயசில் இருந்த மனோபலத்தைக் கொண்டிருக்க முடியும். வயசானவர்களின் ஞாபக சக்தி சற்றுக் குறையவே செய்கிறது. ஆனல், கற்பனைச் சக்திக்கு வயசே கிடையாது; வயசாக ஆக, ஆத்ம பலம் வளர்கிறது. நம்முடைய பகுத்தறிந்து, முடிவு கட்டும் திறன் அநாயாசமாகப் பெருகுகிறது. அநுபவம் காரணமாக, மிகக் கஷ்டமான பிரச்னைகளையும் சுலபமாகத் தீர்க்க முடிகிறது. சுருங்கச் சொன்னல், நாம் ஞானம் அடைகிருேம். அதனல்தான், பழுத்த வக்கீல், பழைய வைத்தியர், அநுபவம் மிகுந்த தொழிலாளி எல்லோரும், வாலிபர்களான சகத் தொழிலாளிகளை எதிர்த்து, வெற்றி காண முடிகிறது.

உணர்ச்சி உத்வேக மற்ற மனிதன் உண்மையான இளமையுடையவனல்ல; உத்வேகமடை

இளமை உணர்ச்சியுடனிருக்க, காய கல்ப சிகிச்சையும் மருந்து டப்பாக்களும் இல்லாமல், காசுச் செலவில்லாத ஒரு முறையைச் சொல்லுகிருர் கட்டுரையாளர். இது, ஓர் அமெரிக்கன் மாகஸின் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையின் சாரம்.

யாத ஆண் பெண்கள் சற்றுச் சீக்கிரமாகவே மூப்பை அடைந்து விடுகிறார்கள். பிற்காலத்தில், இரண்டாம் முறையாக இளமையை அடையச் சிலர் ஏங்குவதற்குக் காரணம், முதலில் கிடைத்த இளமையை அவர்கள் சரியாகக் கடக்கவில்லை என்பதுதான். இளமையாயிருப்பதுபோல் எவ்வளவுக்கெவ்வளவு பாவனை செய்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நாம் உணர்ச்சி உத்வேகத்தில் வளரவில்லை என்பது திரிசனம்.

இளமையாயிருப்பதற்கு என் யோசனை மிகச் சுலபமானது; எப்போதும் வளர்ந்து கொண்டும், இளமையுடனு மிருக்கும் உறுப்பாகிய மூளையில் கவனம் முழுவதையும் செலுத்துங்கள். உங்கள் மனத்தைத் தூங்க விடாம லிருந்தால், என்றும் இளமையாயிருப்பீர்கள். காலம் அதி வேகத்தில் மாறிக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், உங்களைச் சுற்றியிருக்கும் உலகத்தில் அதிகச் சிரத்தை கொள்ளுங்கள். குறைந்தபட்சம் ஒரு நாளுக்கு ஒரு புது விஷயத்தையாவது தெரிந்துகொள்ள முற்படுங்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, வாழ்க்கையில் அலுப்புத் தட்டி, 'உட்கார்ந்து' விடாதீர்கள்; நடுத்தர வயசாகிய 30 வயசில் மனித வர்க்கத்தினர் இரண்டு பிரிவாகப் பிரிவதாக மனோ தத்துவ சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். ஒரு பிரிவினர் தங்களுடைய வேலை, குடும்பம் இவைகளில் கவனம் செலுத்தினாலும் மற்ற விஷயங்களில் உள்ள தங்கள் சிரத்தையைக் குறைத்துக் கொள்ளுவது கிடையாது. பத்திரிகைகள், சினிமாக்கள் இவைகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கவே செய்கிறார்கள். மூளைக்கும், கைகளுக்கும் வேலை தரும் அலுவல்களில் முழு மனத்துடன் ஈடுபடுகிறார்கள்.

இரண்டாவது ரகத்தினருக்கு வாழ்க்கை ஒரே சுருதியில் செல்லுகிறது. நாள் தவறாமல் காப்பி, காரியாலயம், காரியாலய அலுவல்கள், வீட்டுக்கு வந்ததும் வழக்கம் போல ரேடியோ, சொந்த சங்கீத சாதகம் இத்தியாதி. வீட்டு அம்மாளுக்கும் இதே மாதிரியான பல்லவிதான்; வீட்டு வேலை, குழந்தையைக் கவனிப்பது, நாவல் வாசிப்பது— இப்படி.

முதல் ரகத்தினருக்கு நாள் செல்லச் செல்ல இளமை அதிகரிக்கிறது. இரண்டாவது ரகத்தினருக்கு வெகு காலத்துக்கு முன்னதாகவே வாழ்க்கையில் சலிப்பு ஏற்படுகிறது. பல்லவியை மாற்றிக்கொள்ளாவிட்டால், 45-வது வயசிலேயே கிழட்டுத்தனம் வந்துவிடுகிறது.

வயசைப்பற்றிக் கவலைப்படாமலேயே வாழ்க்கையில் ருசியை ஏற்படுத்திக்கொள்ளலாம். எனக்குத் தெரிந்த ஒரு குடும்ப ஸ்திரீ, வயசு ஐம்பதாகியும் கை வேலைகள் செய்வதில் மிகப் பிரபலமாக விளங்குகிறாள். ஓய்வு பெற்ற ஒரு மின்சார எஞ்சினீர் வெகு அழகான மண் பாண்டங்கள் செய்து நிறையச் சம்பாதிக்கிறார். இன்னொருகிழவி—எழுபது வயசானவள்—புது மணப் பெண்களுக்கு வெகு அற்புதமாகச் சமையல் வேலை கற்றுக்கொடுக்கிறாள்.

பள்ளிக்கூடம் போவற்கு மிகவும் வயசாகிவிட்டதென்று ஒருபோதும் நினைக்காதீர்கள்.

70-வது வயசில் வைத்தியக் கல்லூரியில் படித்து, பட்டம் பெற்று, தற்சமயம் பிரசித்தமான வைத்தியராக இருக்கும் ஒருவரை எனக்குத் தெரியும்; இன்னொருவர் 71-வது வயசில் சட்டக் கல்லூரியில் புகுந்து, இப்போது வக்கீலாக இருக்கிறார்; அமெரிக்கச் சரித்திரத்தைத் திரும்பப் படிக்கவென்று ஒரு கலிபோர்னிய ஸ்திரீ தன்னுடைய 91-வது வயசில் கல்லூரிப் படிப்பை மேற்கொண்டிருக்கிறாள். 77-வது வயசில் சித்திரக் கலையைப் பயின்று, 80-வது வயசில் ஒரு போட்டியில் பரிசு பெற்று, 86-வது வயசான இன்றைய நிலையிலும் பூரணத் திறமையுடன் இருக்கும் ஒரு ஸ்திரீயையும் நான் அறிவேன். உங்களுடைய திறமையை மேன்மேலும் வளர்த்துக்கொள்ளக் 'காலம் ஆகிவிட்டது' என்ற கணக்கே கிடையாது.

வரப்போகும் தலைமுறையினருக்குத்தான் இளமையுடனிருக்கச் சுலபமாயிருக்கும். முயன்று பார்த்தால் நீங்கள் கூடப் பழக்கப்படுத்திக்கொள்ளலாம். உங்கள் மனத்தைத் தூங்கவிடாமல் ஜீவனுடனிருக்கச் செய்யுங்கள்; இது ஒன்றே உங்களுக்கு இளமையைத் தரும்.

*

ஆங்கிலப் பயிற்சி

"லட்சுமணபுரி மகாநாட்டில் நான் பேசியதைப் பத்திரிகைகளில் பிரசுரித்திருந்த முறை, படிப்பவர்களுக்குத் தப்பபிப்பிராயத்தைத்தான் உண்டாக்கி யிருக்கும். கல்வி போதிக்கும் மொழி, தாய் மொழியாகத்தான் இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் அதிகப் பயிற்சி தேவையில்லை, ஏதோ எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் மட்டும் போதும் என்று நான் கூறியதாகச் செய்தித் தாளில் பிரசுரித்திருக்கிறார்கள்.

"மேற்சொன்னதை அரபியப் பாஷை பயிலும் மாணவருக்குத்தான் சொன்னேன். அவர்களுக்குச் சிறிதளவு ஆங்கிலம் தெரிந்தால் போதும். மற்றப்படி, பொதுவாகக் கல்வி முறையைப்பற்றி என்னுடைய கருத்து என்னவெனில், இப்பொழுது இருக்கும் ஆங்கிலப் படிப்பில் சிறிதும் குறைவு இருக்கக்கூடாது என்பதுதான். சென்ற 150 ஆண்டுகளாக நாம் பிரிட்டிஷாருடன் கொண்டிருக்கும் நெருங்கிய தொடர்பு, ஆங்கிலத்தை நம் கல்விமுறையில் ஒரு முக்கியமான பாகமாகச் செய்துள்ளது. ஆகவே, ஆங்கிலத்தை நம் கல்வி முறையினின்றும் பிரித்தெடுத்து விடுவது, நம்முடைய போதனை முறையைப் பெரிதும் பாதிக்கும்.

"இன்று ஆங்கிலம் உலகத்திலேயே அதிகமாகப் பேசப்படும் மொழிகளில் ஒன்றாக இருக்கிறது. சிறப்பு வாய்ந்த ஆங்கிலத்தை நாம் படிக்காமல் விடுவோமானால், அது நமக்குப் பெரும் நஷ்டமாகத்தான் முடியும். ஆங்கிலத்தைக் கற்பிப்பதில் நாம் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய முடிவான எண்ணம். ஆனால், கல்வி போதிக்கும் மொழி மட்டும் தாய் மொழியாகவே இருக்க வேண்டும்.

—மௌலானா அபுல்கலாம் ஆஸாத்

எது முதலில்?

அயர்லாந்தில், மலைநாட்டின் ஒரு பகுதியில் கீழ்க்கண்ட ஒரு போலிஸ் விதி உண்டாம்.

"இருட்டியவுடன், ஒவ்வொரு போக்குவரவு வாகனமும் விளக்கேற்றிக்கொள்ள வேண்டும்; விளக்குகள் ஏற்றிக்கொண்டதும் இருட்டியதாகக் கருதப்படும்."

—தி காலியர்ஸ்

புதியன புகுதல்

●

மு. வரதராஜன்

தமிழில் இன்றுள்ள உரைநடை நூல்கள் போதிய அளவாக இல்லை. உரைநடை நூல்கள் இன்னும் பெருக வேண்டும். உள்ளவற்றிலும் மாணவர் பயிலத் தக்க நூல்கள் மிகக் குறைவு. சில நூல்கள், தமிழ் எழுத்தால் ஆங்கில நடையில் எழுதப்பட்டனவாக உள்ளன; சில நூல்கள் சுவையற்ற மொழிபெயர்ப்பு நடையில் அமைந்துள்ளன. சில நூல்கள் பிழைகளே உருவெடுத்து வந்தாற்போல் உள்ளன. இவற்றைக் கற்கும் மாணவருக்கும் தொல்லை; கற்பிக்கும் தமிழாசிரியருக்கும் மிகுந்த தொல்லை. பிழையற்ற தமிழ் நடையில் வளமான கருத்துக்களைக் கற்பதற்கு மாறாக, பிழைகளையும் ஆங்கில நடையினையுமே தமிழ் வகுப்பில் கற்பிக்க வேண்டியுள்ளது. தெளிவாக எண்ணவும், அழகாக எழுதவும் தாய்மொழி பயன்படும் என்னும் உண்மை இந்நூல்களால் பொய்யாகின்றது. தமிழ்ப் பாடநூல்களைத் தேர்ந்தெடுக்கத் தமிழாசிரியருக்குப் போதிய உரிமை இல்லாமையே இதற்கு முதல் காரணம் ஆகும்.

மற்றொரு காரணம் தமிழாசிரியராகிய நம்மையே சாரும். நாம் பழைய இலக்கியங்களை விளக்குவதோடு நின்றுவிடாமல், புதிய இலக்கியங்களைப் படைப்பதிலும் முனைய வேண்டும். இப்போதும் நம்மவர் ஒரு சிலர் அத் துறையில் முயன்று வருகின்றார்கள். ஒரு சிலர் செய்யும் முயற்சி போதாது. பலரும் முயல வேண்டும். இலக்கியம் என்றால் செய்யுள் வடிவானது என்று சிலர் எண்ணும் எண்ணத்திற்கு இடந்தராமல், உரைநடை நூல்கள் பற்பல இயற்ற வேண்டும். பெரும் புலவர்களின் மரபில் வந்த நாம், 'ஞாலமனைத்தும் அளந்த மேன்மைத் தமிழ்' மரபில் வளர்ந்த நாம், புதியன படைக்கும் கடமையை என்றும் மறத்தல் கூடாது. உரைநடையில் புதியன படைத்துப் பயில வேண்டும்; சிறு கதை புனைவோம்; தொடர்கதை வரைவோம்; கட்டுரை எழுதுவோம்; நாடகம் தீட்டுவோம்; இவற்றோடு காவியமும் இயற்றுவோம். இத்தனையும் தமிழ் மக்களின் நல்வாழ்விற்குப் பயன்படும் வகையில் செய்வோம். இவ்வாறு மாயாத உடம்புகளாக—கலைச் செல்வங்களாக—நிகழ்கால எதிர்கால இலக்கியங்களாகப் பலவற்றைப் படைத்துக்கொண்டே நாம் வாழ்க்கைப் படகைச் செலுத்த வேண்டும். உலகம் போற்றும் உயர்ந்த நூல்களை இயற்ற வேண்டும் என்ற பேராசையும் நமக்கு வேண்டும்; செய்தித் தாள்களிலும் திங்கள் வெளியீடுகளிலும் கலையையும் அறிவையும் விளக்க வேண்டும் என்ற ஆவலும் நமக்கு வேண்டும். இவ்வாறு சிறந்த எழுத்தாளராக வாழ நமக்கு உள்ள உரிமையை நாம் உணர வேண்டும்; உணர்ந்து கடமையைச் செய்ய முற்பட வேண்டும்.

'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்று இதுவரை நாம் கூறிவந்தோம். இதனைச் செயலில் கொண்டு வருவதற்கு வழிகோலுகிறார், மாகாணத் தமிழாசிரியர் இரண்டாவது மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவர்—வரவேற்புஉரையி லிருந்து.

அருமையான பற்கள்!

உங்கள் புன்னகையின் வசீகரத்தன்மை அபாயத்துக்குள்ளாகிறதா?

எல்லோரிடமிருந்தும் புகழைப்பெற உங்கள் குதூகல புன்னகை ஒருவித காந்த சக்தி. அதை ஈறு வியாதிகளால் பாழ்படுத்திக் கொள்ளாதீர்கள். தினந்தோறும் எஸ். ஆர். டூத்பேஸ்டி★னால் பற்களை சுத்தம் செய்தால் அவை உறுதியான ஈறுகளில் பளிச்சென்று வெண்மையாக, உங்கள் புன்முறுவலின் நிகரற்ற செல்வமாய் விளங்கும்.

★ பல் வைத்தியர்கள் ஈறு வியாதிகளுக்கு உபயோகப்படுத்தும் ஸோடியம் ரிஸினோலியேட் சேர்ந்தது.

GSR. 27-50 TM

D. & W. GIBBS LIMITED, LONDON, ENGLAND

கண்ணைக் கவரும் அழகான
பட்டுப்புடவைகள்
ப்ரோகேட்கள், ப்ளவுஸ்கள்
விவாகத்திற்குகந்த
உயரிய உடைகள் எல்லா
வகைகளுக்கும் பெயர்
பெற்ற இடம்

★

கேவல்ராம்ஸ்
ஒயிட் ஷாப்

45, ராட்டன் பஜார்
சென்னை

போன் : 2776
தந்தி : "Longstand."

KEWALRAM'S

கிளைகள் :

சாரிங்கிராஸ், ஊட்டி.
கிங்ஸ்வே, செகந்திராபாத்.
கேவல் ஸன்ஸ், லாகூர்.

ஜயப்பிரகாஷ் செய்த புரட்சி

●

பி. டி. தாண்டன்

வெளியில் எங்கே பார்த்தாலும் தீபாவளிக் கொண்டாட்டம் நடைபெற்றுக்கொண் டிருக்கிறது. ஜோதிமயமான அந்த இரவில் ஹஸாரிபாக் சிறையிலிருந்து தப்பி ஓடினார் ஸ்ரீஜயப்பிரகாஷ் நாராயண். இந்தியா எங்கணும், வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டிருக்கும்போது, சிறைக்குள்ளே கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க ஜயப்பிரகாஷின் மனம் ஒப்பவில்லை.

தினசரி சிறையிலேயே ஒத்திகை நடந்தது. ஜயப்பிரகாஷும் அவரது சகாக்களுமாக மொத்தம் பத்துப்பேர் இருந்தனர். இவர்களில் ஆறு பேர் தப்பி ஓடிவிட வேண்டியதென்றும், நால்வர் சிறையிலேயேயிருந்து மற்ற விஷயங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்துகொண்டார்கள். தப்பி ஓடும் அன்று இரவு, வழக்கம்போல் தங்கள் படுக்கைகளை விரித்துக்கொண்டு, கொசு வலைகளையும் கட்டிக்கொண்டார்கள். சிறையிலேயே இருக்கப்போகும் நால்வரும் சிறைக் காவல்காரனுடன் பேச்சுக் கொடுத்தனர். ஜயப்பிரகாஷ், தம்மிடமிருந்த வேஷ்டிகளை எல்லாம் நீளமாகச் சேர்த்துக் கட்டினார். அந்த வேஷ்டிக் கயிறு சிறையில் பாதி உள்ளும், பாதி வெளியிலும் இருந்தது. சிறையிலிருந்து தப்பி, வெளியே குதிக்கச் சரியாக எட்டு நிமிஷம் பிடித்தது.

கிளம்பின அவசரத்தில், கையோடு எடுத்துச்செல்ல உத்தேசித்திருந்த வேஷ்டி, சட்டை, சில்லறைப் பணம் அடங்கிய பையைச் சிறையிலேயே விட்டு விட்டார்கள். ஹஸாரிபாக் சிறையை அடுத்து ஜார்கண்ட்காடு இருந்தது. அதில் இடையில் நிற்காமல், 24 மணி நேரம் பிரயாணம் செய்தார்கள். ஜயப்பிரகாஷுக்கு வெற்றுக் காலுடன் நடக்கக் கஷ்டமாகவே இருந்தது. அவருக்கு ஏற்கெனவே கீல்வாயு உபத்திரவம் வேறு உண்டு. அவருடைய இணைபிரியாத் தோழர்களான சாலிக்ராமும், சுக்லாவும், அவரைப் பல இடங்களில் தங்கள் முதுகில் சுமந்தே தூக்கிச் சென்றார்கள்.

கண்ட இடத்தில் படுத்து, கண்ட ஆகாரம் உட்கொண்டார்கள். காட்டில் கிடைக்கக்கூடிய பழங்கள், கிழங்குகள்தாம் ஆகாரம். வனத்தைக் கடந்தவுடன், ஜயப்பிரகாஷ் கோஷ்டி இரண்டாகப் பிரிந்து, அவரவர்களுக்கென்று திட்டம் போட்டிருக்கும் வேலையில் இறங்கச் சென்றார்கள்.

மறுநாள் காலை பத்து மணிக்குத்தான் சிறை அதிகாரிகள்

'ஆகஸ்டு எழுச்சி' என்று பிரசித்தி பெற்ற, 1942-ம் வருஷ இயக்கத்துக்குப் பிரதம தளபதியாக இருந்தவர் ஸ்ரீஜயப்பிரகாஷ் நாராயண். அந்தக் காலத்தில் அவர் காட்டிய துணிச்சலும், செய்த தியாகமும் மகத்தானவை. ஸ்ரீ ஜயப்பிரகாஷ் தம்மிடம் நேரில் கூறியதையே எழுதியிருக்கிறார் கட்டுரையாளர். ஸர்ச் லைட் விசேஷ அநுபந்தத்தில் வெளியான அந்தக் கட்டுரையின் சாரமே இது.

விழித்துக்கொண்டனர். செய்தி கேட்ட மாகாண சர்க்கார் மிரண்டு, நடுங்கிற்று. காட்டில் அதிகாரிகள் கூட்டம் கூட்டமாக வேட்டையாடினர்கள். பிரதேசத்துக்கு மேலே ஏரோப்ளேன் ரோந்துகூட நடந்தது. சிறையிலிருந்த ஜயப்பிரகாஷின் நண்பர்கள் கடும் கண்காணிப்புக்கு உள்ளானர்கள். வேறு எங்கேயோ ஒரு சிறையிலிருந்த ஜயப்பிரகாஷின் மனைவி ஸ்ரீமதி பிரபாவதி தேவியைக்கூடச் சிறை அறைக்குள்ளேயே படுத்துத் தூங்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்தார்கள்.

ஜயப்பிரகாஷ் கயா, அர்ரா மார்க்கமாகப் பதினைந்து தினங்களில் காசியை அடைந்தார். சென்ற இடங்களிலெல்லாம் அவர் கிராமவாசிகளுடனேயே வசித்தார்; கிராமவாசியாகவே நடித்தார். கையில் ஒரு பெரிய கழி, முழங்காலுக்கு மேலே கட்டிய வேஷ்டி, அழுக்கான ஆடைகள், தாடி எல்லாம் அவரை அசல் கிராமத்தானுகக் காட்டின. சிற்சில சமயங்களில், அவரைப் பற்றிய பூர்வீகங்களை யாராவது கேட்பார்கள். சாதுர்யமாகவே பதில் அளிப்பார்; என்ருலும், எந்தச் சமயத்தில், யாரிடம் எக்கச்சக்கமாகப்பேசிவிடுவோமோ என்ற பயமும் இருந்துகொண்டுதான் இருந்தது!

ஊருக்கு ஊர் ஜயப்பிரகாஷ் அலைந்தார்; சென்ற இடங்களிலெல்லாம், தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டார். 1942-ல் மக்களிடையே தோன்றிய கொதிப்புணர்ச்சி அவிந்து போகாதபடி, தூண்டிவிட்டுக்கொண்டேயிருந்தார். இரண்டு மாசங்களுக்குப் பின்னர் தாடியைவெட்டி எறிந்துவிட்டு, அசல் ஐரோப்பியராகக் காட்சியளித்து, 'யாத்திரை' செய்தார். சில சமயங்களில் 'ரஹ்மான்' என்ற பெயரில் முஸ்லிமாகவும் மாறுவார்!

நேபால்தான் பல காரியங்களுக்குச் சௌகரியமான இடம் என்று அவருக்குத்தோன்றியது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வாலாட்டம், அங்கே இருக்காது என்று தம் சகாக்களுடன் கல்கத்தாவிலிருந்து நேபாலுக்குச் சென்ருர். அங்கே ஒரு பிரபல ஜமீந்தாரின் நட்புக் கிடைத்தது. இவருடைய தோழர்களில் ஒருவர் டாக்டர். ஆகையால், சுற்றுப்புற கிராமவாசிகளுக்கு வைத்திய உதவி அளிப்பதாகப் 'போர்டு' போட்டுக்கொண்டு ஒரு குடிசையை ஏற்படுத்திக்கொண்டார். அதுவே சில நாட்களில் அவருடைய புரட்சி இயக்கத்தின் மத்திய ஸ்தாபனமாக மாறிற்று. கொரில்லாப் படை ஒன்றை அங்கே நிறுவினர். நேபாலிலிருந்த நூற்றுக்கணக்கான பீஹாரிகள் அந்தப் படையில் சேர்ந்தனர். 'விடுதலைச் சேனை' மும்முரமாக வேலை செய்து வந்தது.

பிரிட்டிஷ் கழுகுக்கு எப்படியோ மூக்கில் வேர்த்துவிட்டது. உடனே நேபால அரசாங்கத்தைத் தூண்டிவிட்டு ஜயப்பிரகாஷைத் திடீரென்று கைது செய்தது. ஜயப்பிரகாஷ் கைதானதும் இந்த இயக்கத்தின் சகாப்தமே முடிந்துவிட்டதாகப் பலர் எண்ணினர்கள். காலம் அதைப் பொய்ப்பித்தது.

பிரிட்டிஷ் அதிகாரிகளின் காவலில் ஜயப்பிரகாஷ் ஹனுமான் நகருக்கு அழைத்துச் செல்லப்படும்போது, ஒரு சிறு பையன் அவரைக் காண ஆசைப்

பட்டான். ஜயப்பிரகாஷும் அதிகாரிகளைச் சம்மதிக்க வைத்து அந்தப் பையனைப் 'பேட்டி' கண்டார். அந்தப் பையன் ஜயப்பிரகாஷை முன் பின் பார்த்தது கிடையாது. ஆனாலும், ஒரு சுதந்தர வீரன் இப்படிக் கைது செய்யப்பட்டு, ஓர் உதவியும் இல்லாமல் இருக்கிறார் என்று அவன் விம்மி விம்மி அழுதான். ஜயப்பிரகாஷுக்கு ஒரு யோசனை தோன்றியது. அந்தப் பையன் மூலமாகத் தம் கொரில்லாப் படைக்கு ரகசியமாகத் தம் நிலை பற்றிச் செய்தி அனுப்பினார். ஹனுமான் நகரிலிருந்து, கொரில்லாப் படைகள் இருக்குமிடத்துக்கு எழுபது மைல் இருந்தது. ஆனால், இரவோடு இரவாக அந்தப் பையன் கொரில்லாப் படைகளிடம் செய்தியைச் சேர்ப்பித்தான். அன்று இரவே கொரில்லாப் படையினர் ஹனுமான் நகருக்கு வந்து சேர்ந்தனர். சில குடிசைகளுக்குத் தீ வைத்து, துப்பாக்கிப் பிரயோகமும் செய்தார்கள். ஜயப்பிரகாஷுக்குக் காவலாக இருந்தவர்கள் மிகச் சொற்பப் பேர்தான். காட்மாண்டுக்குச் செய்தி அனுப்ப முடியாதபடி, தந்திக் கம்பிகளையும் அறுத்துவிட்டனர், கொரில்லா வீரர்கள்! அங்கே நடந்த சண்டையில், ஓர் அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டார். பிற்பாடு, ஜயப்பிரகாஷ் இதற்காக மிகவும் வருந்தி அந்த அதிகாரியின் குடும்பத்துக்குத் தாமே நஷ்ட ஈடு கொடுத்ததாகக்கூடத் தெரிகிறது.

இதன் பின்னர் ஜயப்பிரகாஷ் நேபாலில் இருக்கவில்லை. நேரே கல்கத்தாவிற்குத் திரும்பினார். வழியில் மறுபடியும் ஒரு முறை பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் சிக்கி அதியாச்சரியமான முறையில் தப்பினார்! அவரைக் காப்பதில் கொரில்லா வீரர்கள், பெரும் தீரத்தையும், தியாக புத்தியையும் காட்டினர். ஒரு கொரில்லா வீரருக்கு உடம்பு சரியில்லாமலிருந்ததால், அவரைப் பின் தங்கிவிடும்படி மற்றவர்கள் சொன்னார்களாம். அந்தக் கொரில்லா வீரர், "ஜயப்பிரகாஷைப் பாதுகாப்பதிலேயே என் உயிரை விடுகிறேன்!" என்று சொல்லி, பின் தங்க மறுத்துவிட்டாராம்!

ஜயப்பிரகாஷைப் பிடிக்க இந்திய சர்க்கார் தன் முழுப்பலத்தையும் உபயோகித்து வேலை செய்துகொண்டிருந்தபோது, எப்படி அவரால் சுதந்தர புருஷராக இருக்க முடிந்தது என்பது ஆச்சரியமான விஷயம்தான். ஆனால், சீக்கிரத்திலேயே ஜயப்பிரகாஷின் புரட்சி இயக்கம் முடிவடைய வேண்டி நேர்ந்துவிட்டது.

ஜயப்பிரகாஷின் சகாக்களில் ஒருவரே அவருக்குத் துரோகம் செய்து விட்டதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். ஜயப்பிரகாஷையே நேரில் கேட்டதற்கு என்ன சொன்னார் தெரியுமா? "ஊர் ஊராக அலைந்துகொண்டிருக்கும் நாம் எங்கே பிடிபடப் போகிறோம் என்று எண்ணி, நானே சற்று அலட்சியமாக இருந்துவிட்டேன். டெல்லியில் மத்திய அரசாங்கமும் அப்போது சற்றுப்பலப்பட்டு ஜரூராக வேலை செய்துவந்தது. இந்த இரண்டுமே என் கைதுக்குக் காரணங்கள்!"

அப்போது கல்கத்தாவிலிருந்து காஷ்மீரத்துக்குப் பிரயாணம் செய்யத் திட்டமிட்டிருந்தார் ஜயப்பிரகாஷ். ரகசியப் போலிசாரை ஏய்க்கவென்று சுற்றுவழியாகவே பிரயாணம் செய்தார்.

1943, செப்டம்பர் மாசம் 17-ம் தேதி டெல்லியில் ரயில் ஏறினர். இரவு ஒருவித விசேஷமு மில்லாமல் கழிந்தது. 18-ம் தேதியன்று காலை 'டீ'க்காக ஜன்னலண்டை வந்து வெளியே எட்டிப் பார்த்தார். அவ்வளவுதான், எந்தப் போலிஸ் அதிகாரியோ மோப்பம் பிடித்து விட்டான்!

சற்றுநேரத்தில் யாரோ ரயில் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. வண்டியில் மூன்று ஆசனங்கள் காலியாகவே இருந்ததால் ஜயப்பிரகாஷ் கதவைத் திறந்து, அவர்களை உள்ளே அழைத்தார். ஆனல், அவர்கள் உள்ளே நுழையாமல் போய்விட்டனர். ஜயப்பிரகாஷ் தாம் வகையாகச் சிக்கிக்கொண்டதை அறிந்துகொண்டார்.

சில சீக்கிய அதிகாரிகளுடன் ஓர் ஆங்கிலேயன் உள்ளே நுழைந்தான். "நீங்கள் என்ன ரயில்வே அதிகாரியா?" என்று கேட்டார் ஜயப்பிரகாஷ். "இல்லை, ஆனல் நீங்கள் யாரென்பது எனக்கு உடனே தெரிந்தாக வேண்டும்" என்ருன் அந்த ஆங்கிலேயன். தம் பெயர் எஸ். பி. மேஹ்தா என்று சொன்னர் ஜயப்பிரகாஷ்!

"ஏதாவதுதொந்தரவு கொடுத்தால் உங்களைச் சுடலாமென்று எனக்கு உத்தரவு" என்று எச்சரித்து விட்டு அந்தப் போலிஸ் அதிகாரி ஜயப்பிரகாஷைச் சோதனை செய்தார். ஒரு துப்பும் கிடைக்கவில்லை. ஜயப்பிரகாஷிடம் ஒருசிறிய 'ரிவால்வர்'கூட இல்லாதது கண்டு அந்த வெள்ளையன் ஆச்சரியப்பட்டான். ஆனல், ஜெயப்பிரகாஷ் கைது செய்யப்பட்டார். அவரைக் கைதுசெய்த வில்லியம் ராபின்ஸன் என்ற அந்த அதிகாரி அப்போது லாகூரில் போலிஸ் சூபரின்டென்டென்ட். பிற்பாடு இவர் டில்லி பிரதம சூபரின்டென்டுகளில் ஒருவராக ஆனர்!

"நீங்கள் கைது செய்யப்பட்டபோது உங்களுக்கு என்ன தோன்றிற்று?" என்று நான் கேட்டேன். "நான் திகைத்துப் போய்விட்டேன்; வருத்தப்பட்டேன்" என்ருர் ஜயப்பிரகாஷ்.

"நீங்கள் ஆரம்பித்த வேலை முடியாமலிருக்கிறதே என்ரு வருந்தினீர்கள்?" என்று கேட்டேன்.

"இல்லை, இல்லை. அப்புறம் பல மாசங்கள் வரையில் நான் கைதாகாமல் இருந்திருந்தால்கூட வேலை முடிந்திருக்காது. ஆனல், அதைத் தொடர்ந்து செய்ய முடியாமல் போய்விட்டதே என்றுதான் வருத்தப்பட்டேன்" என்று பதிலளித்தார் ஜயப்பிரகாஷ்.

அந்த வெள்ளை அதிகாரியும் அவனுடன் வந்த அந்தச் சீக்கிய அதிகாரிகளும் தங்களுடன் கைவிலங்கு கொண்டுவரவில்லை. ஆகையினல், ஜயப்பிரகாஷின் 'ஹோல்டா'லைப் பிரித்து அதன் பட்டையைக் கொண்டே ஜயப்பிரகாஷின் கையைக் கட்டி அழைத்துச் சென்ருர்கள்.

சுதந்தர வீரரான ஜயப்பிரகாஷ் கேவலம் போலிசாரின் கைதியாக ஆனர். லாகூர்ச் சிறையில் எத்தனையோ சித்திரவதைகளுக்கு உள்ளானர். சரியாகப் பதினறு மாசங்கள் கழித்தே, அங்கிருந்து ஆக்ரா மத்தியச் சிறைக்கு மாற்றப்பட்டார்.

✻

ஜுபிடர்ஸ்
ராஜகுமாரி
டைரக்ஷன் A.S.A. சாமி B.A.(Hons)
பாட்டு : நாராயணகவி
K. மாலதி K. தவமணிதேவி M.S. பாக்கியம் T.S. பாலையா
M.G. ராமச்சந்திரன் M.R. சுவாமிநாதன் M.N. நம்பியார் புளிமூட்டை M.E. மாதவன்
JUPITER PICTURES CIRCUIT
ஜுபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட், மதராஸ் & திருப்பூர்
W. A. Menon

ஸ்திரீகளின் ஆரோக்கியத்திற்கு

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணா

கர்ப்பாசயரோக நிவாரணி

அருணா ஸ்திரீகளின் தேக சுகத்திற்கு அவசியமான சிறந்த டானிக். முறைப்படி தவறாமல் உபயோகித்தால் ஆரோக்கியத்தை விருத்தி செய்து வாழ்க்கையை நன்கு ரசிக்கச் செய்யும்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
தி-நகர் . . . . மதராஸ்.

EASTERNS

ஆஸ்தமா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்

தற்சமயத்திற்கு
குணமளிக்கும்
மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோஹித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல. "ஆஸ்த்மா"வின் மூல காரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம் முதுகுவலி, தொண்டைக் கரகரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின், (நீலப் பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம் வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்புப் பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக் கடையிலும் கிடைக்கும் 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—
புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :
1. அப்பா அண்டு கோ, சைனா பஜார்.
2. அமிருத் ரத்னாகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :
K. C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &,
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி.

புரோகித்ஸ் ஸ்வாஸஹரி

புற்று நோய்

ஆர். ஆர். ஸ்பென்சர்

இந்த நோயை ஆங்கிலத்தில் கான்சர் என்று சொல்லுவார்கள். நமது உடலிலுள்ள நுண்ணிய உயிர் அணுக்கள் கெட்டுப்போய், தங்களுடைய வேலையைச் சரிவரச் செய்யாமல் உடலினின்றும் வேண்டிய ஜீவ சக்தியை மட்டும் எடுத்துக்கொண்டு, உடலுக்கு ஒருவித நன்மையும் செய்யாமல் இருப்பதோடு மட்டுமல்லாமல், தீங்கையும் விளைவிக்கின்றது. இவை உடற் சத்தையும் சக்தியையும் விரயப்படுத்துவதற்கெனவே தோன்றிய பல நுண் அணுக்கள் எனலாம். இவை எவ்விதம் நம்மைத் தாக்குகின்றன, எதன் மூலம் பரவுகின்றன என்பவை இன்னும் விளங்காத புதிர்களாகவே இருக்கின்றன.

நமது உடல் உயிர் பெற்றிருப்பதற்கு அடிப்படையான காரணம் உயிருள்ள நுண்ணணுக்கள்தாம். நீங்களும் நானும்—ஏன், எல்லா உயிர்களுமே—பிறப்பதற்கு முன்னால் உயிருள்ள நுண்ணணுவாகத்தான் உருவத்தில் திகழ்ந்தோம்.

கருவில் உருவெடுத்த பொழுது நம்முடைய கனம் (நிறை) எவ்வளவு தெரியுமா? ஒரு 'கிரா'மின் 15 கோடியில் ஒரு பாகம் தானாம்! பிறக்கும் பொழுது ஒரு குழந்தை 7 பவுண்டு நிறையுள்ளதாக இருந்தால், அது கருவில் முதலில் தோன்றிய பொழுது இருந்த கனத்தைவிட 200 கோடி மடங்கு அதிகமாம். 20,000 கோடி நுண்ணணுக்கள் கொண்டதாம். பிறந்த குழந்தைகளுக்கே இவ்வளவு நுண்ணணுக்கள் இருந்தால் வயசு முதிர்ந்தவர்களுக்கு எவ்வளவு என்று கணக்கெடுக்கவே முடியாது. கோடி கோடியான அணுக்கள் நிறைந்திருக்கும். கோடிக் கணக்கான நுண்ணணுக்கள் இயற்கையிலேயே பல பகுதிகளாகப் பிரிக்கப்பெற்று, ஒவ்வொரு கூட்டமும் தமக்கிட்ட வேலையைச் சரிவரச் செய்ய முடிகிறது. அவை முறையே தம் கடன்களைச் செய்து முடித்தாலும் பொதுவில் நம் உடல்நலத்தையே போஷித்து வளர்க்க முற்படுகின்றன.

இயற்கையோடு இயைந்து வேலை செய்யும் இந்த எண்ணற்ற நுண்ணணுக்கள், எப்படியோ தங்களுடைய தொழில்களினின்றும் முரண்பட்டு, எந்த உடலைப் பேணி வளர்த்ததோ அவ்வுடலையே தாக்கவும் தூண்டப்படுகின்றன. இம்மாதிரி முரண்பட்ட, அடங்காத, தீங்கிழைக்கக்கூடிய நுண்ணணுக்களை, அவைகள் நம்மைக் கொல்லுவதற்கு முன்பே நாம் அவற்றைக் கொன்றுவிடுவதற்கு மருத்துவத் துறையில் ஆராய்ச்சிகள் பல நடந்து வருகின்றன.

இருபது கோடி டாலர்கள் செலவழித்து, அமெரிக்காவிலுள்ள பல விஞ்ஞான நிபுணர்கள் இரவு பகலாக உழைத்துக் கண்டுபிடிக்கப்பட்டது அணுக்குண்டு. அவ்வாறிருக்க, ஏன் அம்மாதிரியே இடைவிடாது முயன்று புற்றுக்கும் மருந்து

ஆங்கிலத்தில் கானசர் என்று சொல்லப்படுவதை ஏறக்குறையப் புற்று நோய் என்று கொள்ளலாம். இதைப் பற்றிய முழு விவரங்களையும் கூறும் இக் கட்டுரை 'டைம்ஸ் டைஜஸ்ட்'டில் வெளியானதன் சாரம்.

கண்டுபிடிக்கக் கூடாது என்ற கேள்வி எழலாம். காரணம், அணுக்குண்டு உயிரற்ற பொருள்களைப் பற்றியது. ஆனல், புற்றுக்கு மருந்தோ உயிருள்ள நுண்ணணுக்களைப் பற்றியது.

பொருள்களை அணு அணுவாகப் பிரிக்கலாம் என்பது 1940-ம் ஆண்டே விஞ்ஞானிகளுக்குத் தெரிந்திருந்த விஷயம்தான். அதனல்தான் அதிலிருந்து எளிதிலேயே அணுக்குண்டும் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனல், நம்முடைய உடல் வளர்ச்சியைப் பற்றியோ அதற்குக் காரணமாக நிற்கின்ற உயிருள்ள நுண்ணணுக்களைப்பற்றியோ நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது.

நம் உடலி லுள்ள நுண்ணணுக்கள் தாமே இரண்டாக மாறிப் பெருகுகின்றன. எப்படி? நுண்ணணுக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தாங்களே பெருகுவதும், நின்றுவிடுவதும் எப்படி? எம்முறையினல் பல சிறிய உயிர் அணுக்கள் நமது உடலின் பல பாகங்களாக மாறி உருப் பெறுகின்றன? நமது உடலி லுள்ள சிறிய அணுக்கள் எப்படித் தங்கள் வேலையி னின்றும் முரண்பட்டுப் புற்று நோயைப் பரப்பும் கிருமிகளாக மாறுகின்றன?—இந்தக் கேள்விகளுக்கு நமது மருத்துவ நிபுணர்கள் விடை இறுக்க முயல வேண்டும்.

புற்று நோய் தொத்து வியாதி என்று பலர் கருதுகிருர்கள். ஆனல், உண்மையில் அப்படி அல்ல என்கிறது அநுபவம். உண்மைப் புற்று நோய்வாய்ப்பட்ட ஒரு நோயாளியிட மிருந்து அவருடன் சதா காலமும் இருந்து சிகிச்சைசெய்யும் டாக்டர்களுக்கும், தாதிகளுக்கும் அந் நோய் பரவுவதில்லை. சென்ற 30 ஆண்டுகளுக்கு மேலாகப் புற்றுநோயைப் பற்றி நடத்தப்பெறும் ஆராய்ச்சிக் கூடங்களில் பல எலிகளையும் சுண்டெலிகளையும் வைத்துப் பரீட்சை செய்கின்றனர். ஆனுலும், இது வரையில் அங்கிருந்தவர்களுக்கு அவ் வியாதி பரவியதாகத் தெரியவில்லை.

புற்று எப்படிப் பரவுகிறது? அதற்குக்காரணம் என்ன என்று ஒருவருக்கும் தெரிய வில்லை. புற்றிலும் பல விதங்கள் உண்டு.

தோலில் வரும் புற்று: மென்மையான தோலையுடையவர்களையும், அழகிய சிவப்பான தோல் உடையவர்களையும்தாம் இவ் வியாதி அதிகமாகத் தாக்குகின்றது. அதிலும், துணிகளால் போர்த்தப்படாமல் இருக்கிற பாகங்களாகிய முகம், கை, கழுத்து முதலியனவற்றையே அதிகம் தாக்குகிறது. வறண்ட காற்றுப் பிரதேசங்களில்தான் 'தோல் புற்று' வருகிறது. பனியால் நனைந்து,வெயிலால் உலர்ந்து மழையால் நனைந்து வாடிய தோல்களைத்தான் இந்த வியாதி பாதிக்கிறது. ஆகவே, இது மாலுமிகளுக்கு அதிகமாக வருகிறது.

ஆராய்ச்சிக் கூடத்தில் எலிகளுக்கு எளிதாக இந்த வியாதியை வரச் செய்யலாம். வாரத்தில் பல தடவைகள் அல்ட்ரா வயலெட் கிரணங்களை எலிகளின் மீது படும்படி செய்தால் சில தினங்களில் தோல் புற்று வந்துவிடுகிறது. தோல் புற்று முற்றி, உள்ளே உள்ள மற்றத் தசைகளைப் பாதிக்கத் தொடங்கு முன்னர் எளிதில் குணப்படுத்திவிடலாம்.

வயிற்றுக்குள் சிறு குடலைப் பாதிக்கும் புற்றுத்தான் உயி

ருக்கு ஆபத்தை விளைவிக்கும் தன்மையது. அமெரிக்க நாட்டில் எழு நிமிஷங்களுக்கு ஒருவர் வீதம் இந்த நோயால் இறக்கிறார்கள். வயிற்றைத் தாக்கும் புற்றுக்குக் காரணம் என்ன என்று இது வரை ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை. ஒழுங்கற்ற முறையில், கண்டதைக் கண்ட நேரத்தில் அளவுக்கு மீறி உண்பதால் இருக்கலாம். அல்லது குடலி லுள்ள உயிர் அணுக்களை வளரச் செய்யும் உணவினாலும் இருக்கலாம். இன்னும் முடிவான காரணமோ, அதைக் குணப்படுத்தும் முறையோ கண்டுபிடிக்கவில்லை.

ஈரலைப் பாதிக்கும் புற்று: இந்த விதமான புற்று மலேயா, பட்டேவியா, மணிலா முதலிய நாடுகளில் அதிகம்.

ஆராய்ச்சிக் கூடத்தில் எலிகளுக்கு ஈரல் புற்றைச் சுலபமாக உண்டாக்குகின்றனர். உணவில் 'அசோ' என்ற ஒரு விதமான சாயத்தைக் கலந்து எலிகளுக்குப் போட்டால், சில தினங்களில் இவ் வியாதியால் தாக்கப்படுகின்றன. ஆனால், இந்த உணவு, முயல், கோழி முதலியவற்றுக்கு ஒருவித வியாதியையும் உண்டாக்குவதில்லை.

இம் மாதிரியான உணவுப் பொருள்கள் வயிற்றைப் பாதிக்காமல் ஈரலைப் பாதிப்பது விந்தையாகத்தா னிருக்கிறது. இதற்கும் மருத்துவரால் விளக்கம் தர இயலவில்லை.

புற்றைப்பற்றி நடத்தப் பெறும் ஆராய்ச்சிகள் பலன் அளிக்காமல் இல்லை. ஐக்கிய அமெரிக்க நாட்டில் புற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் ஒரு கழகத்தில் நுண்ணிய உயிர் அணுக்களை (அவை உடலில் இருக்கவேண்டிய அவசியமில்லை. உடலுக்கு வெளியேயும் இருக்கலாம்.) புற்றுக் கிருமிகளாக மாற்றலாம் என்று கண்டுள்ளனர். உடலி லுள்ள உயிர் அணுக்களை ஒரு கண்ணாடிக் கூண்டில் போட்டு, அவற்றிற்கு முட்டைக் கரு, குதிரை ரத்தத்தி லிருந்து எடுத்த 'சீரம்' போன்ற செயற்கை உணவைக் கொடுத்து வளர்த்தார்கள். கோல் டார்—தாரி லிருந்து தயார் செய்யப்பட்ட புற்றைப் பரப்பக் கூடிய சில மருந்துகளின் மூலம் இந்த நுண்ணிய உயிர் அணுக்களுக்குப் புற்று நோயை உண்டாக்கினர். இந்த நுண்ணணுக்களை அவை எந்த மிருக இனத்தி லிருந்து எடுக்கப்பட்டனவோ அதே மிருக இனத்தைச் சேர்ந்த ஒன்றின் உடலில் செலுத்தினால், அந்த மிருகத்துக்கும் புற்று நோய் பற்றிக் கொள்கிறது. அம்மாதிரிப் புற்றைப் பரப்பும் அணுக்கள் வேறு மிருக இனங்களைத் தாக்குவது இல்லை. இந்தப் பரிசோதனையினால் நாம் அறிவது என்னவென்றால், ஓர் இனத்தைச் சேர்ந்த நுண்ணிய உயிர் அணுக்கள் புற்று நோய்ப்பட்டால், அதே இனத்தைச் சேர்ந்த நுண்ணிய உயிர் அணுக்களைத் தான் பாதிக்கும். ஆரோக்கியமுள்ள, சாதாரணமான நுண்ணிய அணுக்கள் ஏதோ குறிப்பிட்ட சூழ்நிலையில் தாங்களாகவேதான் புற்றைப் பரப்பும் கிருமிகளாக மாறுகின்றன. ஆகவே, புற்றைப் பரப்புவதற்கு எனத் தனியாகப் 'பாக்டீரியா' போன்ற கிருமிகள் இல்லை என நாம் அறிகிறோம்.

வயிற்றுக்குள் உண்டாகும் புற்று நோய், ஈரல் குலையையும்

மற்றத் தசைநார்களையும் பாதிக்கிறது. ரத்தத்தில் சர்க்கரை அதிகமாகவும், உயிர்ச்சத்தும் உடலை வளர்க்கும் சத்தும் குறைந்தும் காணப்படுகிறது. இந்தக் குறைபாடுகளை வைத்துக் கொண்டு நாம் வயிற்றுப்புற்றைக் குணப்படுத்த முடியலாம். ஆனால், இதை வைத்துக் கொண்டே மற்றப் பாகங்களைத் தாக்கும் புற்றுக்களைத் தடுக்க முடியாது. ஏனெனில், உடலின் மற்றப் பாகங்கள் தம் வேலையில் பெரிதும் மாறுகின்றன அல்லவா? உடலி லுள்ள எல்லாப் பாகங்களின் வேலைகளையும் குணங்களையும் நன்கு அறிவது தான், சரியான வழி. நம்முடைய உடலின் உட்பாகங்களைப் பாதிக்கும் புற்றுக்குக் காரணங்கள் எவை என்று ஆராய்ந்து கண்டு பிடிக்க வேண்டும். அது சுலபமான காரியம் அல்ல. ஆனால், அதற்காக நாம் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. ஆராய்ச்சிக்கு வேண்டிய இடம், பொருள், காலம், அறிவு முதலியவற்றை நாம் பெற்றிருக்கிறோம். நம்மிட முள்ள பொருள்களின் உதவியால் மக்களைக் கல்வி யறிவு உடையவர்களாக ஆக்கலாம். கல்வி யறிவு பெற்றுச் சிறிது நாகரிக மடைந்திருப்பவர்கள் தாம், தங்களுடைய நோய்களைக் குணப்படுத்திக்கொள்ள மருத்துவரைப் பயப்படாமல் நாடி, அவர்களுடைய கருத்துப்படி நடக்க முன் வருகிறார்கள்.

நமக்கு இப்பொழுது இருக்கும் ஆஸ்பத்திரிகள் போதா. ஆராய்ச்சிக் கூடங்களும் ஆஸ்பத்திரிகளும் அதிகமாக இருந்தால், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட 'எலெக்ட்ரான் மைக்ராஸ்கோப்' 'மாஸ் ஸ்பெக்ட்ராகிராஃபி' போன்ற நூதனக் கருவிகளின் உதவியாலும், அணுச் சக்தியின் மூலமும் புற்றின் காரணங்களை அறிந்து குணப்படுத்த முயலலாம். மக்களைக் கோடிக் கணக்கில் கொன்று குவிக்கும் யுத்தங்களுக்கு நாகரிக நாடுகள் கோடி, கோடியாக பொருளையும் உயிரையும் செலவழிக்கின்றன. ஆகவே, மக்கள் உயிரைக் காக்க, யுத்தத்தில் செய்த செலவைக் காட்டிலும் குறைந்த அளவில் பணம் செலவழிக்க நாடுகள் முற்படும் என்பது திண்ணம்.

✲

அவருக்குப் பிடித்தது

ஆர்சிலாஸ் நாட்டு அரசனுக்கு வாயாடியான ஒரு நாவிதன் தலைமயிர் வெட்ட வந்து சேர்ந்தான். வந்ததும் வராததுமாய், "எப்படி வெட்டினால் உங்களுக்குப் பிடிக்கும்?" என்று அவன் கேட்டான்.

"வாயை மூடிக்கொண்டு!" என்று பதில் சொன்னார் ராஜா!

ஸ்கை ஸ்க்ராப்பர்

முதல் வேலை

கிராமச் சுகாதாரத்தில் முதலில் பழக்கப்பட வேண்டியவர்கள் நமது பெண்மணிகளும் தாய்மார்களுமே. இதற்கு வேண்டியதைச் செய்வது, தொண்டர்களின் முதல் வேலை.

—தி. சே. சௌ. ராஜன் (கிராம ராஜ்யம்)

அறிவிப்பு

கொரியாவில் ஒருவன் இறந்துவிட்டால், அதை அறிவிப்பதற்காக ஒருவன் அந்த வீட்டுக் கூரைமீது ஏறி நின்று, இறந்தவனுடைய ஆடைகளை விசிறுவான்.

—கரன்ட் ஹிஸ்டரி

புதியவரும் பழையவரும்



படம்: என். ராமகிருஷ்ணு, மாயவரம்

ரயில் போகலாம்!



படம்: ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்

புருவே, போய்விடாதே!

அமெரிக்க நாட்டுக்கு இந்தியாவின் முதல் ஸ்தானிகராகச் சென்றிருக்கும் ஸ்ரீ ஆசப் அலி வாஷிங் டனுக்குப் புறப்பட்டபோது, அவருடைய நண்பர்கள் பலர் பாலம் விமான நிலையத்தில் அவரை வழியனுப்பி வைத்தார்கள். அச் சமயம் கவியரசி ஸ்ரீமதி சரோஜனி தேவியார், 'புவியாளும் வேய்ங்குழல்' என்ற தம்முடைய கவிதைத் தொகுப்பை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்



படம்: ஜே. எம். கல்யாணம், சென்னை

—நரை

கூடிக் கிழப் பருவம் எய்திக் — கொடுங்
கூற்றுக் கிரை யெனப் பின் மாயும்



படம்: என் ராமகிருஷ்ணா, மாயவரம்

— பல

வேடிக்கை மனிதரைப் போலே — நான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ?



அமெரிக்காவில் நடத்தப்படும் 'புத்தக வார'த்தை ஒட்டிய ஒரு கண் காட்சிச்சாலை. விவரமான கட்டுரை எதிர்ப் பக்கத்தில் இருக்கிறது

குழந்தைப் புத்தகங்கள்

●

'பதி'

புத்தகம் படிக்கும் பழக்கம் நம்மவரிடம் அதிகம் இல்லை. அந்த நல்ல பழக்கம் சிறு வயசிலிருந்தே படிய வேண்டும். பள்ளிக்குப் போக மன மில்லாத குழந்தைகளைப் படிக்கத் தூண்டுவது கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால், அவர்களுக்கு அழகிய முறையில், கவர்ச்சியான படங்களுடன் கூடிய கதைப் புத்தகங்களை வெளியிட்டு, அவர்கள் அடிக்கடி அப் புத்தகங்களுடன் பழகும் வாய்ப்புத் தந்தால் நம்முடைய நோக்கம் எளிதில் கைகூடும்.

அந்த முறையை அமெரிக்க நாட்டில் பிரமிக்கத்தக்க முறையில் கையாண்டு, இன்று மகத்தான பலனை அடைந்துள்ளனர்.

அமெரிக்காவில் 50 ஆண்டுகளுக்கு முன்பு, குழந்தைகளுக்கென்று புத்தகங்கள் குறைவு. குழந்தைகள் புத்தக வெளியீடுகள் இல்லை என்றே சொல்லலாம். ஆனால், சமீப காலத்தில் அழகிய படங்களுடன் பிரசுரிக்கப்படும் புத்தகங்கள் அதிகரித்துள்ளன. 1890-ம் ஆண்டில் ஒரு புத்தகாலயத்தில் குழந்தைகளுக்காக வாங்க வேண்டிய புத்தகப் பட்டியலில் கேவலம் 500 புத்தகங்களின் பெயர்கள்தாம் இருந்தன. ஆனால், இன்று குழந்தைகளுக்காக வெளியிடப்படும் புத்தகங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது.

குழந்தைகள் புத்தக நிலையங்களுக்குச் சென்று, புத்தகங்களை விரும்பிப் படிக்க வேண்டுமானால், அவர்களுக்கென்று தனி அறை அவசியம். இதை முதன் முதலில் அறிந்து, அதன்படி குழந்தைகளுக்கெனத் தனியறை விடப்பட்டது, 1893-ம் ஆண்டில் மின்னியாபோலிஸ் என்ற நகரிலுள்ள நூல் நிலையத்தில்தான். அன்று முதல் மற்ற எல்லா நூல் நிலையங்களிலும் இந்த முறையை மேற்கொண்டனர்.

குழந்தைகளின் தனி யறையில் அவர்களுக்கென்று புத்தகங்கள் நிறைய இருக்கின்றன. இம்மாதிரியான புத்தகங்களை வெளியிடுகின்றவர்கள் குழந்தைகளின் போக்குக்கு இசைந்த முறையில் எழுத, ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள்.

குழந்தைகளுக்காக வெளிவரும் புத்தகங்களில் அமெரிக்க தேசம் முழுவதும் ஆர்வங் கொண்டுள்ளது. இந்த ஆர்வத்தை மக்கள் அனைவரும் அறியவும், பங்கெடுத்துக்கொள்ளவும் ஆண்டுதோறும் 'குழந்தைகளின் புத்தக வாரம்' ஒன்று கொண்டாடுகின்றனர். இதை அதிவிமரிசையாகக் கொண்டாட அமெரிக்க நூல் நிலையச் சங்கம், அமெரிக்கச் சிறுவர் சாரணர் சங்கம், அமெரிக்கச் சிறுமியர் சாரணர் சங்கம் போன்ற சமூக முன்னேற்றக் கழகங்கள் கூடி நடத்துகின்றன. அம்மாதிரி விழாக்களில், குழந்தைகளின்

உலகத்தின் எதிர்காலத்தைச் சுபிட்சமானதொரு நிலையில் வைக்க வேண்டுமானால், இன்றைய உலகக் குழந்தைகளின் மனத்திலே அதற்கு வித்துப் போட வேண்டும். இந்தப் புனிதத் தொண்டு இன்று அமெரிக்காவிலே நடக்கிறது.

தாய் தந்தையர் ஆசிரியர் முதலிய வர்களுக்குக் குழந்தைப் புத்தகம் எழுதும் எழுத்தாளர்களை அறிமுகம் செய்து வைக்கின்றனர். இதனால், எழுத்தாளர்கள் தாய் தந்தையரின் விருப்பத்துக்கேற்ற வாறும், ஆசிரியரின் நோக்கங்களுக்கு இசைந்தவாறும் தங்கள் புத்தகங்களை அமைக்க உதவியாய் இருக்கிறது. இந்த வார விழாக் கொண்டாட்டத்தின் போது புத்தகக் கடைக்காரர்களும், புத்தக வெளியீட்டாரும் தங்களுடைய புத்தகங்களை அனைவரும் பார்த்து மகிழும்படி விளம்பரங்கள் செய்கிறார்கள். நாடெங்கும் உள்ள பத்திரிகைகள், தினசரித் தாள்கள், மாசச் சஞ்சிகைகள் இந்த வார விழாவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கின்றன.

வருஷத்தில் ஒரு வாரத்தில் தான் இந்தக் கேளிக்கை என்று சொல்ல முடியாது. வருஷ முழுவதும் குழந்தைகள் புத்தகங்கள் படிப்பதில் ஈடுபடுமாறு செய்யப் புத்தகச் சங்கங்கள் பாடுபடுகின்றன.

வயசுக் கேற்றவாறு, ஆறு வயசு முதல் எட்டு வயசு வரை, ஒன்பது வயசு முதல் பதினொன்று வரை, பன்னிரண்டு முதல் பதினாறு வரை என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து, அவர்களுடைய அறிவு முதிர்ச்சிக் கேற்றவாறு புத்தகங்கள் தேர்ந்தெடுப்பதில் ஆசிரியர்கள், புத்தக நிலையத்தார், தாய் தந்தையர்முதலியோராலேயே தொடங்கப்பட்ட 'இளம் அமெரிக்கா' என்ற சங்கமும், புத்தகச் சங்கங்களும் ஊக்கத்தோடு உழைக்கின்றன.

சில புத்தக வெளியீட்டார், குறைந்த விலையில் கைக்கு அடக்கமான, சட்டப் பையில் வைத்துக்கொள்ளக் கூடிய அளவில் புத்தகங்கள் வெளியிட்டுச் சிறுவர்களுக்கு உதவி புரிகின்றனர்.

இம்மாதிரியான விளம்பரங்களே யன்றி, ரேடியோ மூலமும் குழந்தைகளின் ஆர்வத்தைப் பெருக்குகின்றனர். ரேடியோ நிகழ்ச்சி நிரலில், குழந்தைகள் புத்தகங்களைப் படிக்கத் தூண்டும் முறையில் சில கவர்ச்சியான விஷயங்கள் வெளிவரும். புத்தகங்களின் எண்ணிக்கையை மட்டும் அதிகமாக்கிவிட வில்லை. கதைகளின் கட்டுக்கோப்பு, குழந்தைகளுக்கு ஏற்றதாயும், நடை, எளிய இனிய முறையில் அமைந்ததாயும், புத்தக வெளித்தோற்றம் அழகிய முறையிலும் இருக்குமாறு செய்துள்ளனர். குழந்தைகளுக்குப் பிடித்தமான விஷயங்களையே எழுதுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். எழுதப்பெறும் கதைகளும் கட்டுரைகளும், சுயமாக எண்ணிய சொந்த விஷயங்களைக் கொண்டவையாக இருக்க வேண்டும்.

புத்தகங்கள் — புத்தகங்கள் மட்டுமல்ல எந்த விஷயமும்தான்-முன்னேற்ற மடைய வேண்டுமாயின், அதிலுள்ள குறைபாடுகளை எடுத்துரைக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்தக் குறைகளை நீக்கி, நல்ல முறையில் அமைக்கலாம். நல்ல மதிப்புரையின் நோக்கம், குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அவைகளைக் களைந்தெறிய வழியும் காட்டி, மேம்பாட்டை எடுத்துரைப்பதாக இருக்க வேண்டும். இத்தகைய லட்சிய மதிப்புரைகள் அடங்கிய அமெரிக்கப் பத்திரிகைகள், செம்மையான

முறையில் புத்தகங்கள் வெளி வர உதவியாக இருக்கின்றன.

புத்தகங்களின் தரத்தை உயர்த்த எழுத்தாளர்களிடையே போட்டி மனப்பான்மை வேண்டும். ஆகவே, மேன்மையான, முதல் தரமான புத்தகத்துக்குப் பரிசு வழங்கும் பழக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பரிசு வழங்கும் ஏற்பாடு எழுத்தாளருக்கு மட்டுமேயன்றி, புத்தக வெளியீட்டாருக்கும் அவசியம்தான்.

இந்த உண்மைகளை அறிந்து, திறம்படக் கையாளுகின்றனர் அமெரிக்கர். ஒவ்வொரு வருஷத்திலும் முதல்தரமான கதை எழுதுவோருக்குப் பரிசு வழங்கப்படுகிறது.

குழந்தைப் புத்தகங்களில் அழகிய படங்கள் நிறைந்த புத்தகத்துக்கென்றும் ஒரு பரிசு உண்டு. இன்றைய அமெரிக்கப் பிரச்னைகளை ஒட்டி எழுதப் பெறும் புத்தகங்களில் முதல் ஸ்தானம் வகிக்கும் புத்தகத்திற்குப் பரிசு கொடுக்கிறார்கள். இந்த நோக்கம் முழுப் பயனை அடைந்துள்ளது. இன்றுள்ள பிரச்னைகளைப் பற்றி எழுதும் புத்தகங்கள்தாம் மக்களிடையே சமாதானத்தை நிலைநாட்ட உதவும். எதிர்கால அமெரிக்கப் பிரஜைகளாகிய அமெரிக்கச் சிறுவர் சிறுமிகள், பிற இனத்தாரிடம் சகிப்புத் தன்மை காட்டுவது, பிறருடன் மனக் கசப்பின்றிப் பழகுவது முதலியவற்றைக் கற்றுத் தெளிந்து, அகமும் புறமும் தூயராய், நல்லொழுக்கத்துடன் வாழும் வகையை அறிந்துகொள்ளுகின்றனர்.

தேசத் தலைவர்களின் வரலாறுகளைப் பிரசுரிப்பதும் நல்லதல்லவா? பிற நாட்டு அறிஞர்களின் வாழ்க்கைச் சரிதத்தைப் படித்து, அவர்களின் மேம்பட்ட குணங்களைப் பின்பற்றி, சிறுவர்களும் பெருமை அடைய அவை பயன்படுகின்றன.

வீரர்களின் அரும்பெரும் வீரச் செயல்கள், பேய் பிசாசுக் கதைகள், பழக்க வழக்கங்கள், இசைக் கலை, விஞ்ஞானம், சரித்திரம் போன்ற எண்ணற்ற விஷயங்களைப் பற்றிக் குழந்தைகளுக்குப் புத்தகம் எழுதப்படுகின்றன.

இப்பொழுது அமெரிக்காவில் குழந்தைகளுக்கென்று பிரசுரிக்கும் புத்தகங்கள் பல விதங்களில், இதுவரை வெளிவராத முறையில் அமைந்துள்ளன. நூல் நிலையத்திலுள்ள அலமாரிகளில் அடுக்கி வைத்திருக்கும் புத்தகங்கள், பல வர்ணங்களில் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கின்றன. அழகான புத்தகங்கள்தாமே சிறுவர்களைப் படிக்கத் தூண்டும்?

✲

அவகாசம் தேவை!

சினிமாக் கதை எழுதும் கை கார்ல்டன், ஒரு முறை நாட் குட்வின் என்ற ஹாஸ்ய நடிகரைச் சந்தித்தார்:

"கு...கு...ட்...வின்!...ஒ...ஒ...ரு... ப...ப...பதினை...ஞ்சு நி...நிமிஷம் உ...உ...ம்முடன் இ....இருக்கலாமோ?" என்றார் எழுத்தாளர்.

"ஓ, பேஷாக! என்ன காரியம்?" என்றார் குட்வின்.

"இ...இல்லே... உ...உங்களுடன் ஒரு அ...அ...அஞ்சு நிமிஷம் பே...பேசணும்!" என்று பதில் சொன்னார் கார்ல்டன்!

—ஸ்கோப்

நிறுவையும் அளவையும்

சக்கரவர்த்தி
ராஜகோபாலாச்சாரியார்

தற்போது வழக்கத்தில் இருக்கும் நீட்டல், நிறுத்தல், முகத்தல் அளவைகளில் உள்ள கஷ்டங்களையும், அவைகளைத் தசாம்ச முறையில் மாற்றியமைப்பதால் உள்ள நன்மைகளையும் தெளிவாக எடுத்து விளக்குகிறது இந்தக் கட்டுரை.

நம்முடைய நாணய மாற்று, தசாம்ச முறையில் இருக்க வேண்டும் என்று கூடிய சீக்கிரம் மத்திய சட்ட சபையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்படும். அதன்படி அந்த நாணய மாற்று முறையில் அணாக்களும் தம்பிடிகளும் இடம் பெறா. 100 செண்ட்கள் கொண்டது ஒரு ரூபாய். ஒரு செண்டின் மதிப்பு, கிட்டத்தட்ட இரண்டு தம்படிகள். ஐந்து செண்ட், 10 செண்ட், 25 செண்ட், 50 செண்ட்டுதான் பழக்கத்திலிருக்கும் சில்லறைக் காசுகள். இம்மாதிரி இல்லாமல், இன்னும் சுலபமாகவும் செளகரியமாகவும் சில்லறைக் காசுகளைப் பிரிக்கலாம்; ஆனால், அவை யாவும் ரூபாயை 100 சிறு பிரிவுகளாகப் பிரிப்பதைத்தான் அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டும். இம் முறை, இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளாகிய மலேயா, சிலோன் நாடுகளில் புழக்கத்திலிருக்கும் நாணய மாற்று முறையுடன் நம் நாட்டு முறையையும் ஒன்றுபடுத்தும். ஆனாலும், நம் நாட்டில் ரூபாய்தான் பண விஷயங்களைக் கணக்கிடும் மூல அளவாகக் கருதப்படும். இம் முறையைக் கையாளுவதால் வரவு செலவுக் கணக்கு எழுதுவது, கூட்டல் கழித்தல் செய்வது முதலியன சுலபமான வேலைகளாக இருக்கும்.

நாணய முறையில் மாறுதல் ஏற்பட்டால், அந்த மாறுதலுக்கு உடனடியாக நம் நாட்டில் குழம்பிக் கிடக்கும் நிறுத்தல் அளவை முறையும் மாற வேண்டியது அவசியம். ஆகவே, நம் நாட்டு நிறுத்தல், முகத்தல், நீட்டல் அளவைகளும் ஒழுங்கான, தசாம்ச முறையைப் போல் அமைவதுதான் நல்லது.

தசாம்ச முறைதான் உலக முழுவதும் பரவி இருக்கிறது. எல்லா நாட்டு விஞ்ஞானிகளும் இந்த முறையைத்தான் அநுசரிக்கின்றனர். மெட்ரிக் முறையில் நீட்டல் அளவு, பரிமாண அளவு, கனபரிமாண அளவு முதலியவற்றின் மூல அளவைகள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டுள்ளன. ஒரு மீட்டர் என்பது. நீட்டல் அளவையின்

ஆயிரம் சீரெடை=கிலோக்ராம்; சீரெடை=கிராம் கோல்=மீட்டர்; ஆயிரக்கோல்=கிலோமீட்டர்; மூல அளவை=யூனிட்; மூலப் பொருண்மை அளவு=யூனிட் ஆஃப் வெய்ட்; கீழ் நூறுகோல்=சென்ட்டி மீட்டர்; கீழ்ப் பத்து கோல்=டெசிமீட்டர்; செறிவு=டென்ஸிடி; பரும கீழ்ப் பத்து கோல்=க்பியூக் சென்ட்டிமீட்டர்; மேல் வரம்புச் செறிவு=மாக்ஸிமம் டென்ஸிடி; ஆதார மூல அளவை=ஃபண்டமென்ட்டல்; அனற் பதன்=டெம்பரேச்சர்; தசாம்ச முறை=மெட்ரிக் ஸிஸ்டம். (இந்தத் தமிழ்ப் பதங்கள், ராஜாஜி எழுதிய ‘தமிழில் முடியுமா?’ என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப் பெற்றது.)

சிறுகதைகள்

பெண்சாதி கதைத் தொகுப்பு	1	0
முதல் சந்திப்பு கதைத் தொகுப்பு	1	0
பழிக்குப் பழி கதைத் தொகுப்பு	1	0
கதைக் கடல் 1	0	12
கதைக் கடல் 2	1	0
கதைக் கடல் 3	1	0
சிங்காரி மஞ்சேரி ஈச்வரன்	3	0
சஞ்சீவி 'குகப்ரியை'	3	4
சரித்திரக் கதைகள் சுப்ரமணிய ஐயர்	1	4

நாவல்கள்

வனிதாலயம் சகுந்தலாராஜன்	2	0
பவானி 'லக்ஷ்மி'	2	0
வானவில் வாண்டா வாஸிலேவ்ஸ்கா	5	0
காதல் ,,	3	12
சுந்தரி வ. ரா.	5	0
ஜெய காதல் கீதம் துர்கனேவ்	0	8

சக்தி காரியாலயம்

சென்னை-14

கூந்தல் வளர்ச்சிக்கு
நீங்களே தைலம் செய்ய
காஷ்மீர்குஸும்
60 வருஷ
நம்பிக்கை பெற்ற
ஓர் சிக்கன முறை
ஆதித்யா ஏஜன்ஸீஸ்
54, பந்தர் தெரு :: மதறாஸ்.

அவசிய குடும்ப-சஞ்சீவி
333
ஸான்டலக்ஸ்
நறுமண சரும-ரக்ஷிணி
PUBLICITY: UNICOM, MADRAS.

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்தியசாலை' நஞ்சன்கூடு
ஜ்வரேக்
எவ்வித ஜ்வரங்களுக்கும்
குழந்தைகளுக்கு
காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை
கர்ஜன்
கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ்
பேதியாக மாத்திரை

கூலெக்ஸ்
உஷ்ண சமன ஸ்நான தைலம்
பல் உபாதைகளை கண்டிக்க
I. D. L. மெடிகேடட்
நஞ்சன்கூடு பல்பொடி

சிறந்த மைசூர் ஊதுவத்திகள்
பிரேமலீலா
அகர், ஜவ்வாது, ஜெயலக்ஷ்மி
சோல் ஏஜண்டுகள்:
யுனைடெட் கன்ஸர்ன்
54, பந்தர் தெரு : மதராஸ்
மதுரை: 42, தெற்காவணி மூலவீதி
கோவை: 234, ராஜா தெரு
பம்பாய்: 277, தேவதார் ரோடு, மாடுங்கா

கடகம்
(தமிழ் நாடு டாக்கீஸ்)
Direction:
ACHARYA
Studio:
MODERN
Producer.... K.P.VARADACHARI.

மூல அளவை மீட்டரின் பிரிவுகள் எல்லாம் தசாம்ச முறையில் அமைந்துள்ளன அதாவது ஒரு மீட்டரைப் பத்தில் ஒரு பாகம், நூறில் ஒரு பாகம், ஆயிரத்தில் ஒரு பாகமாகப் பிரித்திருக்கும். மீட்டரைக் காட்டிலும் அதிக நீளமுள்ள அளவுகளும், மீட்டரைப்பத்து, நூறு, ஆயிரம் முதலியவற்றால் பெருக்கப்பட்டவைகளாகத்தா மிருக்கும். சதுரக் கோலால் பரப்பை அளக்கிறார்கள். அம்மாதிரியே கனபரிமாணத்தை அளிக்கவும் கன சதுரக் கோல்களை உபயோகிக்கின்றனர். 4 டிக்ரி (4 ° C) அனற் பதனில் ஒரு பரும கீழ் நூறு கோல் மேல் வரம்புச் செறிவு கொண்ட நீரின் பொருண்மை அளவைத்தான் தசாம்ச முறையில் மூல அளவாகக் கொண்டுள்ளனர். இந்த மூலப் பொருண்மையளவைக்குத்தான் சீரெடை என்று பெயர். நாம் இந்தத் தசாம்ச முறையை அநுசரித்தால் மூல நீட்டலளவான கீழ் நூறு கோல் நாம் பழக்கத்தில் கொண்டுள்ள அங்குலத்தின் இடத்தை பிடுங்கிக்கொள்ளும். ஒரு பின்ட் அல்லது சேர் என்று நாம் கன அளவைக் குறிப்பதை, தசாம்ச முறையில் லிட்டர் என்று சொல்லலாம். ஒரு லிட்டர் என்பது கீழ்ப்பத்து கோலை, நீளம், அகலம், உயரமாகக் கொண்ட சதுரப் பெட்டியின் பரிமாணம். பொருண்மை அளவில் (வெயிட்) ஓர் அவுன்ஸ் அல்லது தோலா என்பதற்குப் பதிலாக ஒரு சீரெடை என்று சொல்லலாம்.

ஒரு கீழ் நூறு கோல் என்பது ஓர் அங்குலத்தில் மூன்றில் ஒரு பாகத்தைவிடக் கொஞ்சம் பெரியது. உதாரணமாக, சுண்டு விரல் நுனியின் அகலம் இருக்கலாம். நூறு கீழ் நூறு கோல் கொண்டது ஒரு கோல். அந்தக் கோல் ஒரு கஜத்தைக் காட்டிலும் நீளம் அதிகம்; ஏறக்குறைய 39 அங்குலம் இருக்கும். நீட்டளவைப் பொறுத்த மட்டில் பிரிட்டிஷாருடைய அளவையாகிய அங்குலம், கஜம் முதலியவை இந்தியா முழுவதும் புழக்கத்தில் இருக்கின்றன. அங்குலம், கஜம் இவைகளுக்குப் பதிலாக கீழ்நூறு கோல், கோல் முதலியன நீட்டலளவையில் இடம் பெறச் செய்வதை, மற்ற நாட்டு நீட்டலளவைகளோடு ஒத்து இருக்கும்படி செய்யும் சீர்திருத்தம் என்று தான் கொள்ள வேண்டும்.

கன பரிமாணத்தைப் பொறுத்த வரையில் தசாம்ச முறையில் இருக்கும் லிட்டரைத் தான் நம்முடைய சேருக்குப் பதிலாகக் கொள்ள வேண்டும். ஒரு லிட்டர் ஒரு சேரைக் காட்டிலும் அளவில் பெரிது. நமது பால்காரன் அவன் கொடுத்த 11 சேருக்குப் பதிலாக 10 லிட்டர் பாலுக்குத்தான் பணம் கேட்க வேண்டும். ஒரு லிட்டரை 10 சிறிய ஆதார மூல அளவுகளாகப்பிரிக்க வேண்டும்.

சேர் முதலியவற்றிற்குப் பதிலாக, லிட்டரும் அதற்குச் சிறிய அளவைகளும் நடை முறையில் இருக்கும். லிட்டருக்கு மேற்பட்ட பெரிய அளவைகள் பத்து லிட்டர், நூறு லிட்டர், ஆயிரம் லிட்டர் என வழங்கப்படும். இந்த முறை எளிதாக யாவரும், கற்றவரும் மற்றவரும் புரிந்து கொள்ளக் கூடும். பொருண்மை அளவையில் மூல அளவை ஒரு சீரெடை. ஆயிரம் சீரெடை ஒரு சேரைக் காட்டிலும் பெரிது.

இந்தியாவில் வழங்கப்படும் ஒரு சேர் 933 கிராமுக்குச் சமம். நமது சேர் அளவைச் சிறிது— அதாவது ஒரு சேரில் பத்தில் ஒரு பங்குக்குக் குறைவான பகுதியை — அதிகப்படுத்தினால், தசாம்ச முறையில் வழங்கும் ஆயிரம் கிராமுக்குச் சமமாகும்.

தசாம்ச முறைப்படி நாம் நீட்டலளவை, பொருண்மையளவை, கனபரிமாண அளவை முதலியவைகளை மேற்கொண்டால், முறையே கோல், ஆயிரம் கிராம், லிட்டர் என்னும் அளவைகளை உபயோகிக்க வேண்டும். அவற்றை அப்படியே ஆங்கிலப் பெயர்களோடுதான் சொல்ல வேண்டும் என்னும் கட்டாயமும் கிடையாது. சேர் என்ற பெயரை மட்டும் வைத்துக்கொண்டு, அளவில் பெரிதாக்கி ஓர் ஆயிரம் கிராம் நிறை யுள்ளதாகச் செய்யலாம். இன்று நம் நாட்டில் வழங்கும் சேர்களிலும்கூட வெவ்வேறு இடங்களில் அவற்றின் நிறை வேறுபடுகின்றது. ஒருசில மாகாணத்தில் 82 தோலா கொண்டது ஒரு சேராகவும், மற்ற மாகாணங்களில் 40 தோலா கொண்டது ஒரு சேராகவும் வழக்கில் இருக்கின்றது. தசாம்ச முறைப்படி நாம் ஒரு சேரின் அளவைச் சரி செய்துவிட்டோமானால், நாடெங்கும் ஒரு மாதிரியான, 90 தோலா கொண்ட சேரே இடம் பெற்றிருக்கும். தானிய வகைகள், பால், எண்ணெய் முதலியவற்றை அளக்க அந்தச் சேரையே உபயோகப்படுத்தலாம். ஆனால், அந்தச் சேர் இப்பொழுது இருக்கும் சேரைக் காட்டிலும் அளவில் பெரியதாக இருக்கும்; அவ்வளவுதான்.

நீட்டலளவையி லுள்ள அடி மாறுது; ஆனால், அதன் நீளம் மட்டும் இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் அதிகமாக, ஒரு கோலுக்குச் சமமாக இருக்கும். சேரின் அளவு மாகாணத்துக்கு மாகாணம் வேறுபடுவது மட்டுமல்லாமல், ஜில்லாவுக்கு ஜில்லாவும் வித்தியாசப்படுகிறது.

இப்பொழுது வழங்கப்படும் நீட்டலளவை, நிறுத்தலளவை, முகத்தலளவையில் இருக்கும் வேறுபாடுகளும், குறைபாடுகளும், நமது அளவை முறையையே கீழ்த்தரமான நிலையில் வைத்திருக்கின்றன; குழப்பம் நிறைந்திருக்கிறது. இதை மாற்றியமைப்பது அவசியம். அதற்கு நாம் தசாம்ச முறையைத்தான் கையாளுகிறோமோ இல்லையோ, இதை மாற்றித்தான் அமைக்க வேண்டும். நாம் ஒரு சீர்திருத்தப் பணியை மேற்கொண்டு அதைச் செய்யும் பொழுது, அந்தத் தருணத்தைக் கைவிடாமல், பயன்படுத்திக்கொள்ளுவதுதான் அறிவுடைமை. ஆகவே, உலகத்தில் பல நாடுகளிலும், விஞ்ஞானிகளிடையேயும் வழங்கும் தசாம்ச முறையை அநுஷ்டித்து உலகோடு சமமாக நிற்க வேண்டும். அடியையும் நமது சேரையும், அளவில் முறையே ஆயிரம் கிராமாகவும் லிட்டராகவும் மாற்றி அமைத்து, இப்பொழுது அளவை முறையிலும், நாணய மாற்று முறையிலும் நிலவும் குழப்பத்தை ஒழித்து, இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான அளவையைக் கையாளச் செய்தால், இந்தியா பிற நாடுகள் கொண்டுள்ள அளவை முறையைக் கொண்டுள்ளதாகச் செய்யலாம்.

முதன் முதலில் இந்திய நாட்டில் தான் தசாம்ச முறை தோன்றியது என்பது பலரும் அறிந்த

விஷயம். ஆகவே, இந்தியா தனக்குச் சொந்தமான தசாம்ச முறையைக் கையாண்டு, சர்வ தேசத்துடன் அளவை முறைகளில் ஒன்றுபட்டு நிற்பது முற்றிலும் பொருத்தமானது. நமது உள்நாட்டு வியாபாரம் முன்போல் அல்லாமல் ஜில்லாக்களையும் தாண்டிப் பிற மாகாணங்களுக்கும் பரவிவிட்டது. அதனால், ஒரேமாதிரியான அளவை முறை அவசியம்.

கலையில் வேறுபாடுகளும், பலதிறப்பட்ட பண்புகளும் வரவேற்க வேண்டிய விஷயம்தான்; ஆனால், சமூக வாழ்வுக்கு அடிப்படையாக அமையும் பண்டமாற்று, நாணய மாற்று முதலியவற்றில் ஒன்றுபட்ட ஒரே கொள்கை அவசியம். நாம் வியாபார விருத்தியில் ஈடுபட்டு உழைக்கும் பொழுது, 'குண்டு சட்டிக்குள் குதிரையை ஓட்டும்' குறுகிய எண்ணத்தை அறவே ஒழிக்க வேண்டும்.

நாம் தசாம்ச முறையை அநுஷ்டானத்துக்குக் கொண்டு வரும் பொழுது, மேலை நாட்டில் உபயோகிக்கப்படும் லத்தீன், கிரேக்க மொழிகளை உபயோகப் படுத்த வேண்டியதில்லை. நம் நாட்டில் வழங்கும் அளவுகளின் பெயர்களையே உபயோகப் படுத்தலாம் என்று பலரும் அறியத்தான் இதை எழுதுகிறேன். இந்தியாவில், கோலுக்கு அடி என்றும், ஆயிரம் சிரெடைக்குச் சேர் என்றும் அழைக்கலாம். அம் முறைப்படி ஓர் அடிக்குப் பன்னிரண்டு அங்குலம் இருக்காது. அதைப் பத்துச் சிறு பாகங்களாகப் பிரித்து விடவேண்டும். மிகச் சிறிய அளவு கொண்டவற்றை அளக்க, அடியை நூறு சிறு பாகங்களாகப் பிரிக்க வேண்டும்.

ஒரு சேரை இப்பொழுது இருப்பது போல எட்டு அல்லது பதினாறு சிறு பாகங்களாகப் பிரிக்காமல், பத்துச் சிறு பாகங்களாகப் பிரிக்கவேண்டும். அதே போல ஒரு சேருக்கு மேற்பட்டவற்றை நிறுக்க 10 சேர், 100 சேர், 1000 சேர் என்று அளந்து கொண்டே போகலாம்.

இந்தியாவில் யாருக்கும் மணு என்றால் என்ன என்றே தெரியாது. வங்காளத்தில், 40 சேர் அல்லது 3200 தோலா கொண்டது ஒரு மணு; ஆனால், சென்னையில் ஒரு மணுவுக்கு 960 தோலாதான். எளிதில் யாருக்கும் விளங்குமாறு ஒரு மணு என்பது புதிய முறைப்படி 50 சேர் என்று சொன்னால், சுலபமாகப் புரிந்துகொள்ளுவார்கள். அயல் நாட்டாரும் உடனே அது எத்தனை ஆயிரம் சிரெடை என்று அறிந்து கொள்ளுவார்கள். எவ்வளவு உள்ள கஷ்டங்களையும் பெரிதாக்கி ஆக்ஷேபணை செய்யலாம்.

பழமையில் உள்ள அபார மோகத்தைக் காரணமாகக் கொண்டு விவாதிக்க முன்வரலாம். ஆனால், கணித்தல் வேலைகளில், தவறு செய்யாதிருக்கச் சுலபமாகவும், செய்ய உபயோக முள்ளதாகவும் உள்ள முறை தான், நவநாகரிக உலகத்தில் நீட்டல், நிறுத்தல், முகத்தல் அளவைகளில் அறிவுக்குகந்த முறையாகும்.

✲

நமது கோஷம்

ஆகுக—ஆக்குக ! இதுவே நமது கோஷம். —*ஸ்வாமி விவேகானந்தர்*

ராஜாவின் ரயில் வண்டி

‘ பிரயாணி ’

சென்ற ஆண்டு மார்ச்சு மாசம் பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து ஓர் அறிக்கை வெளி வந்தது. அரச தம்பதிகள் தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்யப்போகிறார்கள் என்பதுதான் அந்த அறிக்கை. இந்தச் சுற்றுப் பிரயாணத்திற்கு, மூலகாரணமா யிருந்தவர் தென் ஆப்பிரிக்கப்பிரதமமந்திரிஸ்மட்ஸ் தான். தென் ஆப்பிரிக்க யூனியன் 1909-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பெற்றது. யூனியன் ஸ்தாபிதத்துக்குப் பிறகு, முதன் முறையாக ஆட்சி செலுத்துகின்ற அரசர் தென்னாப்பிரிக்காவுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்ய வருகிறார்.

சுற்றுப் பிரயாணத்தின் போது அரசர் தங்குவதற்காகத் தனி இட வசதியும் மற்ற வசதிகளும் செய்வதற்கு ஏராளமான பணம் செலவழியும். இந்த வீண் செலவைத் தவிர்க்க, மன்னரின் விருப்பப்படி, சகல வசதிகளும் அமைக்கப்பெற்ற ஒரு தனி ரயில் வண்டி புதிதாகக் கட்டப் பட்டது. இந்த ரயில் வண்டி ஓரிடத்தி லிருந்து மற்றோ ரிடத்துக்குப் போகச் சௌகர்யமாக இருப்பதோடு, தங்குவதற்கு ஹோட்டலாகவும், மன்னர் அரசாங்க விஷயங்களைக் கவனிக்க ஆபீசாகவும் இருக்கிறது.

அரசர் குடும்பத்தினருக்கும், அவருடன் செல்லும் மற்ற அரசாங்க உத்தியோகத்தினருக்கும் 14 பெட்டிகள் கொண்ட வண்டித் தொடர் தேவை என்று கண்டு, அரசருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் தனியாக 8 பெட்டிகள் செய்தார்கள். மற்ற ஆறு வண்டிகளையும் தென் ஆப்பிரிக்க வண்டித் தொடரிலிருந்து எடுத்துக்கொள்ள முடிவு செய்தார்கள்.

இந்த 8 பெட்டிகளையும் செய்யச் சாதாரணமாக இரண்டு வருஷங்கள் பிடிக்குமாம். ஆனால், சுற்றுப் பிரயாணத்துக்கு என்று அதிவிரைவாக ஒன்பது மாசங்களில் முடித்துவிட்டனர். இதை மூன்று கம்பெனியார் செய்தார்கள். பெட்டிகள் கட்டுவதை ஒரு கம்பெனியார் சிறப்பாகச் செய்து முடித்தார்கள். உட்புறத்தில் அழகுபட எல்லாச் சௌகர்யங்களையும் செய்து கொடுத்தனர் மற்றொரு கம்பெனியார்.

வண்டிக்குள் விளக்குகளும், காற்றோட்ட வசதியும், ஒரே சீதோஷ்ண ஸ்திதி நிலவும்படியும் செய்தனர் மூன்றாவது கம்பெனியார்.

சலூன்கள் எல்லாம் எஃகினால் செய்யப்பட்டு, உட்புறம் விலையுயர்ந்த மரக் கட்டைகளினால் மூடப்பெற் றிருக்கின்றன. இதற்கு வேண்டிய மரம் ஆப்பிரிக்காவி லிருந்து கொண்டு வரப் பட்டது.

வண்டிக்குள் இருக்கும் காற்றை ஒரே சீதோஷ்ண ஸ்திதி

இல்லஸ்ட்ரேடட் பத்திரிகையி லிருந்து எடுக்கப்பட்ட இந்தக் கட்டுரை, பிரிட்டிஷ் மன்னர் தம்பதிகளின் தென்னாப்பிரிக்க விஜயத்தை முன்னிட்டுப் பிரத்யேகமாகச் செய்யப்பட்ட ரயில் வண்டியைப் பற்றிக் கூறுகிறது. ‘படாடோபமான அநாவசியமான பொருள் எதுவும் இல்லை’ என்று கூறுவதுதான் அதிசயம்.

மாப்பிள்ளை என்ன விலை?

88869
600 008.

பார்வதி என்ன பாட்டி, உங்கள் பேத்தியைப் பெண் பார்க்க யாரோ வந்திருந்தாப்லே இருக்கே? கல்யாணம் நிச்சயமாயிடுத்தா?

பாட்டி அந்த வயிற்றெரிச்சலே ஏன் கேக்றே! என் பேத்தி, பார்க்கறத்துக்கு அழகாயில்லையாம். தலையிலே மயிர் நிறைய இல்லையாம். அதனாலே, பேசினதுக்கு மேலே ஆயிரம் ரூபாய் கூடக் கொடுத்தாத்தான் கல்யாணம் பண்ணிக்குவாளாம்!

பார்வதி அழகுதான்! இந்தமாதிரி மனுஷாளோடே சம்பந்தம் பண்ணவே கூடாது. நான் சொல்றபடி செய்யுங்கோ. ஒரு பாட்டில் ஜாப்கோ ஸ்னோவும் ஒரு பாட்டில் ஜாப்கோ ஹேர்க்ரோயரும் வாங்கிக் கொடுத்து உங்கள் பேத்தியைத் தவறாமல் தினம் உபயோகிச்சுண்டு வரச் சொல்லுங்கோ. கொஞ்ச நாளில் அவள் எவ்வளவு லக்ஷணமாகி விடறாள்னு பாருங்கோ!

(ஒரு மாதத்திற்குப் பின்)

பாட்டி அம்மா பார்வதி, நீ சொன்னபடியே என் பேத்தி ஜாப்கோ ஸ்னோவையும் ஹேர்க்ரோயரையும் உபயோகிக்க ஆரம்பித்தாள். கொஞ்ச நாளில் அவள் முகம் நல்ல லக்ஷணமாயிடுத்து. தலையிலேயும் கறுகறுனு மயிர் அடர்த்தியா வளர்ந்துடுத்து. நேத்திக்கி ஒரு பிள்ளையாண்டான் வந்தான். வரதக்ஷிணையே வேண்டாம், பெண்ணைக் கொடுத்தாப் போரும்னு சொல்லிட்டான்! நீ மஹாராஜியாய், பதினாறும் பெத்து...

பார்வதி (சிரித்துக் கொண்டே) பாட்டி, பாட்டி வேண்டாம்! இந்த ரேஷன் காலத்திலே பதினாறு குழந்தைகளை வச்சுண்டு நான் எப்படி சமாளிப்பேன்!

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

சாரதி

கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை



யில் இருக்குமாறு வைத்து, உள்ளிருக்கும் காற்றை ஐந்து விநாடிக் கொரு முறை அப்புறப்படுத்தி, புதிய காற்றை நிரப்ப வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வெளியிலிருந்து சப்தமோ, தூசி அசுத்தக் காற்று முதலியனவோ உள்ளே நுழையாதவாறு அமைக்கப்பட்ட சாளரங்களும் உள்ளன. உள்ளிருப்பவர்களுடைய சௌகரியத்திற் கேற்றவாறு உள்ளே நிலவும் காற்றின் சீதோஷ்ண ஸ்திதியை மாற்றிக்கொள்ள, அவர்கள் ஒரு பொத்தானை அமுக்கினால் போதும்.

ரயில் ஓடும் பொழுது உண்டாகிற சப்தம் உள்ளிருப்பவர்களுக்குக் கேட்காமலிருக்கும்படி செய்திருக்கிறார்கள்.

சக்கரங்களுக்கு மேல் ரப்பர் மெத்தைகள் போட்டு, அதற்கு மேலே உட்காருவதற்கு வேண்டிய வசதிகள் செய்திருக்கின்றனர்.

உள்ளே போட்டிருக்கும் விளக்குகள் நூதனமான முறையில், மிகப் பிரகாசத்தோடு கூடியிருக்கின்றன. ஆனாலும், கண்களைக் கூசச் செய்யாமல் எங்கும் ஒரே மாதிரியான வெளிச்சத்தைக் கொடுப்பதுதான் அதில் விசேஷம்.

அரச குடும்பத்தினருக்குப் பணிவிடை செய்யும் தாதி முதல், அரச குடும்ப மருத்துவர் ஈறாக அந்த வண்டியில் செல்லச் சௌகரியங்கள் செய்யப்பட்டுள்ளன. பதினொன்கு வண்டிகளில் இரண்டு வண்டிகள் தென்னாப்பிரிக்கப் பிரதம மந்திரி ஸ்மட்ஸுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றுப்பிரயாணம் சில வாரங்கள் நீடிப்பதாலும், அரசருக்கு இதுவே தங்கும் இடமாக அமைந்திருப்பதாலும், இந்த ரயில்வண்டித் தொடரில் எல்லாச் சௌகரியங்களும் செய்யப்பட்டுள்ளன. படாடோபமான வாழ்கைக்கு வேண்டிய அநாவசியமான பொருள்கள் ஒன்றும் இல்லாமல், அவசியமானவைகள் உள்ளதாய் மட்டும் இருக்கிறது. ஓயாமல் பிரயாணம் செய்பவர்களுக்குத் தேவையான ரேடியோ, கிராமபோன் முதலிவைகள் உள்ளன.

மன்னர் பிரயாணம் செய்யும் இந்த ரயில் தொடரில் டெலி போன் அமைப்பு முறைதான் போற்றத் தக்கது. இந்த வண்டித் தொடரில் 69 டெலிபோன் கருவிகள் உள்ளன. இவை யாவும் விலையுயர்ந்த தந்தத்தினுல் செய்யப்பட்டவை. இவைகள், ரயில் ஓட்டத்தில் ஏற்படும் சப்தத்திலும், ஆட்டத்திலும் பாதிக்கப்படாமல் இருக்கத்தக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர். ஒரு பெட்டியி லிருந்து மற்ருெரு பெட்டிக்குப் 'போன்' பண்ணலாம். மேலும், ஒவ்வொரு வண்டிக்குள்ளேயும் 'போன்' செய்யலாம். இம்மாதிரியான ஏற்பாடு செய்திருப்பதால், ரயில் தொடரைத் தனித் தனிப் பெட்டியாகப் பிரித்துவிட்டாலும் அந்த அந்தத் தனிப் பெட்டிக் குள்ளேயும் 'போனில்' பேசிக்கொள்ளலாம். ஒரு பெரிய ஊரில் ரயில் நின்றவுடன், அந்த ரயில்தொடருக்கும் அந்த ஊருக்கும் டெலிபோன் மூலம் தொடர்பு வைத்துக் கொள்ளலாம். போலிஸ்காரர்கள் ரோந்து சுற்றும்பொழுது உபயோகிக்கும் 'ரேடியோ டெலி போன்' கருவி ஒன்றும் இதில் பொருத்தப்பட் டிருக்கின்றது. இதன் உதவியால் மன்னர் செல்லும் வண்டிக்கு முன்னுல் பத்து மைல் தூரத்தில் செல்லும் (பைலட்) வண்டியி லிருப்பவர்களுடன் பேசலாம். இதன் மூலம் ஆபத்துக்கள், விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்கலாம். வண்டியி லுள்ள காற்றை ஒரே சீதோஷ்ண ஸ்திதியில் வைத்திருப்பதற்காக வேண்டிய மின்சார சக்தி கீழே பொருத்தப்பட் டிருக்கும் டைனமோவி லிருந்து கிடைக்கிறது. ரயில் நின்றிருக்கும் பொழுது மின்சார சக்தியைச் சேகரித்து வைத்திருக்கும் பாட்டரிகளி லிருந்தோ அல்லது அந்த ஊரி லிருக்கும் மின்சார உற்பத்தியி லிருந்தோ எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வளவு சௌகரியங்கள் நிறைந்த இந்த ரயில் தொடரை ரயில்களுக் கெல்லாம் அரசன் என்றுகூடச் சொல்லலாம்.

இது, பிரிட்டிஷாருடைய விஞ்ஞான முன்னேற்றத்திற்கும், அவர்களுடைய தொழில் முன்னேற்றத்திற்கும், கற்பனைத் திறமைக்கும் எடுத்துக்காட்டாக அமையும். பிரிட்டன் விஞ்ஞானத்தின் உதவி கொண்டு என்னென்ன செய்ய முடியும் என்பதை நன்கு விளக்கும் ஒரு கண்காட்சி சாலை என்று இதைக் கூறலாம்.

✲

குட்டித் தத்துவவாதி

என் நண்பர் ஒரு மனேதத்துவ சாஸ்திரி; அவருடைய மூன்று வயசுப் பையன் ஒரு பக்கத்துவீட்டுப் பெண் குழந்தையைக் கீழே தள்ளிவிட்டான். இதை அவர் பார்த்து, அவனைக் கண்டிக்கப் போன போது, அவன், "நான் ஏன் அப்படிச் செய்தேன், அப்பா?" என்று கேட்டான்.

—போரம் (ஜோஹன்னஸ்பர்க்)

விருந்து லட்சணம்

ஒரு விருந்து முடிந்தபின் செய்த பிரசங்கம்:

"பட்டினி கிடப்பதற்கு என்றுவது ஒரு நாள் விமோசனம் பிறந்துதான் ஆக வேண்டும்."

—ஸ்டார்

ருஷ்ய—அமெரிக்கக் கூட்டுறவு

●

ஏர்ள் பிரௌடர்

சோவியத்—அமெரிக்க உறவு சம்பந்தமாக எழும் அடிப்படையான கேள்வி இதுதான்: ரூஸ்வெல்ட் சோவியத் யூனியனிடம் அனுஷ்டித்து வந்த ஒத்துழைப்புக் கொள்கை கேவலம் ஒரு யுத்த கால ஏற்பாடுதானா அல்லது, அது அமெரிக்கா நெடுகிலும் அநுஷ்டித்து வரக்கூடிய கொள்கையாக இருக்குமா?

இது உலகத்துக்கே ஒரு பிரதானமான பிரச்னை என்று நான் கருதுகிறேன். இந்தக் கேள்விக்கு எப்படிப் பதில் கொடுக்கப்படுகிறதோ அப்படியே—அதாவது நீடித்ததொரு சமாதானத்தை நோக்கியோ அல்லது மற்றொரு நாசகரமான யுத்தத்தை நோக்கியோ—நாம் செல்லுவோம். என்னுடைய கொள்கை அமெரிக்கா விஷயத்தில் ரூஸ்வெல்ட் அனுஷ்டித்த கொள்கையையே சந்தேகத்துக்கு இடமின்றி ஆதரிக்கிறது. நம் தேசிய நலனைப் பாதுகாக்கும் கொள்கை அது ஒன்றுதான்; நீடித்த சமாதானத்துக்கு வழி காட்டும் காரிய ரீதியான கொள்கையும் அது ஒன்றுதான்.

ஒத்துழைப்பு என்ற கொள்கையின் அஸ்திவாரம் மிகவும் பரந்துள்ளது. லட்சியம், கோட்பாடு முதலியவைகளின் அஸ்திவாரங்களைக் காட்டிலும் அது விரிந்து பரந்திருக்கிறது. ஆனாலும், ஒத்துழைக்கும் கொள்கை ஒவ்வொரு லட்சியத்தையும் சோதனை செய்து பார்க்கிறது. சமாதானத்துக்கு எந்தக் கொள்கையாவது முட்டுக்கட்டை போடுகிறது என்றால், அந்தக் கொள்கையின் அடிப்படையில் ஏதாவது ஒரு தவறு இருக்கவேண்டும்.

நான் சமாதானத்தை ஆதரித்தும், அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கும் இடையே கூட்டுறவு இருக்க வேண்டுவதை ஆதரித்தும் பேசுகிறேன். சோவியத் யூனியன் தன் அபேதவாதக் கொள்கையை உதறிவிடாமலும், அமெரிக்கா தன் முதலாளித்துவக் கொள்கையை உதறிவிடாமலும் இந்தக் காரியத்தைச் சாதித்துவிடலாம் என்று நான் சொல்லுகிறேன்.

சோவியத்—அமெரிக்கக் கூட்டுறவுதான் உலகில் நிரந்தர அமைதியை நிலைநாட்டும். ஆகவே, உலக அமைதியை விரும்பும் ஒவ்வோர் அமெரிக்கனும் மற்ற இடையூறுகளைப் பொருட்படுத்தாமல் சோவியத் — அமெரிக்கக் கூட்டுறவை ஏற்படுத்த ஏதாவது ஒன்றைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறான். சோவியத் யூனியனோடு நட்புக் கொள்ளுவதற்கு அநேக அமெரிக்கர்களின் கொள்கை இடம் கொடுப்பதில்லை. அந்த நட்பு, தங்கள் நாட்டுக்குப் பிரத்தியட்சத்தில் எவ்வளவு லாபத்தைக் கொடுக்கும் என்ற கண்ணோட்டத்துடனேயே அவர்கள் பார்க்கிறார்கள்.

ஏர்ள் பிரௌடர் அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சியின் காரியதரிசியாக இருந்தவர். இப்போது அவர் ஒருசில காரணங்களை முன்னிட்டு, மேற்படிக் கட்சியை விட்டு விலகியிருந்தாலும், அவர் தம் முற்போக்கான கருத்துக்களை விட்டுவிடவில்லை என்பதற்கு நியூரிபப்ளிக்கி லிருந்து எடுத்த இந்தக்கட்டுரையே அத்தாட்சி.

அநுதாப முள்ள ஒரு நோக்கு இருக்க வேண்டு மென்று அவர்கள் கருதாததால், அவர்கள் இருபத்தொன்பது வருஷகால மாக ருஷ்யா சம்பந்தப்பட்ட எதையும் கண்டு, பயப்பட்டும் சந்தேகப்பட்டும் வருகிறுர்கள். பதினுறு வருஷ காலமாக நம் அரசாங்கம் ருஷ்யாவைச் சர்வதேசக் குடும்பத்தில் ஒரு நபராக அங்கீகரிக்க மறுத்து வந்திருக்கிறது. இந்த இரு நாடுகளுக்கும் நடுவே கூட்டுறவு இருக்க வேண்டும் என்று எந்த அமெரிக்கனுவது பேசத் தொடங்கிவிட்டால், அவனுக்கு உடனே, 'மாஸ்கோ ஏஜெண்ட்' என்று பட்டம்சூட்டி விடுகிறுர்கள். இந்த மனேபாவம், யுத்தம் நடந்துகொண் டிருந்த போது, சோவியத் மக்களின் தியாகம்தான் அமெரிக்க மக்களின் உயிரைக் காப்பாற்றி வருகிறது என்பது தெளிவான பின்தான், தற்காலிகமாக மறைந்திருந்தது. கூட்டாக இருந்து யுத்தத்தை நடத்தியதன் பலன்கள் இன்னும் நீடித்து இருக்க நியாயம் உண்டு. ஆனல், தற்சமயம் அந்தப் பலன்களை மறந்துவிட்டார்கள். யுத்தம் முடியும் முன்னுலேயே, அமெரிக்கா வழக்கம்போல் தன் சொந்த லாபத்தைக் கவனிக்கத் தொடங்கிவிட்டது. இப்போது, யுத்தத்துக்கு முன்னிருந்த அந்தப் பகைமை மனப்பான்மை பழைய படியும், ஆனல், பின்னும் அதிகக் கோர உருவில் தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டது. அமெரிக்கர்கள் ருஷ்யாவிடம் விரோத மனப்பான்மையைக் காட்டத் தொடங்கிவிட்டார்கள்.

இப்படிப்பட்ட சோவியத் எதிர்ப்பு மனேபாவம் நிலவியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் தான், சோவியத் யூனியனுடன் நாம் கூட்டுறவு உண்டாக்கிக் கொள்ள வேண்டுமா—அதாவது நிரந்தரமான சமாதானத்தை நாம் உண்மையிலேயே விரும்புகிறேமா—என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

கொள்கை விஷயமாக அபிப்பிராய பேதங்கள் இருந்தபோதிலும், சற்று விரிந்த மனப்பான்மையோடு நடந்துகொண்டால் அமெரிக்காவால் கூட்டுறவு ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

சோவியத் நாட்டுத் தலைவர்கள் கூட்டுறவு வேண்டும் என்ற நோக்கத்தைக் கைவிட்டுவிட்டனர் என்றும், அதனல் கூட்டுறவு ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் இறங்குவதனல் பலன் ஏற்படாது என்றும் அமெரிக்கப் பத்திரிகைகள் ருஷ்ய எதிர்ப்பு அணிவகுப்பு நடத்துவது ஓர் ஆபத்தான விஷயமாகும்.

சமீபத்தில் நான் மாஸ்கோவுக்குப் போய் வந்ததன் ஒரு நோக்கம் என்னவென்றுல், இன்னும் சோவியத் நாட்டுத் தலைவர்கள் அமெரிக்காவுடன் கூட்டுறவு கொள்ள முடியும் என்று நம்புகிறுர்களா, அல்லது சோவியத் லட்சியங்களை அமெரிக்கர் எதிர்த்து வருவதும், ரூஸ்வெல்ட்டின் கொள்கை மலையேறிவிட்டதும் சேர்ந்து அவர்களுடைய நம்பிக்கையைப் பாழாக்கிவிட்டனவா என்பதைக் கண்டு அறிவதற்காகத்தான்.

இது விஷயமாக நாம் கேட்ட கேள்விக்குக் கிடைத்த தெளிவான, நேரடியான பதில் இதுதான்: சோவியத் யூனியனின் மக்களும் தலைவர்களும் அமெரிக்காவுடன் கூட்டுறவு கொள்ளுவதை விரும்புகிறுர்கள். கூட்டுறவு

குழந்தைகளுக்கு
முக்கியமானது

பேபி கிரைப்

குழந்தைக்கு
ஆரோக்கியமளிப்பது

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும் போது ஏற்படும் வயிற்றுப்போக்கு, முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தையும் தரும் சிறந்த திராவகம்.

தயாரிப்பவர்கள்:

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை



அயோடிசால்

மிகச் சிறந்த

ரத்த சுத்தி மருந்து

இது தேகத்தில் உஷ்ணம் அதிகரித்து அதனால் ஏற்படும் ரோகங்களை குணப்படுத்தி தேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும்.

ரத்தத்தை சுத்திசெய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள்:

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை

அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்

அம்ருதா

ரத்த சுத்தி திராவகம்..

கலக்கம், ஆயாசமில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.

நரம்புகளை முறுக்கேற்றுகிறது

353.A.E.

கேசரி குடீரம் லிட். மதராஸ்

கேஸரி குட்டீரம் லிமிட்டெட், மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள்:

ஸீதாராமா ஜெனரல்ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை

அரசியல் நூல்கள்

நான் மந்திரியானால்	காந்திஜி	1	0
சுயராஜ்யம் வேண்டாமா?	,,	1	0
இந்திய சுயராஜ்யம்	,,	1	0
அணுகுண்டும் அஹிம்சையும்	,,	1	4
உலக நிலை	ராஜாஜி	2	0
கிராம இயக்கம்	ஜே.ஸி. குமரப்பா	3	0
அறிஞர் மார்க்ஸ்	ஆர். ராமனாதன்	1	8
வியட்நாம் குடியரசு	,,	0	6
ரத்தக் களரி	நேதாஜி	1	8
விஜயலக்ஷ்மியின் வெற்றி		0	8
இந்தோனேஷியா	கே. அருணாசலம்	0	12
இந்திய சமஸ்தானங்கள்	,,	4	8

பொருளாதாரம்

செல்வம்	க. சந்தானம்	1	8
பொய்யும் மெய்யும்	,,	1	8
உணவுப் பஞ்சம்	மு. அருணாசலம்	1	8
காய்கறித் தோட்டம்	,,	5	0
ஐந்தாவது சுதந்திரம்	லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி	1	8

சக்தி காரியாலயம்

சென்னை - 14

கொள்ளுவது சாத்தியம் என்றும் நம்புகிருர்கள். அந்த நம்பிக்கையை அவர்கள் இழக்கவும் இல்லே. இப்படிப்பட்ட கூட்டுறவு அவசியம் என உணரும் அமெரிக்கர்கள், ருஷ்யா ஒரே பாதையிலேயே விலகாமல் போய்க்கொண்டிருக்கிறது என்ற விஷயத்தை மனத்தில் கொண்டு கூட்டுறவுக்காகப் போராட வேண்டியது மிகவும் அவசியம்.

சோவியத் நாட்டுடன் ஒத்துப்போக அமெரிக்கா மனமில்லா திருப்பதைப் போலவும், அமெரிக்கப் பத்திரிகைகள் சோவியத் நாட்டைத் தாக்குவது போலவும், சோவியத் யூனியனில் பத்திரிகை வாயிலாகவோ, அல்லதுவாய்ப் பேச்சுக்களிலோ, நம் நாட்டைத் தாக்குவதையோ, யுத்தம் என்று பிரஸ்தாபிப்பதையோ காண முடியாது. ஆனல், இவை யெல்லாம் நம் நாட்டில் சகஜமாகிவிட்டது.

'தங்கள் நாட்டுப் பாதுகாப்புக்காக, தங்கள் நாடுகளின் சேனுபலம் ருஷ்யாவின் பலத்தைவிட அதிகமாக இருக்கும் நிலேயில் - தீவிரமான நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்று பிரிட்டிஷ் மக்களும் ருஷ்ய மக்களும் கேட்கிருர்கள் என்று யுத்தத்துக்குப் பகிரங்க அழைப்பு விடும் முறையில் - ஒரு பிரசித்தி பெற்ற ராணுவ விமரிசகர், பொறுப்பான பத்திரிகை யென்று சொல்லப்படும் நியூயார்க் 'ஹெரால்ட் ட்ரிப்யூ'னில் எழுதி யிருந்தார். பாரிஸ் மகாநாட்டின்போது சோவியத் பிரதிநிதிகளின் குரூரத்தை அடக்கி, அவர்களேப் பைர்னஸின் கோரிக்கைகளே எதிர்க்கவிடாமல் செய்வதற்காக இப்படி எழுதினராம்.

இதே மாதிரி, 'பிராவ்டா' பத்திரிகையில், சோவியத்தின் ஸ்தானத்தை நம்மிடம் நிலே நாட்டிக்கொள்ளும் முறையில் பயமுறுத்தல்கள் வெளி வந்தால் அமெரிக்கர்களுக்கு எப்படியிருக்கும்?

இம்மாதிரி நாம் போய்க்கொண்டிருந்தால் முடிவு சர்வநாசம்தான்.

பாரிஸ் மகாநாட்டில், பைர்னஸ் தம்மிடம் எல்லாச் சலுகைகளேயும் கொடுத்துவிட வேண்டுமென்று கேட்கிருர்கள் என்று புகார் பண்ணினர். 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையும், அவரைத் தாங்கிப் பிடிக்கும் முறையில் ருஷ்யா, ஐரோப்பாவையே சோவியத் மயமாக்கிக்கொண்டிருக்கிறது என்று எழுதியது. வெட்ட வெளிச்சமான உண்மை என்னவென்ருல், யுத்தம் முடிந்தபின், ஐரோப்பாவில் சோவியத் மயமாக்கும் புரட்சி ஒன்றும் நடைபெறவில்லே. ஆனல், அந் நாடுகளில் எப்போதையும்விட இப்போது புரட்சி வெடி, வெடிக்கக் காத்துக்கொண்டிருக்கிறது. சோவியத் யூனியன், ஒவ்வொரு நாட்டிலும் தோன்றிய புதிய அரசாங்கங்களுடன் பரோபகார, தாராள மனேபாவத்தைக் கொண்டுள்ளது. அந்த நாடுகள் எல்லாம் அமெரிக்காவுடன் ஒத்துழைக்க வேண்டுமென்ற ஆவலால் ருஷ்யக் கொள்கைக்குக் கொடுப்பதைவிட, அமெரிக்கக் கொள்கைக்கு அதிகச் சலுகைகள் கொடுக்கின்றன. இது எதனுடைய பலன்? ரூஸ்வெல்ட் ருஷ்யாவிடம் அநுஷ்டித்த விவேகமான கொள்கையின் பலன்தான் இது. அந்த நாடுகள், இன்னும் அமெரிக்கா ரூஸ்வெல்ட்டின் கொள்கையைப்

பழையபடியும் அநுஷ்டிக்கத் தொடங்கும் என்ற நம்பிக்கையிலேயே இவ்வளவும் செய்து வருகின்றன. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் பரஸ்பரம் சலுகைகள் வழங்குவதன் மூலமும், விட்டுக் கொடுத்துக்கொள்ளுவதன் மூலமும்தான் ஒத்துழைப்புப் பூர்வமான அமைதியை நிலை நாட்ட ஒரு பொதுக் களத்தை உண்டாக்க முடியும் என்ற உண்மையைக் காண மறுப்பது சுத்தக் கபோதித்தனம்.

யுத்தத்துக்குப் பின் விடுதலை செய்யப்பட்ட நாடுகளை, இரு வல்லரசுகளின் ஒத்துழைப்பின் பேரில், ஒரு பொது அடிப்படையில் புனருத்தாரணம் செய்வதற்குச் சோவியத் யூனியன் சம்மதிக்கிறது; ஆனால், அமெரிக்கா சம்மதிக்க மறுக்கிறது.

அமெரிக்கா இந்த மாதிரிக் கொள்கையை அநுஷ்டிப்பதால், அந்த நாடுகள் தாமே அபேதவாதத்தை நோக்கிச் செல்லுகின்றன. ஆகவே, அதற்குப் பைர்னஸ்தாம் காரண கர்த்தரே ஒழிய மாலடோவ் அல்ல. எப்படியென்ருல், பைர்னஸ் அந்த நாடுகளை அமெரிக்காவுடனே அல்லது ருஷ்யாவுடனே சேரும்படியாகப் பலவந்தப்படுத்துகிருரே ஒழிய, ஒரு பொது அடிப்படையைத் தேடிக்கொள்ளச் சம்மதிக்கமாட்டேன் என்கிருர்; அந்த நாடுகளோ, சோவியத் யூனியனேடு சேர்ந்துவிடுகின்றன. அமெரிக்கா ஒத்துழைக்க மறுத்துவிடவே, அவர்கள் பரிபூரண அபேதவாதக் கொள்கையை நிலை நாட்டும் பணியை நோக்கி அசுர வேகத்தில் முன்னேறுகிருர்கள். மிச்ச, சொச்சமாக உள்ள பாசிஸ்ட்டுகளின் கொரில்லா யுத்தத்தை—பைர்னஸின் ருஷ்ய எதிர்ப்புக் கொள்கைகளில் ஆதரவு தேடும் அந்தக் கொரில்லாக்களின் யுத்தத்தை—மேற்சொன்ன நாடுகள் சமாளிப்பதற்குத் தங்கள் நாட்டுப் பாதுகாப்பை மிகவும் பலப்படுத்திக்கொண்டன.

இந்தக் காரியங்களெல்லாம் நிரந்தரமான சமாதானப் பாதையை விட்டு விலகிச் செல்லுகின்றன; ஒரு புது யுத்த அபாயத்தையும் கிளப்பிவிடுகின்றன.

நான் ஒரு விஷயத்தில் மிகவும் நிச்சயமான அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன். அதாவது, சோவியத் தலைவர்கள் புறக்கணித்துவிட்ட பைர்னஸின் கோரிக்கைகளை அமலுக்குக் கொண்டுவருவதற்காகச் சோவியத் யூனியன் மீது யுத்தம் தொடுக்க வேண்டும் என்று ட்ரூமன் அரசாங்கத்தில் உள்ள எந்தப் பொறுப்பான அங்கத்தினரும் உண்மையிலேயே அபிப்பிராயப்படுவார் என்று எனக்குத் தோன்றவில்லை.

அப்படி யாரும் நினைத்தாலும், இந்த அரசாங்கத்தினல் ஓர் ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்துவதற்கு, அது எந்தச் சக்திகளை நம்பியிருக்கிறதோ அந்தச் சக்திகள் இடம் கொடுக்கப்போவதில்லை என்று நிச்சயமாகக் கூறுவேன்.

பைர்னஸ் கொள்கையில் உள்ள ஆபத்து என்ன? அவை யுத்த பயத்தைக் காட்டுகின்றன என்பதிலோ, அல்லது அமெரிக்க அரசாங்கம் யுத்தத்தை ஆரம்பித்து நடத்திவிடும் என்பதிலோ ஆபத்து ஒன்றுமில்லை. ஆனல், அந்தக் கொள்கைகள் முட்டுக் கட்டையையும், போராட்டச் சூழ்நிலையையும் சிருஷ்டித்து,

உள் நாட்டிலும் வெளி உலகிலும் பரவியுள்ள முன்னேற்ற சக்தி களையெல்லாம் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டு, ட்ரூமன் ஆட்சிக்குத்தோல்வியை யும் வீழ்ச்சியையும் தேடிக் கொடுத்துவிடும். இதுவே ஆபத்து. இங்கே யுள்ள இந்த ஆபத்துதான் குடியரசுக் கட்சியி லுள்ள மோசமான பிற்போக் குக் கும்பலுக்குப் பலமளித்து விட்டது. இந்தக் கும்பலைச் சேர்ந்த ஹெர்பர்ட் ஹூவரைப் போன்றவர்களும் அவர்களை ஆதரிக்கும் டோரிக் கும்பலும் சோவியத் ருஷ்யாமீது அமெரிக் கர் யுத்தம் தொடுக்கும்படி தூண்டிவிடுவதற்குத் தயங்கவே மாட்டார்கள்.

ரூஸ்வெல்ட் பெற்றிருந்த பெரு வாரியான பொதுஜன ஆதரவை வாரிசு பாத்தியமாகப் பெற் றுள்ள ட்ரூமன் அரசாங்கம், ரூஸ்வெல்ட் அநுஷ்டித்து வந்த கொள்கைகளை—நிரந்தர சமா தானத்தை நிலைநாட்டச் சோவி யத் யூனியனுடைய நட்பை யும் ஒத்துழைப்பையும் நாடும் கொள்கைகளை — அமலுக்குக் கொண்டுவருவதன் மூலம் அமெ ரிக்காவை வெற்றிகரமாக முன் னேறச் செய்யமுடியும். சோவி யத் எதிர்ப்புப் போருக்குத் தலைமை தாங்கக் குடியரசு வாதி களோடு ட்ரூமன் அரசாங்கம் போட்டியிட்டு வெற்றி பெறலா மென்பது நடக்காத காரியம்.

மேலும், பைர்னஸின் கொள்கைகளில் உள்ள ஆபத்து என்ன வென்றால், அவை யுத்தத் தால் சேதப்பட்ட நிலங்களைச் சீர்திருத்திப் பண்படுத்தும் காரி யத்தைத் தாமதம் செய்வதும் தடுப்பதுமாக இருக்கின்றன. இது அமெரிக்காவுக்கு மட்டு மல்லா மல், எல்லோருக்குமே பெருங் கஷ்டமாக இருக்கிறது. இந்த நாட்டில் அமைதிக்குப் பங்கம் நேரும் ஆபத்தும் வந்திருக்கிறது. அமைதி யில்லாவிட்டால், அமெ ரிக்கச் சந்தைகளை விஸ்தரிப்ப தென்பது நடவாத காரியம். சந்தைகளை விஸ்தரிக்க வில்லை யென்றால் அமெரிக்கா பொருளா தார நெருக்கடியை நோக்கி வேகமாகச் செல்லுகிறது என்று அர்த்தம். சோவியத் யூனிய னுக்கு ஒவ்வொரு சின்ன விஷயத் திலும் சவால் விடுக்கும் நம் தற்போதைய நடவடிக்கை நம் சேனை பலத்தைக் காட்டி, யுத்தப் பூச்சாண்டியைக் காட்டும் நம் நடவடிக்கை உள்நாட்டு யுத்தத் துக்குத் தூபம் போட்டு, அகில உலகத்தையும் பய பீதியில் ஆழ்த்துவதாக இருக்கிறது.

அமெரிக்காவின் தேசிய நலனை யும் ருஷ்யாவின் தேசிய நலனை யும் ஒருங்கே பிணைப்பது அவ்வ ளவு கஷ்டமான காரியமா? நான் துணிந்து கூறுவேன், அது கஷ்டமான காரிய மல்ல; நட வாத காரியமு மல்ல. அதை ஒரு கடமை என்று எடுத்துக் கொண்டால் அந்தக் காரியத்தை நாம் செய்து முடிக்க முடியும்.

தேச நலன் என்ற விஷயத்தில் அமெரிக்காவுக்கும் ருஷ்யா வுக்கும் நடுவே இருப்பதைவிட, அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக் கும் நடுவே அதிகமான நேரடித் தாக்குதல்களும் முரண்பாடு களும் நிறைந்துள்ளன. ஆனல், இவைகள் வந்து, நாம் பிரச்னை களைப் பிரிட்டனோடு சமாளித்துக் கொள்ள முற்படுகையில் நம்மைத் தடுத்துவிடுவதில்லை. ஆனல், நம் நாட்டுப் பிரதிநிதிகளோ, ருஷ்யா வுக்கு எதிராக இப்படிப்பட்ட போராட்டங்கள் இருக்கவேண்டு

மென்று எப்படியோ விரும்பு கிறார்கள்.

பெரிய வல்லரசுகளைச் சம அந்தஸ்தில் பாவித்து, அவற்றின் ஒத்துழைப்பின் மூலமாகக் கிடைக்கும் நிரந்தர சமாதானத்தைப் பெற வேண்டு மென்ற, ரூஸ்வெல்ட்டின் கொள்கையை அமெரிக்கத் தலைமைப் பீடம் மறந்துவிட்டது. ஆனால், இந்தக் கொள்கையை ஆதரிக்க ரூஸ்வெல்ட்டின் காலத்தில் இருந்ததைவிட இப்போது அதிகமான பொது ஜன ஆதரவு இருக்கிறது. ஆனால், தலைமைப் பீடம்தான் தவறு செய்கிறது. எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த குறுகிய மனப்பான்மை படைத்தவர்களே, தற்காலிகமாக இப்போது தலைமைப் பீடத்தில் இருக்கிறார்கள். அவர்கள் நிரந்தர சமாதானத்தைத் தவிர்த்து வேறு எதற்காகவும் போரிடத் தயாராக இருக்கிறார்கள்.

நான் இதைத் தனிப்பட்ட முறையில், எந்தக் கட்சித் தொடர்புமில்லாமல்கூறுகிறேன். அமெரிக்க நாட்டைப் பற்றியும் அந் நாட்டுச் சுரங்கத் தொழிலாளர்களைப்பற்றியும் ஆலை, ரோடு, கடை, காரியாலயம் முதலிய பற்பல விதமான இடங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களைப் பற்றியும் அவர்களின் பல திறப்பட்ட சங்கங்களைப்பற்றியும் நான் அறிவேன். விவசாயிகளைப்பற்றியும், சிறு நகரங்களிலும் பெரு நகரங்களிலும் வாழும் மக்களைப்பற்றியும் நான் அறிவேன். ஆயிரம் சமாச்சாரங்களில் என்னோடு முரண்பட்ட அபிப்பிராயம் கொள்ளும் என் நாட்டின் பெரும்பான்மையான ஆடவர் பெண்டிரைப் பற்றியும் நான் அறிவேன்.

ஆனால், ரூஸ்வெல்ட்டின் கொள்கைப்படி ஒற்றுமையை நிலைநாட்டும் விஷயத்தில் அவர்கள் எல்லோரும் நானும் ஒரே அபிப்பிராயத்தையே கொண்டிருக்கிறோம். எந்தத் தலைமையையும் ரூஸ்வெல்ட்டின் சமாதானக் கொள்கைகளைத் தெளிவுடனும் தைரியத்துடனும் நிலைநாட்ட வரும் பட்சத்தில் அவர்கள் அதற்கு முழு உற்சாகத்துடன் ஆதரவளிக்கத் திரண்டு நிற்பார்கள் என்பதையும் நான் அறிவேன்.

எல்லோரும் ஒப்புக்கொள்ளும் ஓர் உடன்பாட்டை நான் கீழ்க்கண்ட விதமாக வகைப்படுத்திக் கூறுகிறேன். இந்த உடன்படிக்கை தகுந்ததொரு தலைமையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

நாம் நிரந்தரமான சமாதானத்தை விரும்புகிறோமே ஒழிய, அடுத்த யுத்தத்துக்குத் தயார்ப் படுத்திக்கொள்ளும் இடைக்கால யுத்த நிறுத்தச் சமாதான ஏற்பாட்டை யல்ல.

இந்தக் காரியம் சோவியத்—அமெரிக்க ஒத்துழைப்பைப் பொறுத்தே இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

இந்த ஒத்துழைப்பு, அமெரிக்கா முதலாளித்துவ முறையில் இருக்கவும், சோவியத் யூனியன் அபேதவாத முறையில் இருக்கவும் அநுமதிக்கும் என்பதை அங்கீகரிக்கிறோம். இந்த ஒத்துழைப்பு இரண்டு வேறுபட்ட, முரண்பட்ட கொள்கை முறைகளின் ஒத்துழைப்பாக இருக்கும்.

இருவரும் சமம் என்ற அடிப்படையின் பேரில் சோவியத் யூனியனுடைய ஒத்துழைப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ளு

இல்லாளாக இருப்பது விளையாட்டில்லை

வேலையாட்கள் முன்னைவிட இரட்டிப்பு சிலவாயும், காய்கறிகள் ஒன்றுக்கு மூன்று நான்குபங்கு அதிகவிலையுள்ளதாயும், பழங்கள் கிடைப்பது அரிதாயும், வண்ணான் சரிவர வராமலும் சமையல் வேலை செய்பவர்கள் சிலவை அதிகம் காட்டுவதிலேயே ஆசைகொண்டவர்களாயும் உள்ள இந்த நாட்களில் வாழ்க்கை ஒரே கவலை சித்திரமாக இருக்கின்றது. ஆயினும் இல்லாள் இவைகளை எல்லாம் ஒரு உற்சாகத்தோடு சமாளிக்க வேண்டும். அதற்கு அவளுக்கு அடிக்கடி போஷணையளிக்கும் டீ தேவையாய் இருக்கிறது. டீயைப்போல் சோர்வுற்ற நரம்புகளுக்கு பலமளித்து மனதிற்கு ஆயாசம் தீர்த்து வீட்டு அலுவல்களை சரிவர கவனிப்பதற்கு வேண்டிய பலமளிப்பது வேறு ஒன்றுமில்லை.

நல்ல டீ தயாரிக்கும் முறை

1. டீயை கெட்டிலில் காய்ச்சாதே. டீபாட் உபயோகி.
2. டீபாட் சாரமில்லாமலும் வெதவெதப்புடனும் இருந்தால் தான் உலர்ந்த டீ தழையைப் போட்டு கொதிஜலம் விட்டதும் அது நன்றாய் ஊறி நல்ல மணத்தை தரும்.
3. ஒவ்வொரு கப் டீக்கும் ஒரு டீஸ்பூன் தழை போட்டு அதிகப்படியாக டீ பாட்டிற்கு ஒரு ஸ்பூனும் போடவும்.
4. புதிதாக கொதிக்கவைத்த தண்ணீரையே உபயோகிக்கவும். ஒருபொழுதும் முன்னடியே கொதிக்க வைத்த ஜலத்தையோ, கொதிக்காத ஜலத்தையோ அல்லது ரொம்ப கொதிக்கவைத்த ஜலத்தையோ உபயோகிக்காதே. ஜலம் குமிழைப்போல் கிளம்பும் பொழுதுதான் அது கொதிப்பதற்கு அடையாளம்.
5. ஐந்து நிமிஷத்திற்கு குறையாமல் கஷாயம் ஊற வேண்டும்.
6. டீ பாட்டில் இருக்கும்பொழுதே சர்க்கரையும் பாலும் சேர்க்காதே. கப்புகளில் கஷாயத்தை ஊற்றிவிட்டே அவைகளை சேர்க்கவும்.

டீ

எந்நேரமும் டீ நேரம்தான்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் தேயிலை பெண் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.

லிப்டன்ஸ் தேயிலை பெண்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 O

கிறோம். ஒரு பொதுக் கொள்கையானது இரு நாடுகளின் ஜீவாதாரமான நலன்களையும் உருவாக்க வேண்டுமென்றும் பெரும்பான்மையான பிற நாட்டவரின் நலன்களை அநுசரித்தே அவை இருக்க வேண்டுமென்றும், அமெரிக்கா அல்லது ருஷ்யா போன்ற ஒரே நாட்டினல் சுமத்தப்பட்ட கொள்கையாக அவை இருக்கா என்றும் நாம் அறிவோம்.

அமெரிக்கா, ருஷ்யா ஆகிய இரு நாடுகளின் கூட்டுக் கொள்கைகளைப் பரஸ்பர ஒத்துழைப்பின் பேரில் அமல் நடத்தும் நாடாக அமெரிக்கா இருக்க வேண்டுமே ஒழிய, சுய நலத்துக்காக இரு நாடுகளும் சண்டை போட்டுக் கொள்ளும் போராட்டக் களமாக இருக்கக் கூடாதென நாம் விரும்புகிறோம்.

உலகத்தையும், தனித் தனியாக உள்ள நாடுகளையும் இரண்டாக வெட்டி, சோவியத் கட்சியென்றும் அமெரிக்கக் கட்சியென்றும் இரண்டு கட்சிகளை உண்டாக்கி, ஒன்றுக்கொன்று குரோதத்தை வளர்த்துக் கொண்டு போக விடாமல் தடுக்க நாம் நம்மால் ஆனதையெல்லாம் செய்வோம். பொதுநலம் என்ற கொள்கையை விசுவாசத்துடன் நிறைவேற்ற இரண்டு கட்சிகளையும் ஒன்றுபடுத்தி ஓர் அணிக்குள் கொண்டு வர நாம் முயலுவோம்.

முதலாளித்துவக் கொள்கை விசேஷமா, அபேதவாதக் கொள்கை விசேஷமா என்பதைச் சமாதானத்தின் மூலம் பரிசோதனை செய்து பார்க்க நாம் தீர்மானித்துள்ளோம். பிரத்தியட்சத்தில் எந்தக் கொள்கை, மக்களுக்கு உணவு, இருப்பிடம், உடை, கல்வி முதலியவைகளை அளிக்கிறது என்று பார்ப்போம். ஆனல், இந்தப் போட்டியை யுத்தப் பரிசோதனைக்குள் விட்டுப் பார்க்க மாட்டோம். ஏனென்றல், இன்னொரு யுத்தத்தில் வெற்றி பெற்றவர்கள் என்று ஒருவரும் இருக்கப்போவதில்லை. யுத்தத்தில் மாளாமல் யாரும் உயிர் பிழைத்து மிஞ்சுவார்களா என்பதே சந்தேகம்.

இருபத்தைந்து வருஷ காலம் சோவியத் யூனியனைப் பற்றி மிக நுணுக்கமாக நான் ஆராய்ந்திருக்கிறேன். சமீபத்தில் அந்த நாட்டுக்குப் போய் அங்கிய நாட்டு மந்திரி மாலடோவி விருந்து தொழிற்சாலை, பண்ணை முதலியவற்றின் மேல் அதிகாரிகள் வரை பலதிறப்பட்ட தலைவர்களையும் கண்டு பேசியிருக்கிறேன். பரஸ்பர நலனைக் கருதி அமெரிக்கா அந்தரங்க சுத்தியோடு ஒத்துழைப்பை நாட முயற்சி எடுக்கும்போது, அதற்கு அந்தரங்க சுத்தியோடுள்ள ஆதரவு கிடைக்கும் என்பதில் எனக்கு நிச்சயமான நம்பிக்கை உண்டு.

*

ஆட்சி முறை

அரசர்கள், பிரஜைகளின் நன்மைக்காக, அவ்வப்பொழுது தங்களுடைய ஆட்சி முறையில் பொய்யையும் ஏமாற்றத்தையும் கலந்துதான் நிர்வாகம் செய்ய வேண்டும்.

—சாக்ரெடிஸ்

ஸ்திரீ குணம்

தன் மகளைவிடத் தான் பத்து வயசு இளமையாகத் தோற்றினல், ஒரு ஸ்திரீக்குப் பரிபூரண திருப்தி உண்டாகிவிடும். —ஆஸ்கார் ஒயில்ட்

மூளைக்குப் புதிய சிகிச்சை

●

ஜான் பார்சன்ஸ்

சமீப காலம் வரை, தலைசிறந்த ரண சிகிச்சை நிபுணன்கூட மூளை, இருதயம், சுவாசப் பை முதலியவை சம்பந்தமான வியாதிகளைப் போக்க 'ஆபரேஷன்' செய்யத் துணியவில்லை. இன்றுகூட—விஞ்ஞானம் இவ்வளவு முன்னேறியிருக்கும் இந்தக் காலத்தில்கூட—இருதய சம்பந்தமான நோய்க்கு 'ஆபரேஷன்' வெற்றிகரமாகச் செய்ய முடிவதில்லை. ஆனால், மூளை, சுவாசப் பை இவற்றை 'ஆபரேஷன்' மூலம் சொஸ்தப்படுத்த ஓரளவுக்கு முடிகிறது. இம்மாதிரியான 'ஆபரேஷ'னை வெற்றிகரமாகச் செய்யக் காரணமாக இருந்தவை, இடைவிடாது இத்துறையில் செய்த ஆராய்ச்சி, யுத்த காலத்தில் ரண சிகிச்சை நிபுணர்கள் பெற்ற அநுபவம் ஆகிய இரண்டுமே.

சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சிகிச்சை முறை, விநோதமாக இருப்பதோடு வியக்கத்தக்க முறையில் குணப்படுத்தும் தன்மையது. இம்முறைக்கு 'முக்கிய பாகத்தைக் கறைப்படுத்தல்' (வைட்டல் ஸ்டெய்னிங்) என்று பெயர். தீங்கிழைக்காத பச்சைப் பசேலென்ற ஒரு மருந்தை 'இன்ஜக்ஷன்' மூலம் ரத்தத்தில் சேர்த்துவிடுகின்றனர். மூளையில், நோய்வாய்ப்படாமல் ஆரோக்கியத்தோடு இருக்கும் பாகங்களைத் தாக்காமல், நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் பகுதிகளை மட்டும் இந்த மருந்து பச்சை நிறம் கொள்ளச் செய்கிறது. "சுற்றிலும் சாம்பல் நிறத்தோடு கூடிய மூளையின் நல்ல பகுதிகளுக்கு நடுவில், கெட்டுப்போன மூளை, பச்சைப் பசேலென்று காட்சியளிப்பது மிக மிக அழகாகப் பச்சைக் கல் பதித்தமாதிரி இருக்கிறது" என்று ஒரு டாக்டர் குறிப்பிட்டார். இந்த முறை மூளைச் சிகிச்சையில் இறங்கும் வைத்தியர்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது; அவர்களுடைய வேலையையும் எளிதாக்குகிறது.

'எலெக்ட்ரோ—என்சிபிலோகிராம்' என்பதும் மூளை சிகிச்சையில் கையாளும் கருவிதான். ஆனால், இதை நம்பிக்கையோடு கையாளும் அளவுக்குச் சீர்திருத்தி அமைக்க வேண்டும். மூளையின் சீர்கெட்ட மெல்லிய பாகங்களில் மின்சாரம் பாய்வதற்கும், மூளையில் நல்ல பகுதிகளில் பாய்வதற்கும் வித்தியாசமுண்டு. இந்த வேறுபாட்டைக் கொண்டுதான் சீர் குலைந்த பாகம் எது என்பதைக் கண்டுபிடிக்க முடியும். யுத்த காலத்தில், துப்பாக்கிக் குண்டு, 'பாம்' வெடித்து அதனின்றும் வெளிப்படும் சல்லிகள் மூலம் மூளைக்கு ஏற்பட்ட காயங்களைக் குணப்படுத்தவே மூளைச் சிகிச்சையில் செய்த ஆராய்ச்சிகள் பயன்பட்டன.

யுத்தத்தின்போது மண்டையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து, அதனால் மூளை சரிவர வேலை

யுத்த காலத்தில் பெரும் அளவுக்கு முன்னேறிய விஞ்ஞானத் துறைகளில மூளைச் சிகிச்சையும் ஒன்று. அதைப் பற்றிய முக்கியமான சில அம்சங்களை இக் கட்டுரை விவரிக்கிறது. எவ்வரிபடீஸ் பத்திரிகையில் வெளியானது.

செய்யாமல்போய்விட்ட சிப்பாய்களைக் குணப்படுத்துவதோடு மட்டும் நில்லாமல், அவர்கள் முன்போலவே சாதாரண வாழ்க்கை நடத்தத் தகுதியுள்ளவர்களாகச் செய்து விடுவதே மூளைச் சிகிச்சை நிபுணர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. இதில் வெற்றி பெற உபயோகமாக இருந்தவை,'ஸல்ஃபனமைட்', 'பெனிசிலின்' போன்ற மருந்துகள்தாம். இந்த இரண்டு மருந்துகளும் மூளைக் காயத்தினால் இறப்போரின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்துள்ளன. ஆகாய விமானங்கூட இந்தத் துறையில் உபயோகமா யிருந்திருக்கிறது. சிகிச்சையின் பொருட்டுப் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஆஸ்பத்திரிகளுக்கு நோயாளியைத் தூக்கிச் செல்ல விமானத்தைத் தவிர, வேறு எந்தச் சாதனமும் உபயோகமா யிருந்திருக்க முடியாது. இம்முறையால் காயம் பட்ட நோயாளியைச் சில மணி நேரத்துக்குள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல முடிந்தது.

நார்மண்டியில் நடந்த யுத்தத்தில் காயப்படுத்தப்பட்ட சிப்பாய்களை இங்கிலாந்துக்கு எடுத்துச் சென்றனர். காயம் பட்ட அன்றே சிகிச்சை கிட்டியதால் அங்கு அடிபட்ட இரண்டாயிரம் சிப்பாய்களில் உயிர் துறந்தவர்—அதுவும் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்லும் வழியில் இறந்தவர்—மூன்று பேர்தாம். 'ஸல்ஃபனமைட்', 'பெனிசிலின்', காயம்பட்டவரை ஆஸ்பத்திரிக்கு விமானத்தில் தூக்கிச் செல்லுதல் என்பன போன்ற புரட்சிகரமான மாறுதல்களால்தான் காயம் பட்டவருக்குக் காயம் பட்ட மூன்று நாட்களுக்குப் பிறகும் சிகிச்சை அளிக்க முடிந்தது.

யுத்த காலத்தில் ரண சிகிச்சை நிபுணர்கள் பெற்ற அநுபவம், மூளை சிகிச்சையில் தேர்ச்சி பெற்றவர்களாகச் செய்வதோடு மட்டு மல்லாமல், சிகிச்சைக்குப் பிறகு அடிபட்டவர்களை முன்போலவே வாழ்க்கையில் ஈடுபடச் செய்யும் சமூகத் தொண்டர்களாகவும் செய்திருக்கிறது.

மண்டையில் காயம் பட்டவர்களைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். இந்த மாதிரியான பிரிவு, அவர்கள் முன்போல் சாதாரண வாழ்க்கை நடத்த அவர்களுக்கு எவ்வளவு நாட்கள் ஆகுமோ அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. மோட்டார் விபத்தில் ஏற்படும் காயமும், குண்டினால் ஏற்படும் காயமும் ஒன்றுக்கொன்று அநேகமாக ஒத்த குணங்களோடுதான் இருக்கின்றன. இது ஒரு விதத்தில் நன்மையாகத்தான் முடிந்துள்ளது. யுத்த காலத்தில் பெற்ற அநுபவம் மோட்டார் விபத்துக்களினால் ஏற்படும் மண்டைக் காயங்களுக்கு உபயோகமாக இருக்கிறது.

இம்மாதிரியான மண்டைக் காயங்கள் பெற்ற நோயாளிகளின் குறைபாடுகளையும், குண விசேஷங்களையும் கண்டறிந்து வைத்திருப்பது, மற்ற நோயாளிகள் அம்மாதிரியான குறைகள் உடையவர்களாய் இருந்தால், அதன் காரணத்தை அறிந்து மூளையில் எந்தப் பாகத்தில் கெடுதல் என்று கண்டுபிடித்துத் தேவையான சிகிச்சை முறையைக் கையாள உதவியாய் இருக்கும்.

மூளையின் சில பாகங்கள் தாக்கப்பட்டால் தீங்கு நேர்வதில்லை.

லண்டனில், ஒருவனுடைய மண்டையில் ஒரு கடப்பாரை நேராக உள்ளே சென்றுவிட்டது. ஆயினும் தீங்கு ஒன்றும் பலமாக நேர்ந்துவிடவில்லை. மண்டையின் பின் பகுதியில் அடி பட்டால் கண் பார்வை பாதிக்கப்படுகிறது. மண்டையின் முன் பக்கத்தில் அடி பட்டால் மூளை வேலை தடைப்படுவதில்லை. சில வியாதிகளைப் போக்க மூளையின் முற்பகுதியை டாக்டர்களே எடுத்துவிடுகின்றனர்.

மூளையில் சிறு கட்டிகள் உண்டாவது சாதாரணம். சில சமயங்கள் 'கான்சர்' போன்ற கொடிய வியாதிகள் கூட வருவது உண்டு.

மூளையின் மத்தியில் நைப்பான நீர் கசியும் தசை நார் ஒன்று உண்டு. அது அளவில் பட்டாணியைப் போன்றிருக்கும். இது மூளையின் உட்பகுதியில் உள்ளது. இது சாதாரணமாகக் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கும். இந்த உறுப்பு நோய்ப்பட்டிருந்தால் 'ஆபரேஷன்' மூலம் நோயை நீக்கலாம்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒன்றும் செய்யமுடியாது என்று டாக்டர்கள் கைவிட்ட சில மூளை சம்பந்தமான நோய்களை இன்று 'ஆபரேஷன்' மூலம் வெற்றிகரமாக நிவர்த்தி செய்யலாம்.

பிரிட்டிஷ் சாணக்யம்

ஏகாதிபத்தியத்தை நிலை நிறுத்திய மூல புருஷர்களில் ஒருவரான ஜெனரல் ஸர் ஜான் லோ என்பவருக்கு லார்டு கானிங் எழுதிய கடிதம் ஒன்றின் பகுதியைக் கீழே கொடுத்திருக்கிறேன். லோ, இந்திய வைசிராயாயிருந்த லார்ட் டல்ஹௌஸியின் கீழ் வேலை செய்தவர். கானிங் பிரபு எழுதியிருப்பதாவது :

"பிரான்சும் ருஷ்யாவும் நமக்கு விரோதமாக ஒரு யுத்தத்தில் இறங்குமானால், உள் நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்படும். நாம் நமது தாயகத்தைக் காப்பாற்றுவது மிக அவசியம். காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். இதற்குப் பத்திரமான - நிச்சயமான- வழி ஒன்று இருக்கிறது. இந்தியாவி லுள்ள சுதேசப் பிரஜைகளோ, சுதேச மன்னர்களோ நமக்கு விரோதமான சதியாலோசனைகளில் இறங்காதபடி நாம் பக்குவமாக நடந்துகொள்ள வேண்டும். நம் எதிரிகளுடன் சேருவதால் அவர்களுக்கு எந்த நன்மையும் கிடையாதென்பதை அவர்கள் உணரும்படி செய்ய வேண்டும். அதற்கு மாறாக, நம் ஆட்சி மாறுமானல், நஷ்டப்படுபவர்கள் இந்தியர்கள்தாம் என்பதை அவர்களுக்கு உரைக்க வேண்டும். இப்படியெல்லாம் தளுக்காக நடந்துகொண்டு அவர்களைச் சரிக்கட்டிவிட்டால், அப்புறம் இந்திய ஏகாதிபத்தியத்தைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதேயில்லை. கஷ்டம் வந்தபோது நுகத்தடியை இந்தியர்கள் கழுத்திலேயே மாட்டிவிடலாம். ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை அவர்களிடமே நம்பி ஒப்படைக்கலாம். அபாய காலங்களில் நம் இங்கிலிஷ் சேனைக்கு இந்தியாவுக்கு வெளியிலேயே எவ்வளவோ வேலை யிருக்கிறது."

—சாக்கியன் (ஹிந்துஸ்தான்)

பிடித்துக்கொள் !

எல்லாவற்றையும் செவி சாய்த்துக் கேள். உனக்கு எது நல்லதென்று படுகிறதோ, அதைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொள்.

—சுவாமி விவேகானந்தர்

எஸ். ஏ. டாங்கே

தொழிலாளி

டாங்கே என்ற பெயரை உச்சரித்தவுடன், மணியோசை மாதிரி நாதம் கிளம்புகிற தென்றாலும், இந்தப் பெயருள்ள மனிதர், அப்படிக் 'கோடையிடி'ப் பேர்வழி யல்ல; எலும்பும் தோலுமாக, வற்றிப்போன சுக்காக மெலிந்து, காற்றடித்த திசையில் சாயக்கூடிய உடற்கட்டுப் படைத்தவருக்குத்தான் 'டாங்கே' என்ற இடி முழக்கம் செய்யும் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். இவருடைய முழுப் பெயர் ஸ்ரீபாத அமிர்த டாங்கே என்பதாகும். சென்ற வருஷம் இவர் தென்னாட்டுக்கு விஜயம் செய்திருந்தபோது மதுரை. வாசிகள் சிலர், இவர் பெயரைக் கேட்டோ என்னவோ 'இவரை இந்தியர் என்று நம்பவே முடியவில்லை' என்று சொல்லவே, 'இந்தியர்தான்' எனக் காட்ட, இவர் தமது தாய் மொழியாகிய மராத்தியில் லக்ஷக் கணக்கான ஜனக் கூட்டத்தில் பிரசங்கம் செய்தாராம்!

சுமார் ஐந்தடி ஆறு அங்குல உயரம் இருப்பார் என்றாலும், உடலின் மெலிந்த அமைப்பு காரணமாக உயரம் அதிகமாகத் தெரியலாம். 'மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது' என்ற பழமொழிக்கு இலக்காகும் இந்த மனிதர், இந்தியாவின் சுதந்தரப் போராட்ட சக்தியாக இலங்கும் தொழிலாளர் வர்க்கத்தின் பிரதிநிதியாகவும், தனிப்பெரும் தலைவராகவும் இலங்கும் மகா புருஷராக இருக்கிறார். இந்த வருஷம் அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸின் தலைமைப் பீடம் இவரை வரவேற்றிருக்கிறது. இதற்கு முன்னும் ஒரு தடவை இந்தத் தலைமை ஸ்தானத்தை இவர் வகித்திருக்கிறார். சென்ற வருஷத்தில் அ. இ. தொ. காங்கிரசின் உப தலைவராக இருந்தார்.

டாங்கே, மராத்தி நாட்டில் பிறந்தவர். இவருக்கு இப்போது 48 வயசாகிறது. 1920-ல் திலகரின் ஹோம் ரூல் இயக்கம் நடக்கும்போது பட்டதாரிப் படிப்பை உதறிவிட்டு அரசியல் போர்க்களத்தில் இவர் குதிக்கும்போது, இவருக்கு வயசு பத்தொன்பதுதான். இவரை அப்போது ஏதோ ஒரு சின்னப்பிள்ளை என்று கருதியவர்களெல்லாம் ஆச்சரியப்படும்படியாக இருந்தன, இவருடைய அரசியல் பிரசங்கங்கள். மணிக் கணக்கில் இவரும் கேட்பவர்களும் சோர்ந்துவிடாமல், சட்ட சபைக் கூட்டங்களில் புள்ளி விவரங்களுடன் விஷயத்தைத் தெள்ளத் தெளிவாக அலசி விளக்குவது இவருடைய தனிப் பாண்டித்தியம்.

பம்பாயில் இரண்டு லட்சம் தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்கி, 1926-ம் வருஷம் ஒரு மா பெரும் வேலை நிறுத்தத்தை நடத்தி வெற்றி கண்டார். பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா முதலிய நாடுகளின் தொழிலாளர்களும் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்துக்குப் பரிபூரணப் பொருளாதார ஆதரவு கொடுத்தது, டாங்கேக்கு வெளிநாட்டுத் தொழி

இந்த வருஷம் அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசுக்குத் தலைவராகத் தேர்தெடுக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ எஸ். ஏ. டாங்கேயைப் பற்றிய முக்கியமான குறிப்புக்களை இக் கட்டுரையில் காண்கிறோம்.

வாளர்களிடம் உள்ள செல்வாக்கைக் காட்டுகிறது. இந்தப் போராட்டத்திற்குப் பின் தற்சமயம் உள்ள பலம் பொருந்திய கிரினி காம்கார் தொழிலாளர் சங்கத்தை ஸ்தாபித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஸ்தாபகர்களில் டாங்கேயும் ஒருவர். மார்க்ஸீய இலக்கியத்தில் கரை கண்டிருப்பதோடு, தொழிலாளர்களுடன் நேரடியான தொடர்பு கொண்டு, அவர்களுடைய தினசரிப் போராட்டங்களில் பங்கெடுத்துக்கொண்டிருப்பவர் டாங்கே. ஆகவே, இவர் வேலை நிறுத்தத்தைத் தூண்டியதாகவும், புரட்சிக்குத் திட்டமிட்டதாகவும் குற்றங்கள் சாட்டி, 'மீரத் சதி வழக்கு' என்று ஒரு வழக்கை ஏகாதிபத்திய அரசாங்கம் தொடர்ந்து, இவரை ஆறு வருஷக் கடுங்காவல் கொடுத்து, 1930-ல் சிறைக்குள் தள்ளியது. இதற்கு முன்னும் கான்பூர்ச் சதி வழக்கில் இவருக்கு இரண்டு வருஷக் கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. பழையபடியும் 1936-ல் ஏகாதிபத்தியத்தின் தாக்குதலுக்குள்ளானார். 1942-ம் வருஷத்தில், இந்தியத் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தலைவர்கள் மீது சாட்டும் குற்றம் வீண் புரட்டு என்றும் மூன்றரை லட்சத்துக்கு மேற்பட்ட பிரிட்டிஷ் தொழிலாளர்களிடம் பிரசாரம் செய்தார்.

1944-ம் வருஷம் பாரிஸ் மாநகரில் உலகத் தொழிற்சங்கக் காங்கிரஸ் நடைபெற்றது. அதற்கு இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவராக டாங்கேயும் போயிருந்தார். அந்த மாநாட்டுக்கு முன் இங்கிலாந்தில் சில காலம் இவர் சுற்றுப் பிரயாணம் செய்து, லட்சக்கணக்கான தொழிலாளர்களிடம் அரசியல் பிரசங்கங்கள் செய்தார். அப்புறம் பாரிஸ் மாநாட்டில், 'இந்தியாவில் பிரிட்டிஷார் இல்லாவிட்டால் வகுப்புச் சண்டைகள் ஏற்படும்' என்று அமெரிக்கப் பிரதிநிதி கூறவே, டாங்கே, 'அமெரிக்காவில் நீக்ரோக்களும் அமெரிக்கர்களும் அடித்துக்கொண்டால் பிரிட்டனைப் போலிஸ்காரனாக உங்கள் நாட்டில் ஏற்றுக்கொள்ளுவீர்களா?' என்று கேட்டுச் சரியான சூடு கொடுத்தார்.

1946-ம் வருஷம் சட்ட சபைத் தேர்தலில் மாஜி காங்கிரஸ் மந்திரி ஒருவருடன் போட்டி போட்டுத் தொழிலாளர்களிடை அமோகமான வெற்றி பெற்றார்.

இவர் சட்ட சபைகளில் சம்பந்தா சம்பந்தமில்லாமல் அநாவசியமாகக் கேட்கப்படும் கேள்விகளுக்குப் புள்ளி விபரங்கள் நிறைந்த தகுந்த பதில்களை தயாராகத் தம் ஞாபகத்தில் வைத்திருந்து பொறுமையோடு சொல்லுவார். சட்ட சபைகளில் சொல் சாதுரியத்தைக் கொண்டு விளையாடி, கேள்விகளுக்குத் தக்க பதில் சொல்லாமல் தப்பிக்கும் வழக்கம், எல்லா நாடுகளிலும் உண்டு. ஆனால், டாங்கே, உரிய பதில்களைத்தாம் கொடுப்பாரே ஒழிய, வார்த்தை ஜாலம் பண்ணுவது கிடையாது. எதிர்க் கட்சிக் கும்பல் எத்தனை கூச்சல்கள் போட்டாலும், சற்றேனும் அசைந்து கொடுக்காமல், வஜ்ர நெஞ்சுடன் தம் பிரசங்கத்தைப் படபடப்போ, அவசரமோ இல்லாமல் சாவதானமாகச் செய்து முடிப்பார். முதல்

தடவை பம்பாய்க் காங்கிரஸ் மந்திரி சபை ஆட்சி செய்தபோது 'வேலை நிறுத்த உரிமையைப் பறிக்காதே' என்ற ஒரு மசோதா கொண்டுவந்து அது சம்பந்தமான ஆட்சேபணைக்கும் பல்களின் குழப்பத்தையும் சமாளித்துக்கொண்டு, ஆறரை மணி நேரம் டாங்கே பேசிய பேச்சு, இந்திய சட்ட சபையின் சரித்திரத்திலேயே குறிப்பிடத் தக்கதொரு நிகழ்ச்சி. எந்த நிலையிலும், திக்காமலும், திணருமலும், கோவையாக விஷயத்தைத் தெளிவான பாஷையில் சொல்லும் திறன் படைத்ததோடு, தொழிலாளரின் போராட்ட அரங்கங்களிலும் அந்தரங்க சுத்தமாகத் தலைமை தாங்கி வெற்றிகாணும் டாங்கேக்கு உரியதொரு பதவிதான் தொழிற் சங்கத் தலைமை.

அகில இந்தியத் தொழிற் சங்கத்தின் முதல் கூட்டம் பம்பாய் நகரத்தில் 1927-ம் வருஷம் அக்டோபர் மாசம் 31-ம் தேதி நடைபெற்றது. 'பழம் பெரும் நாடாக இருக்கும் இந்தியாவின் சரித்திரத்திலேயே இது ஒரு புதுமை' என்று தொழிற் சங்கத்தைப் பற்றிக் கூறினர், அந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய பாஞ்சால சிம்மம் லாலா லஜபதிராய். இந்தத் தொழிற் சங்கத்தில் ஜின்ன, நேரு முதலிய பெரிய தலைவர்களெல்லாம் அவ்வப்போது முக்கியமான பொறுப்புக்களை வகித்திருக்கிருர்கள். வகுப்புவாதச் சண்டைகள் பெருத்த இந்தியாவில், வகுப்பு வாதம் தலைகாட்டாமல், ஜாதி, மத, கட்சி வேற்றுமைகள் இன்றிப் பல திறப்பட்டவர்களையும் தன்னகத்தே கொண்ட தொழிலாளர் ஸ்தாபனம், அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸ். 600-க்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இந்தக் காங்கிரஸில் இணைக்கப்பட்டு இன்று ஏழு லட்சம் பேர் மேற்படி காங்கிரஸில் அங்கத்தினராக இருக்கிருர்கள். அதன் பிரதானமான பிரதிநிதிகளாக இருக்கும் 850 பேரும் சாதாரணத் தொழிலாளி வர்க்கத்திலிருந்து வந்தவர்களே. இப்படிப்பட்ட தூய தனிக் தொழிலாளர் ஸ்தாபனமாக இருக்கும் அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸை வெற்றிகரமாக நடத்திச் செல்லுவார் டாங்கே என்பதில் இந்தியத் தொழிலாளர்களுக்குப் பரிபூரண நம்பிக்கை உண்டு.

*

தவளை மகாத்மியம்

தவளை, சுவாசத்துக்கு வேண்டிய காற்றை வாய் வழியாக விழுங்குகிறது. ஆனல், பெரும்பான்மையான காற்று அதன் மேல்தோலின் வழியாகவே போய் வருகிறது. தவளை தன் எடையில் பாதி யளவுள்ள தண்ணீரை உறிஞ்சிக்கொள்ளும். அதிலும் பெரும்பான்மையான தண்ணீர் வயிற்றுத் தோலின் வழியாகவே உட்செல்லுகிறது. இதுதான் தவளை எப்போதும் குளிர்ச்சியாயிருப்பதற்குக் காரணம். அவசரத் தேவைக்கு அத் தண்ணீரை அது உபயோகித்துக்கொள்ளும்.

வெப்பமான காலத்தில்தான் தவளை நிறையச் சாப்பிடும். குளிர் காலத்தில் அது சாப்பிடாமலே இருக்கிறது. அப்போது, ஏற்கெனவே அது சேமித்து வைத்திருந்த உடல் கொழுப்பு அதற்கு உதவுகிறது.

—எச். எம். ஹாக்கின்ஸ்

வியட்-நாமில் இளைஞர் எழுச்சி

●

மாய் தி சாவ்

வியட்-நாமிய மாணவர்களின் போராட்டங்களையும் துன்ப அநுபவங்களையும் தவிர, அவர்களைப்பற்றிச் சொல்வதற்கு வேறு என்ன இருக்கிறது? ஆனால், அவர்கள் தங்கள் எதிர்காலத்தின் சுபிட்ச நிலையில் நம்பிக்கைகொண்டிருக்கிறார்கள் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். இந்திய மாணவர்களுடைய ஒத்துழைப்பின் மூலம் தங்களுடைய சுதந்தரப் போரில் வெற்றி காணலாம் என்று அவர்கள் திடமாக நம்புகிறார்கள்.

இந்திய மாணவர்களைப் போலவே, வியட்-நாமிய மாணவர்களும் அந்நிய ஆதிக்கத்தினால் வேண்டிய கஷ்டங்களைப் பட்டிருக்கிறார்கள். அறிவுப் பசி எங்களுக்கும் இருக்கிறது. ஐரோப்பிய மாணவர்கள் சாதித்திருப்பவைகளை நாங்களும் சாதிக்க முயல்கிறோம். ஆனால், எண்பது வருஷ அந்நிய ஆட்சியின் விளைவாக, நாங்கள் வெறும் குமாஸ்தாக்களாகவே ஆகியிருக்கிறோம். எங்கள் உபாத்தியாயர்கள் அளித்த பயிற்சி எங்களைத் திறமைமிக்க கணக்கர்களாகச் செய்வதில் வெற்றி பெற்றிருக்கிறது. சிறைச்சாலைகளின் எண்ணிக்கையும், சாராயத்திலிருந்தும், கஞ்சாவிலிருந்தும் கிடைக்கும் வரி வருமானமும் வருஷா வருஷம் பெருகிவரும்போது, பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை மட்டும் மிகக் குறைவாகவே இருக்கிறது.

1939-லிருந்து 1941-க்குள் இந்தோ சீனத்தின் ஜனத்தொகை இரண்டரைக் கோடி. பள்ளி மாணவர்களின் தொகை 409,777-லிருந்து 422,407-ஆகப் பெருகியுள்ளது. 14,350-ஆக இருந்த சிறைச்சாலை 20,852-ஆகப் பெருகியுள்ளது. 57,592 கிலோக்ராம் விற்பனையான கஞ்சா 71,736 கிலோக்ராமாக மாறி, அதிலிருந்து கிடைக்கும் வருமானமும், ஏற்கெனவே 15 லட்சம் டாலராக இருந்தது, 195 லட்சம் டாலராக ஆகியிருக்கிறது. இதன்படி—

3245 குழந்தைகளுக்கு ஒரு பள்ளிக்கூடம்.

274 நபர்களுக்கு ஒரு கிலோக்ராம் கஞ்சா.

45 நபர்களுக்கு 25 காலன் சாராயம்.

1000 கைதிகளுக்கு ஒரு சிறைச்சாலை.

85 சதவிகிதம் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்.

இந்தோ சீனா முழுவதற்குமாக ஹானாய் நகரம் ஒன்றில்தான் சர்வகலாசாலை என்று ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. இது பல்வேறு காரியாலயங்களுக்குத் தலைமைக் குமாஸ்தாக்களை உற்பத்தி செய்து அனுப்பி வைக்கிறது. பணக்காரர்கள் தங்கள் பிள்ளைகளைப் பிரான்சுக்கு அனுப்பி

வியட்-நாமின் சுதந்தரப் போராட்டத்தில் அந்த நாட்டு மாணவர்கள் எவ்வளவு தூரம் பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை விவரிக்கிறது இக் கட்டுரை. கட்டுரையாளர், வியட்-நாமின் இந்திய ஸ்தானிகர். ஸ்டூடண்ட் பத்திரிகையில் வந்த கட்டுரையின் மொழிபெயர்ப்பு.

நிலா வெளிச்சத்தில் அழகான பெரிய இந்திய ரோஜா மலர்கள் அவையின் மயக்கும் நறுமணத்தால் காற்றை நிரப்புகின்றன — அவை வினோலியா ஒயிட்ரோஸின் என்னென்ன எண்ணங்களை விளைவிக்கின்றன! உங்கள் அழகை அதிகரிக்கச் செய்ய உங்கள் இஷ்டத்திற்குரிய இச்சோப்பைவிட உத்தமமானதோ தகுதியானதோ வேறு கிடையாது. மிருதுவான நுரையைத் தரும் வினோலியா மிகவும் மெல்லிய சருமத்தை சுகமாகச் சுத்தம் செய்கிறது ... மேலும், மணமுள்ள அதன் நுரை உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச் செய்கிறது.

வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 21-111 TM

VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

DDT யினுல்

மிகச் சிறந்த

பலன் கிடைக்க வழி

1 நியோஸிட் பவுடரை உபயோகியுங்கள். பூச்சிகளை ஒழிக்கும் DDT தயாரிப்புகளை முதன் முதலில் உபயோகத்திற்குக் கொண்டு வந்தவரான ஜே. ஆர். கேய்கி என்பவரளித்துள்ள தயாரிப்பு முறைப்படி நியோஸிட் 10-சதவிகிதம் DDT சேர்த்துத் தயாரிக்கப்பட்டதாகும். எல்லாப் பிரபல கடைகளிலும் இது பவுடர் ஒத்தி சகிதம் 2-அவுன்ஸ் டப்பிகளிலும், ½-பவுண்டு டின்களிலும், 1-பவுண்டு தூவு டின்களிலும் கிடைக்கும். ஆஸ்பத்திரி, பாடசாலை முதலிய ஸ்தாபனங்களுக்கு 28-பவுண்டு டின்களிலும் கிடைக்கும்.

2 நியோஸிட்டை, பூச்சிகள் நடமாடுமிடங்களிலெல்லாம், குறிப்பாக சமையலறை உக்கிராண அறைகளில் இலேசாகத் தூவுங்கள், பட்டும் படாமல் பலதடவை தூவுவதைவிட எல்லா அறைகளிலும் நன்ருக ஒருதடவை தூவினுல் நல்ல பலன் கிடைக்கும். ஒவ்வொரு அறையிலும் சரியானபடி இதைத் தூவி அப்படியே சில தினங்களாவது போட்டு வைத்திருந்தால் கரப்பன் பூச்சி, ஈக்கள், எறும்புகள், கொசுக்கள், விளக்குப் பூச்சிகள், வெள்ளைப் பாச்சாக்கள் முதலியவை எல்லாம் கட்டாயம் ஒழிந்து விடும். அவசியமானுல் மீண்டும் பிரயோகிக்கவும்.

நியோஸிட்டை

சரியானபடி உபயோகியுங்கள்!

வோல்கி இன்செக்டிஸைட்ஸ் லிமிடெட்
நெவில் ஹவுஸ்
நிக்கல் ரோடு, பம்பாய்

D.J.K. 5313 TM

விநியோகஸ்தர்கள் : மைசூர் சமஸ்தானத்திற்கும், வட சர்க்கார் ஜில்லாக்களுக்கும் :
மெஸ்ஸர்ஸ். மகமது ரஹீம் கலீலி, 99-B, உஸ்மான்கான் ரோடு, பெங்களூர் சிடி.
தென்னிந்தியாவிற்கு : மெஸ்ஸர்ஸ். அடினைன் அண்டு கோ., லிமிடெட், மவுண்டு ரோடு, மதராஸ்

வைத்தார்கள். தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்குக் கொஞ்சமும் உதவியாயிராத வைத்தியமும் சட்டமும் தாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டன. ஆனால், இந்த 'அதிர்ஷ்டக்கார' மாணவர்களுக்கும், பிரான்சுக்குச் செல்லவும், அங்கிருந்து இந்தோ சீனவுக்குத் திரும்பி வரவும் 'அநுமதி' கிடைப்பது மிகச் சிரமமாயிருந்தது. ஏனெனில், இவர்களை 'அபாயகரமானவர்களாகப் பிரஞ்சு அரசாங்கம் கருதியது.

அரசியலில் மாணவர்கள் தலையிட வேண்டாமென்று இங்கேயும், மற்ற நாடுகளிலும் உள்ள சிலர் உபதேசிக்கிறார்கள். ஆனால், இந்தோ சீனத்தில் இப்போது நிலவி வருவதைப் போன்ற சகிக்கொணாத நிலைமையில், அதிகார மாற்றம் ஏற்பட்டாலொழிய, எப்படி நாங்கள் கற்றுத் தெரிந்து கொள்ள முடியும்? குடியேற்றப் பிரதேசங்களைச் சுரண்டுதல், அடக்கு முறை, விஷய இருட்டடிப்பு இவைகளே எங்களுடைய அறிவுத் துறையில் தடைகளாக நிற்கின்றன. கௌரவமான வாழ்வும், கல்வி யறிவில் முன்னேற்றமும் அடையப் போராடும் எங்களை இரண்டே நிலைமைகள்தாம் எதிர்நோக்கியிருக்கின்றன. ஒன்று, சோம்பேறியாகவே யிருந்து, நிரந்தர அடிமைத்தனத்திலும், அறியாமையிலும் அமிழ்ந்து கிடப்பது; மற்றது, துன்பத்துக்கு மூலாதாரமான எந்தத் துர்ச் சக்தியையும் வீழ்த்தி, விடுதலைக்கான மார்க்கத்தை வகுப்பது. தன்தேசத்தின் கடந்த காலத்திலே பெருமிதம் கொண்டு, அதன் திறமையிலே நம்பிக்கை வைத்து, அதன் எதிர்காலத்திலே சுபிட்சத்தைக் காண விழையும் எந்த இளைஞனையும் போலவே, வியட்-நாமிய மாணவனும், எந்த நிலைமையை ஏற்றுக்கொள்வது என்பதைப் பற்றிச் சிறிதும் தயங்கவில்லை. தங்களுடைய லட்சியமான விடுதலையை அடைய அவர்கள் போராடவே செய்கிறார்கள்.

முதன் முதலாகப் பிரான்ஸ் படையெடுத்தபோதும், 1925, 29, 30-31, 40 ஆகிய வருஷங்களில் எழுந்த பொதுஜன எழுச்சிகளின் போதும், வியட்நாமிய சுதந்தரக் குடியரசை ஸ்தாபித்த சமீப காலத்துப் போராட்டங்களிலும் வியட்-நாமிய மாணவர்கள் பெரும் பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சாரணர்களாகவும், நர்ஸ்களாகவும், சிப்பாய்களாகவும் வியட்-நாமியப் பெண்களும் இளைஞர்களும் சேவை செய்திருக்கிறார்கள். 1945-ல் சைகானில் நடந்த பயங்கரமான சண்டையில், பிணங்களை அப்புறப் படுத்தும் வேலையில் பல பெண்கள் ஈடுபட்டனர். எதிரிகளின் கை வெடிகுண்டுகளைப் போன்ற சிறு சிறு ஆயுதங்களால் இவர்களில் ஏராளமான பேர் தங்கள் உயிர்களையே பலி கொடுக்கவும் நேரிட்டது.

வெற்றி கிடைக்காமற் போனாலும், இந்தத் தியாகம் வீண் போகவில்லை. அந்நியப்பிடியிலிருந்து வியட்-நாமின் வட, மத்திய பாகங்கள் விடுபட்டன. வியட்-நாமிய சுதந்தரக் குடியரசு நிறுவப்பட்டதும், நாட்டு மக்களின் மனோபாவத்தில் ஏற்பட்டது போலவே, வியட்-நாமிய இளைஞர் சமூகத்திலும் புரட்சி ஜனித்தது. நிறையப் பள்ளிக்கூடங்கள் கிளம்பின. பலவித வசதிகள் சேர்க்கப்பட்டு ஹானாய் சர்வகலாசாலையும்

மாற்றி அமைக்கப்பட்டது. 1945 ஆகஸ்டு மாசத்திலிருந்து 1946 ஜூன் மாசத்துக்குள்—பத்தே மாசங்களில்—எத்தனையோ கஷ்டங்களைச் சமாளித்து, வியட்-நாமின் எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கையை, 85 சத விகிதத்திலிருந்து 15 சத விகிதமாக மாற்றியது, புதுக் குடியரசு. கல்வி முறையில் புது முறையை ஏற்படுத்தியதாலும், எழுதப் படிக்கத் தெரியாதவர்களிடமிருந்து வரும் திருமண விண்ணப்பங்களை யோக்கியதாம்சம் அற்றதாக மதிப்பிட்டதாலுமே இந்த அற்புதம் நிகழ்ந்தது. வியட்-நாம் இளைஞர்கள் அறியாமையை எதிர்த்து நடத்திய கடுமையான போராட்டத்தினால், ஹானாய் நகரத்தில் மட்டுமே 400 ஆண், பெண்கள் தாமாக உபாத்திமைத் தொண்டு புரிய முன்வந்தனர். குடியானவர்களைத் தேடி வீடு வீடாகச் சென்றும், இரவு வகுப்புக்கள் நடத்தியும், ஏழை மாணவர்களுக்குத் துணி, பணம் முதலியன வழங்கியும் அவர்கள் இந்தப் பணியில் வெற்றி கண்டனர்.

இன்னும் ஒரு வருஷத்தில், வியட்-நாம் முழுவதிலும் எழுதப் படிக்கத் தெரியாதவன் ஒருவன் கூட இருக்க மாட்டான் என்று நாங்கள் எதிர்பார்த்திருந்த சமயத்தில்தான், பிரெஞ்சுப் பிற்போக்காளர்கள் குறுக்கே விழுந்து, எங்களுடைய நிர்மாண வேலையைக் குலைத்தனர். இன்றும் அவர்கள் ஆதிக்கத்தில் இருக்கும் தெற்குப் பகுதிகளில் செய்த அக்கிரமங்கள் போதாவென்று, வடக்கேயும் தங்கள் கொடியை மறுபடி நாட்ட முயலுகின்றனர். தன் முதியவர்களுடன் சேர்ந்துகொண்டு, மறுபடியும் வியட்-நாமிய இளைஞன் போர்க்களத்திற்குச் செல்கிறான். ஒரு சிறந்த வியட்-நாமியப் பெண் கவி கூறியது போல, "பேனாவை விடுத்து, பீரங்கியில் கை வைக்க" மறுமுறையும் வியட்-நாம் இளைஞன் செல்கிறான், தன் தாய்நாட்டைக் காக்க.

உலக ஜனநாயக வாலிபர் சம்மேளனத்தின் ஆண்டு விழா நடந்தபோது, வியட் - நாமிய இளைஞர் சங்கம் ஒரு கூட்டத்தைக் கூட்டிற்று. வியட்-நாமில் தங்கியிருக்கும் சீன, இந்திய இளைஞர்கள் இதில் கலந்து கொண்டனர். வியட்-நாமிய இளைஞர்கள் கீழ்க்கண்ட செய்தியை, எல்லா நாட்டு வாலிபர்களுக்கும் விடுத்தார்கள்.

"உலக ஜனநாயக வாலிபர் சம்மேளனத்தின் ஆண்டு விழாவாகிய இந்தச் சந்தர்ப்பத்தில், வியட்-நாமிய இளைஞர்கள் எல்லாத் தேச வாலிபர்களுக்கும் தன் சகோதர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். பிரிக்கப்பட முடியாத, ஒரே தேசமாகிய வியட்-நாம் பூரண விடுதலை பெறுவதற்குத் தன்னால் இயன்ற அளவு போராடுமென்று மீண்டும் ஒரு முறை உறுதிகொள்கிறது. இந்தப் போராட்டத்தில் ஜனநாயகத்தில் ஆர்வமுள்ள எல்லா வாலிபர்களும் தன்னை ஆதரிப்பார்களென்றும் நம்புகிறது. வாலிபர்கள் அனைவரின் பூரண ஒத்துழைப்பின் மூலமாக, அடக்கி நசுக்கும் சக்திகளை எதிர்த்து, அமைதியையும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் பெறுமென்றும் எதிர்பார்க்கிறது."

✱

"காதலினால் மானிடர்க்கு...?"

பி. பிஜோர்ன்ஸன்

ஹூாக் என்ற ஊரில் காரன் என்ற ஒரு பெண் இருந்தாள். அவளுடைய பாட்டனார் மிகவும் படித்த மனிதர்; நகர 'மாஜிஸ்திரேட்'டாக இருந்தவர். தம் தள்ளாத வயசில் தமக்கு ஆதரவளிக்கவும், சந்தோஷ மூட்டவும் ஓர் ஆள் தேவை யென்று, இந்தப் பெண்ணைச் சிறு வயசிலேயே தம் வீட்டுக்குக் கொண்டு வந்து வளர்த்தார்; அவளுக்கு ஆண்டவனின் வேத வாக்குகளைப் போதித்தார். எல்லா விஷயங்களிலும் அவளுக்குச் சௌகரியம் செய்து வளர்த்து வந்தார். எதையும் அவள் வெகு சீக்கிரத்தில் லேசாகக் கற்றுக்கொண்டாள். அவளுக்குப் பதினைந்து வயசு நிரம்பிய பொழுது, எழுதவும், படிக்கவும், கணக்குப்போடவும் தெரிந்துகொண்டாள். பள்ளிக்கூடத்துப் பாடப் புத்தகங்களோடு பைபிளில் இருபத்தைந்து அத்தியாயங்களும் அவளுக்கு மனப் பாடம். நாட்டியத்தைவிட அவளுக்கு, மிகவும் கவனத்தைச் செலுத்திச் செய்யும் வேலைகளில் தான் பிரியம். வெறும் களியாட்டத்துக்காகச் செய்யப்படும் காரியங்களின் நடுவே அவளைக் காண்பது அரிது. அவளுடைய பாட்டனார் தம்முடைய புத்தகங்களை வைத்திருக்கும் மேல் மாடியின், மேல் அறையில்தான் தன் பெரும்பான்மையான நேரத்தை அவள் போக்குவாள். எப்போதாவது நாம் அவளைச் சந்தித்தால், அவளுடைய எண்ணங்கள் எல்லாம் எங்கோ தூரத்தில் சஞ்சரிப்பன போல அவளுடைய முகத் தோற்றம் காணப்படும். அப்போது நாம் இந்தக் காரனுக்குள்ள புத்தி சாதுரியத்தில் நமக்குப் பாதியாவது இருக்கக் கூடாதா என்று எண்ண மிடுவோம்.

பரம்பரைப் பாத்தியப்படி அவளுடைய பாட்டனாரின் சொத்தெல்லாம் அவளுக்கே சேர இருந்ததால், பல நல்ல வாலிபர்கள் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளத் தயாராக இருந்தார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் சம்மதிக்க மறுத்துவிட்டாள். இந்தச் சந்தர்ப்பத்தில், பாதிரியாரின் மகன் சர்வ கலா சாலைப் பரீட்சை முடிந்து வீட்டுக்கு வந்தான். அவன் அவ்வளவு நன்றாகப் பரீட்சை எழுதவில்லை; ஏனென்றால் அவனுடைய கவனம் படிப்பில் கவியாமல் வெறும் களியாட்டத்திலும், கெட்ட வழிகளிலும் திரும்பிவிட்டது. கடைசியாகக் குடிக்கவும் ஆரம்பித்துவிட்டான்.

"அவனிடம் ஜாக்கிரதையாக நடந்துகொள். பெரிய மனிதர் வீட்டு ஆட்களோடு தான் சங்கடங்கள் அதிகம். அவர்களைவிடக் குடியான ஜனங்களை நம்பலாம் என்பதே என் அபிப்பிராயம்" என்று காரனிடம் அவளுடைய பாட்டனார் சொன்னார்.

அவள் எப்பொழுதும் தன் பாட்டனாரின் புத்திமதியின்

பிஜோர்ன்ஸன் என்பவர் நார்வே நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். அவர் சுமார் அறுபது வருஷங்களுக்கு முன் எழுதிய 'ஸின்னோவி ஸோல்பாக்கன்' என்ற நவீனத்தி லிருந்து எடுக்கப்பட்டது இக் கதை.

படியே நடப்பாள். அதனல், பாதிரியாரின் மகனைப் பார்க்க நேரும்போது, அவள் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொள்ளுவாள். ஆனல், அவன் அவளைச் சும்மா அமைதியோடு இருக்க விடவில்லை. அவள் எங்கே போனலும் அவன் அவள் கண்ணில் பட்டுக்கொண்டே இருந்தான்.

"நீ என்னைத் தனியாக இருக்க விடுவது விசேஷம். இதனல் ஒரு பிரயோஜனமும் கிடையாது" என்ருள் காரன்.

எங்கெல்லாம் சாத்தியமோ, அங்கெல்லாம் அவளுக்காக அவன் பாதை யோரத்தில் ஒளிந்து காத்துக்கொண் டிருப்பான். கடைசியில் அவள் ஒரு நாள் அவன் கையில் பிடிபட்டாள்; அவன் சொல்லுவதை அவள் காது கொடுத்துக் கேட்கும்படி நேரிட்டது. அவன் ஓர் அழகான பையன். ஆனல், அவன் அவ ளில்லாமல் தான் வாழ முடியாதென்று சொன்னதும் அவள் பயந்தடித்துக் கொண்டு ஓடிவிட்டாள்.

அப்புறம் அவன் அவளுடைய வீட்டை வட்டம்போட ஆரம்பித்தான். அவளோ வீட்டை விட்டு வெளியே வருவதே இல்லை. ஒரு நாள் இரவு அவள் வீட்டு ஜன்னலுக்கு முன்னல் வந்து உட்கார்ந்துகொண்டான். ஆனல், அவள் தன் உடலை வெளியே காட்டவே இல்லை. "தற்கொலை செய்துகொள்ளப் போகிறேன்" என்ருன் அவன். அவளுக்கும் அது தெரியாதா? கடைசியில் அவன் மிகவும் படு மோசமாகக் குடிக்க ஆரம்பித்து விட்டான்.

"ஜாக்கிரதையா யிரு. எல்லாம் மோசமாய் இருக்கிறது" என்று எச்சரித்தார் பாட்டனர்.

ஒரு நாள் இரவு அவன் திடீர் என்று அவளுடைய அறைக்குள்ளேயே வந்துவிட்டான். அவன் எப்படி உள்ளே வந்தான் என்பது ஒருவருக்கும் தெரியாது.

"உன்னைக் கொன்று விடுவேன்" என்ருன் அவன்.

"நல்லது; உனக்கு அதற்குத் தைரிய மிருந்தால் அப்படியே செய்" என்று பதிலுக்குச் சொன்னள் அவள்.

உடனே அவன் அழ ஆரம்பித்துவிட்டான். தன்னை ஒரு மனிதனுக்கும் சக்தி அவளிடம்தான் இருக்கிறது என்று சொன்னன்.

அவள், "ஓர் ஆறு மாசத்துக்கு நீ குடியை அறவே நிறுத்தி விடுவாயா?" என்று கேட்டாள்.

அவன் அப்படியே அந்த ஆறு மாச காலமும் ஒரு துளி மது கூடக் குடிக்காமல் இருந்தான்.

அப்புறம், "இப்போது என்னை நீ நம்புகிருயா?" என்று கேட்டான்.

"ஊஹூம், நீ இன்னும் ஓர் ஆறு மாசத்துக்கும் எந்த விதமான களியாட்டத்திலும் கெட்ட நடவடிக்கைகளிலும் கலந்துகொள்ளாமல் இருந்தால் தான்" என்ருள்.

அவனும் அப்படியே கலந்து கொள்ளாமல் இருந்தான்.

"இப்போது என்னை நீ நம்புகிருயா?"

"ஊஹூம். நீ பழையபடியும் படிக்கப் போய் உன் பரீட்சையை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு வந்தால்தான்"

அவன் அப்படியே செய்து, பாதிரி வேலை வாங்கிக்கொண்டு

வந்தான். வந்து தன் உடைகளோடு அவள் முன் நின்றுகொண்டு "இப்போது என்னை நீ நம்புகிறாயா?" என்று கேட்டான்.

"நீ மதப் பிரசங்கம் செய்வதை நான் கேட்க விரும்புகிறேன்" என்றாள் காரன்.

பிறகு, அவன் கடவுளின் பரிசுத்தமான, உண்மை ஊழியனாக மதப் பிரசங்கம் செய்வதை அவள் கேட்டாள். தான் ஒன்றுக்கும் லாயக் கற்றவன் என்றும், மாறுதல் அடைவது (ஆட்கொள்ளப் படுவது) எவ்வளவு எளிதான காரியம் என்றும், நல் வழியில் ஓர் அடி எடுத்து, வைத்து, பகவத் சாந்தியைக் கண்டுவிட்டால் அது எவ்வளவு சுகமாக இருக்கு மென்றும் எடுத்துக் கூறினான்.

அப்புறம் பழையபடியும் காரனிடம் போனான்.

அவள், "இப்போது நான் நம்புகிறேன்—நீ மதப் பிரசங்கத்தில் கூறுவது போலவே நடப்பாய் என்று. ஆனால், உனக்கு நான் ஒரு விஷயத்தைச் சொல்லவேண்டும். அதாவது, கடந்த மூன்று வருஷங்களாக நான் என் அத்தான் ஆண்ட்ரூ ஹாகனைக் கல்யாணம் செய்து கொள்ளத் தீர்மானித்து அவரோடு பழகி வருகிறேன். அதனால், நீ அடுத்த ஞாயிற்றுக் கிழமையன்று, நாங்கள் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம் என்பதைக் கோவிலில் பிரகடனம் செய்துவிடு............"
என்று சொல்லிவிட்டாள்!

✻

அவனைப் பொறுத்தது

காரண காரியம் தெரிந்த விவேகி உலகத்தோடு ஒத்துப் போகிறான்; அது தெரியாதவன் உலகத்தைத் தன் வழியில் திருப்ப முயலுகிறான். ஆகவே, தெரியாதவனை வைத்துத்தான் உலகின் முன்னேற்றம் இருக்கிறது.

—பெர்னார்ட்ஷா

அநாமதேய ஷா!

சிறிது காலத்துக்கு முன் பெர்னார்ட் ஷா அமெரிக்கா சம்பந்தமான எல்லாவற்றையும் பரிகாசம் பண்ணிக்கொண் டிருந்தார். அவரைப் பழிதீர்த்துவிட வேண்டு மென்று பத்திரிகாசிரியர்கள் பலர் காத்துக் கொண் டிருந்தனர். அந்தச் சமயத்தில் பெர்னார்ட் ஷா தம் மனைவியோடு மியாமி என்ற ஊருக்குப் போயிருந்தார். சமயத்தை எதிர்நோக்கிக் கொண் டிருந்த ஒரு பத்திரிகாசிரியருக்குச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. அவருடைய பத்திரிகையில், ஷாவின் மனைவி ஸ்ரீமதி பெர்னார்ட் ஷா வந்ததைப் பற்றியும், அந்த அம்மாள் இந்த விருந்துக்குப் போனாள், அந்தக் கூட்டத்துக்குப் போனாள், இதைச் சொன்னாள், அதைச் சொன்னாள் என்றும் ஒரு நீண்ட செய்தி வந்தது. கடைசியில் கீழ்க்கண்ட விதமாகச் செய்தி முடிக்கப்பட் டிருந்தது:

"அந்த அம்மாளுடன் அவளுடைய கணவரும் வந்திருந்தார்; அவர் பெர்னார்ட் ஷா என்ற பெயருடைய ஓர் எழுத்தாளர்"

—கிறிஸ்தியன் சயன்ஸ் மானிடர்

உள்ளே வரக்கூடாது

கொரியாவில் ஒவ்வொரு வீட்டிலும் பெண்களுக் கென்று தனி அறை ஒன்று உண்டாம். அந்த அறைக்குள் ஆடவர் அநுமதிக்கப்பட மாட்டார்களாம்.

—கரன்ட் ஹிஸ்டரி

மார்க்ஸீயப் பொருளாதாரம்

●

ரா. ஹாலாஸ்யநாதன்

VIII

முதலாளித்துவ சமூகத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில முதலாளிகளின் ஆதிக்கத்தி லிருக்கின்றன, சகல தொழிற் சாலைகளும். லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத் துடன்தான் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். ஆகவே, மக்களுக்குத் தேவையான பொருள்கள் எவை, எவ்வளவு பண்டங்கள் தேவை முதலியவை களைக் கவனிப்பதே கிடையாது. இதனால், அதிக லாபத்தை எப்ப டித் திரட்டுவது என்பதையே குறிக்கோளாகக் கொண்ட முதலாளித்துவத்தில், உற்பத்தி முறையில் அராஜகம் குடிகொண் டிருக்கிறது.

முதலாளிகள் இரவு பகலாக யந்திரங்களை ஓடச் செய்து பொருள்களை உற்பத்தி செய்து மலை போலக் குவிக்கிறார்கள். ஆனால், இவைகளை யார் வாங்கு கிறார்கள்? தொழிலாளர்களும், விவசாயிகளும், பொது ஜனங் களும்தானே! ஒரு புறத்தில் பொருள்களை ஏராளமாக உற்பத்தி செய்து குவிக்கும் முதலாளிகள், மற்றொரு புறத்தில் அவைகளை வாங்கி உபயோகிப்ப வர்களின் சம்பளத்தை மேன் மேலும் குறைக்கிறார்கள். ஆகவே, பொது ஜனங்கள் அவை களை வாங்க முடியாமற் போகிறது. தொழிலாளர்களும், விவசாயிகளும், மத்திய தர வகுப்பாளர்களும் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் போதிய அளவு இருப்பதனால் பொருள்களை வாங்காம லிருக்கிறார்கள் என்று நினைக்கக் கூடாது. பணமில்லா மையால்தான் வறுமையில் உழலுகிறார்கள். பொருள்களை வாங்காம லிருக்கிறார்கள்.

ஆகவே, பொருள்கள் வாங் குவாரின்றி மலைபோல் குவிகின் றன. முதலாளிகள் பொருள் உற்பத்தியை நிறுத்துகிறார்கள். பல தொழிற்சாலைகள் மூடப்படு கின்றன; லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றித் தெருவில் நிற்கிறார்கள். இதைத் தான் பொருளாதார நெருக்கடி என்று அழைக்கிறோம்.

"தொழிலாளர்களும், நிலக் கரி யும்" என்ற புத்தகத்தில் எ. ராச் செஸ்டர் நெருக்கடி எப்படி ஏற் படுகிறதுஎன்பதைத் தெளிவாகப் பின்வருமாறு விவரிக்கிறார்:

"ஒரு சுரங்கத்தொழிலாளியின் மகன் தனது தாயிடம் 'குளிர் அதிகமாக இருக்கிறதே, ஏன் கணப்பை மூட்டக்கூடாது?' என்று கேட்டான். அதற்குத் தாய், 'நம்மிடம் நிலக் கரி யில்லை. உன் தந்தைக்கு வேலை கிடைக்க வில்லை. அதனால் நிலக் கரி வாங்கப் பணம் கிடையாது' என்று பதில் சொன்னாள்.

"'அம்மா, ஏன் அவருக்கு வேலை கிடைக்கவில்லை?' என்று திரும்பவும் மகன் கேட்டான்.

"'ஏனென்றால், நிலக் கரி ஏராள மாக இருக்கிறது' என்று தாய் பதில் கொடுத்தாள்........."

பொருளாதார நெருக்கடி பற்றியும், அதைத் தவிர்க்கும் விவரத்தையும் கூறுகிறது இக் கட்டுரை. அடுத்த இதழில் முதலா ளித்துவம் ஏகாதிபத்திய உருவெடுத்த கதை வருகிறது.

மேலே கூறிய சம்பாஷணை பொருளாதார நெருக்கடி என் ஏற்படுகிறது என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது. பூமியி லிருந்து அதிகமாக நிலக்கரியைத் தோண்டி எடுத்ததனுல்தான் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி யின் குடும்பம் குளிரால் தவி யாய்த் தவிக்கிறது.

கோடிக் கணக்கான குடும்பங் கள் உணவின்றிப் பட்டினி கிடப் பதற்குக் காரணம் உணவில் லாமை யல்ல; உணவை அதிக மாக உற்பத்தி செய்வதே கார ணம்! சுருங்கக் கூறின், முதலாளி கள் கூலியைக் குறைத்துத் தொழி லாளர்களை அதிகமாகச் சுரண்டு வதால், தொழிலாளர்களின் வாங்கும் சக்தி குறைகிறது. இதன் விளைவாக, பொருள்கள் வாங்குவாரின்றிக் கிடங்குகளில் குவிந்து விடுகின்றன.

1929-30-ம் வருடங்களில் ஒரு புறம் கோடானுகோடி மக்கள் உணவின்றித் தவியாய்த் தவித்த பொழுது, கப்பல்களில் உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்று, நடுக் கடலில் அவைகளை எறிந்த தையும், சில பாகங்களில் தீக்கிரை யாக்கியதையும் நாம் இன்னும் மறந்துவிட வில்லை.

"பொருள்களை உற்பத்தி செய் யும் முதலாளி லாபம் சம்பாதிக்க வேண்டுமானுல், உற்பத்தி செய்த பொருள்கள் விற்பனையாக வேண்டும். அதாவது, அவை களை வாங்குவதற்கு ஆட்கள் வேண்டும். இவைகளை யார் வாங்குகிருர்கள்? பொது ஜனங் கள். ஆனுல், முதலாளித்துவ நாடுகளி லுள்ள பொது ஜனங் களில் பத்தில் ஒன்பது பேர்கள் ஏழைகள். அதாவது, கைக்கும் வாய்க்கும் எட்டாத குறைந்த கூலியை வாங்கும் தொழிலாளர் களும், தொழிலாளர்களைவிடப் படுமோசமான நிலைமையி லிருக் கும் விவசாயிகளும்தாம் இவர் கள். வியாபார சுபிட்ச காலத் தில் முதலாளிகள் ஏராளமான பொருள்களை முடிந்த அளவு உற் பத்தி செய்து குவிக்கிருர்கள். அதே சமயத்தில் பொது ஜனங் களில் பெரும்பான்மையோர் ஏழைகளாக இருப்பதால் அவை களை வாங்கும் சக்தியற்றவர் களாக இருக்கிருர்கள்..." என்று லெனின் கூறுகிருர்.

முதலாளித்துவ சமூகத்தில் பொருளாதார நெருக்கடி யைத் தவிர்க்கவே முடியாது. ஒரு புறத்தில் பெரும்பாலான மக்க ளின் சம்பளத்தைக் குறைப்பது, மற்ருெரு புறத்தில் கண்மூடித் தனமாகப் பொருள்களை உற்பத்தி செய்து குவிப்பது என்ற நிய தியை அடிப்படையாகக் கொண் டிருக்கிறது முதலாளித்துவம்.

முதலாளித்துவம் வளர்ச்சி யடைந்ததி லிருந்து முதலா ளித்துவ நாடுகளில் 8 அல்லது 12 வருடங்களுக்கு ஒரு முறை பொருளாதார நெருக்கடி யானது 1825-ம் வருஷத்திலிருந்து ஏற்பட்டுக்கொண்டே இருக் கிறது. (பொருளாதார நெருக் கடி முதன் முதலில் 1825-ம் வருஷம் ஏற்பட்டது. பின்னர், 1836, 1847, 1857, 1873, 1893, 1900, 1907.........இவ்வாறு தொடர்ச்சியாக நெருக்கடி ஏற் பட்டுக்கொண்டே இருக்கிறது).

இப்பொழுதுகூடப் பொருளா தார நெருக்கடி தலை தூக்கிக் கொண் டிருக்கிறது. உதாரண மாக, அமெரிக்காவை எடுத்துக் கொள்ளலாம். யுத்த காலத்தில் யுத்தத்திற்குத் தேவையான பொருள்களை அபரிமிதமாக உற் பத்தி செய்யவேண்டிய அவசியம்

ஏற்பட்டது. ஆகவே, 1943-ம் வருஷ இறுதியில் யுத்தத்திற்கு முன்பு உற்பத்தி செய்த பொருள்களைவிட இருமடங்கு அதிகமாக அமெரிக்கா பொருள்களை உற்பத்தி செய்தது. யுத்த காலத்தில் 4½ கோடியிலிருந்து 5 கோடி வரையிலும் புதிதாகத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்தது. யுத்தம் முடிந்த பிறகு யுத்த சாமான்களை உற்பத்தி செய்த தொழிற்சாலைகளில் பல மூடப்பட்டதால் இப்பொழுது 30 லட்சம் பேர்கள் வேலையின்றித் தெருவில் நிற்கிறார்கள்.

இது மட்டுமல்ல; முதலாளிகள் யுத்த காலத்தில் கிடைத்த லாபக் கொள்ளையைத் திரும்பவும் பெறுவதற்காகத் தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைத்து வருவதோடு, பொருள்களின் விலையையும் உயர்த்தி வருகிறார்கள். 1946-ம் வருஷத்தில் ஒவ்வொரு சாமான்களின் சராசரி விலை 23% உயர்த்தப்பட்டது. இதனாலும், கூலியை குறைத்ததனாலும் தொழிலாளர்களின் வாங்கும் சக்தி 60% குறைந்திருக்கிறது என்று அமெரிக்கமுதலாளிகளின் பத்திரிகையான பிஸினஸ் வீக் எழுதுகிறது.

இவ்வாறு பொதுமக்களின் வாங்கும் சக்தி குறைந்திருப்பதால், 1947-ம் வருஷ ஆரம்பத்தில் 3,400 கோடி டாலர் மதிப்புள்ள சாமான்கள் அமெரிக்காவிலுள்ள கிடங்குகளில் வாங்குவாரின்றிக் குவிந்து கிடக்கின்றன. இவைகளை விற்க வேண்டுமானால், தொழிலாளர்களின் வாங்கும் சக்தியை 25% மேலும் அதிகரிக்க வேண்டும் என்றும் பிஸினஸ் வீக் எழுதுகிறது.

ஆகவே, நெருக்கடியைத் தவிர்க்க வேண்டுமானால், ஒரு சிலர் ஆதிக்கத்திலிருக்கும் உற்பத்தி சாதனங்களை—தொழிற்சாலைகளை-தேசிய மயமாக்க வேண்டும். அப்பொழுதுதான், ஏராளமாக உற்பத்தி செய்து குவிக்கும் நிலைமைக்கு உற்பத்தி முறை அபிவிருத்தி யடைந்திருப்பதால், முழுக்க முழுக்கப் பயன்படுத்திக்கொண்டு பொது ஜனங்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தலாம்.

முதலாளித்துவ சமூகத்தில் பொருளாதார நெருக்கடி தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையைப் படுமோசமாக்கி வருவதாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கிக் கொண்டே இருப்பதாலும் பாட்டாளி மக்களைப் புரட்சிப் பாதைக்கு இழுத்துச் செல்லுகிறது. தனி உடைமை இல்லாத சமூகத்தைச் சிருஷ்டிக்கும் போராட்டத்திற்குப் பாட்டாளி மக்களை அழைத்துச் செல்கிறது. தனி உடைமை இல்லாத சமூகத்தில் பொருளாதார நெருக்கடிக்கு இடமே கிடையாது. உதாரணமாக, உலகம் முழுவதுமுள்ள முதலாளித்துவ நாடுகளில் பொருளாதார நெருக்கடியும், வேலையில்லாத் திண்டாட்டமும், இல்லாமையும் கோர தாண்டவமாடும் பொழுது, பொதுவுடைமைச் சமூகத்தை நிலைநாட்டியிருக்கும் ஸோவியத் யூனியனில் அவைகளை மருந்துக்குக்கூடக் காண முடியவில்லை.

✲

நல்ல அம்சம்

இந்தக் காலத்துப் பாட்டின் ஒரு நல்ல அம்சம் என்னவென்றால், அது வெகுகாலம் உயிரோடு இராததுதான்.

—பிராச்னவ்

நரஸுஸ்

என்றுலே

நல்ல காபி

- என்பதுதான் -

மகராஜன் மாளிகை விருந்தானுலும் சரி
குடியானவன் குடிசை விருந்தானுலும் சரி
எங்கும் 'நரஸுஸ்'' காபியைக் காணலாம்
என்? விருந்தோம்பும் அவர்கள் விருந்தினரின்
மனதைக் கவருவது ''நரஸுஸ்'' காபிதான்
என்ற ரகசியத்தை பூரணமாய் அறிந்திருப்பத
ுல்தான். நவீன யந்திரசாதனங்களுடன் அமைந்
துள்ள பாக்டரிகளில் நல்ல அனுபவசாலிகளைக்
கொண்டு முதிர்ந்து பக்குவம் அடைந்த கொட்
டைகளைப் பொறுக்கி பதப்படுத்தி அனுப்
புவதே ''நரஸுஸ்'' காபியின் நறுமணத்
துக்கும் உயர்தரத்திற்கும் காரணம்.

நரஸுஸ்

- இந்தியத்தயாரிப்பில் தலை சிறந்தது -

For Malabar Rights. SREE VANCHI FILMS TRIVANDRAM

புது வைஸ்ராய்

●

விமரிசகன்

இந்தியாவுக்கு எந்த வைஸ்ராய் அதிகாரத்துக்கு வந்தாலும், இந்திய மக்கள் போராடினாலொழிய அவர்களுக்கு விமோசனம் கிட்டப்போவதில்லை. வேவல் பிரபு போய் மவுண்ட்பேட்டன் பிரபு வந்திருக்கிறார். இந்த உத்தியோக மாற்றம் இந்தியர்களைப் பொறுத்தவரை கேவலம் ஒரு பத்திரிகைச் செய்தி என்பதைத் தவிர்த்து வேறு ஒரு விசேஷமும் அதற்குக் கற்பிப்பதற்கில்லை. ஆனாலும்...

இவருக்கு முன்னால் வைஸ்ராயாக இருந்த வேவல் பிரபுவும் ராணுவ உத்தியோகஸ்தராயிருந்தவர்; இவரும் ராணுவ உத்தியோகஸ்தராயிருந்தவர். இதன் மர்மம் என்ன? பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரும், சிறந்த அரசியல் ஞானியுமாகிய ஸ்ரீ பாமி தத் பின் வருமாறு எழுதுகிறார்:

"தென் கிழக்கு ஆசியாவில் பிரிட்டிஷ் ராணுவ நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் பெயர் போன லார்டு மவுண்ட்பேட்டன் இந்திய வைஸ்ராயாக நியமிக்கப் பட்டிருப்பதைஇங்கேகவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவருடன் சேர்ந்து ஜெனரல் இஸ்மே என்பவனும் வருகிறான். சர்ச்சிலுடைய ராணுவ நிபுணர்களில் பிரதானமானவன் ஜெனரல் இஸ்மே; இன்று மவுண்ட் பேட்டனுக்குப்பிரதான ராணுவ ஆலோசகன். இது எதைக் காட்டுகிறது? இந்தியாவில் இப்போது ஒரு புதிய கட்டம் ஆரம்பமாகி இருக்கிறது. இப்புதிய கட்டத்தில் மக்களை அடக்கி இந்தியாவைக் கட்டி வைத்திருப்பதற்கு ஏராளமாக ராணுவங்களைக் குவித்துத் தயாரிப்புகள் செய்யப்படுகின்றன என்பதைக் காட்டுகிறது."
(ஜனசக்தி—5-3-47)

ஆகவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தன் பிடியைப் பலப்படுத்தச் செய்த ஒரு சூழ்ச்சியோ இந்தப் புது வைஸ்ராயின் நியமனம் என்றும எண்ணத் தோன்றுகிறது.

இந்த மவுண்ட் பேட்டன் பிரபுவின் பூர்வோத்திரம் என்ன?

இங்கிலாந்தில், மில்போர்ட் ஹேவன் பிரபுவின் இளைய குமாரராக அவதரித்த இவர், கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலையில் கல்வி பயின்றார். சிறு வயசிலேயே தந்தையாரைப் போல, கடற்படையில் சேர்ந்தார். 1921-ம் வருஷம் வேல்ஸ் இளவரசருடன் இந்தியாவுக்கு வந்திருக்கிறார். அத்துடன் இந்தியா மார்க்கமாக ஆகாய விமானத்தில் இவர் பல முறை பிரயாணம் செய்திருக்கிறார். ஏறக்குறைய இந்தியாவைப்பற்றி இவர் புத்தகப் படிப்பின் மூலம் தெரிந்திருப்பதும் (தெரிந்திருந்தால்!) நேரடியாகத் தெரிந்திருப்பதும் இவ்வளவே.

அட்லியின் அறிக்கையைக் கண்டு, இவரைக் கடைசி வைஸ்ராய் என்று நினைத்து நாம் கனவு காண்பதில் பயனில்லை; இந்தியாவில் சுதந்தரத்திற்காகப் போராட ஒன்றுபட்டு முன்வந்து, இவரைக்கடைசி வைஸ்ராயாக ஆக்கினால்தான் இவர் கடைசி வைஸ்ராயாக ஆவார்.

புது வைஸ்ராய் நியமனத்தின் விசேஷ அம்சம்......?

புத்தக உலகம்

வாழ்வின் ஒளி: [ஆசிரியர்: பி. எம். கண்ணன். வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூபாய்: 4–0–0.]

தன் வாழ்க்கையில் தன் கணவனிடம்கூடச் சொல்ல முடியாத ஒரு ரகசியம் அவள் இதயத்தில் புரையோடிக் கிடக்கிறது. கணவன் நெருங்க நெருங்க அவள் விலகிக் கொண்டே போகிறாள்........இந்தப் புதிர்—தன் சொத்தைத் தன்னால் அனுபவிக்க முடியவில்லை என்ற இந்தப் புதிர்—அவனுக்கு விளங்கவே இல்லை...இப்படி நெளிகிறது கதை.

நல்ல அழகான கதை. நன்றாக ரசித்து அனுபவித்து எழுதிய கதை. முகப்பிலிருந்தே ரசம் ஊடுருவ ஆரம்பிக்கிறது. வேண்டிய கருத்துக்கள் இருக்கின்றன. படிக்கப் படிக்கத்தான் சுவை தட்டுகிறது.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

குறிப்பிட்ட நான்கு பாத்திரங்களை வைத்துக் கொண்டு அலுப்புத்தட்டாமல் பின்னிப் பின்னி நூற்றுக் கணக்கான பக்கங்கள் எழுதும் ஆற்றல் சரத்சந்திரருக்கும் டாகூருக்கும் தாம் உண்டு. அந்தத் திறமையின் சாயலை நன்றாகப் பார்க்கிறோம் நண்பர் பி. எம். கண்ணனிடம் 'வாழ்வின் ஒளி'யைப் படித்துவிட்டு. 'இயற்கையும் எதிர்ப்பும்' என்ற அத்தியாயத்தில் ஆசிரியரின் முழுத் திறமை அறியக் கிடக்கிறது. உவமைகள் பழைய நொடிப் பாதையை விட்டு விலகி இருப்பது குறிப்பிடத் தக்கது தான்.

யாரோ ஒரு முன்பின் தெரியாத சன்யாசி—நாடோடி—எதையோ சொன்னான் என்பதற்காக ஒரு பெண் தன் வாழ்க்கைச் சுகத்தைப் பலியிட்டாள் என்ற கதையின் அடிப்படை மட்டும் இயற்கைக்கு முரண். 'அசலா' 'குமுதினி' இவற்றின் அருகில் மூன்றாவதாக வைத்துப் பார்க்கத் தகுதியுண்டு 'வாழ்வின் ஒளிக்கு'.

குமுதம்: [கதைத் தொகுப்பு. ஆசிரியர்கள்: வை. சுப்ரமண்யன், நா. ராமச்சந்திரன், சாமி. வெளியிட்டோர்: சந்திரிகா பதிப்பகம், 31—A, குப்பைய செட்டித் தெரு, பழைய மாம்பலம், சென்னை–17. விலை ரூபாய் 1-0-0.]

இத் தொகுப்பில் ஒன்பது சிறு கதைகளிருக்கின்றன. ஒன்பது கதைகளும் ஒன்பது சுவைகளைத் தருகின்றன. பாராட்ட வேண்டிய முயற்சி தான். யார் யார் எந்தெந்தக் கதைகளை எழுதியிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. புத்தகத்தின் இடை இடையே கோத்திருக்கும் ஜவுளி விளம்பரங்களை நிறுத்தி இருந்தால் புத்தகம் நன்றாக அமைந்திருக்கும். மூவர் எழுதிய இந்தப் புத்தகத்தைச் சாமி தம் தந்தைக்கு அர்ப்பித்திருப்பது புரியாத விஷயம்.

தமிழ் பழமையும் புதுமையும். [ஆசிரியர்: ந. சி. கந்தையா பிள்ளை. வெளியிட்டோர்: முத்தமிழ் நிலையம், சென்னை. விலை 8 அணா.]

தமிழுக்கு ஆக்கம் தேடித் தரும் அருமையான புத்தகம். தமிழைப் பற்றிய நல்ல தர்க்கரீதியான ஆராய்ச்சி. வடமொழி நமக்குத் தெரியாமல் நம்மிடையே புகுந்து தன் இடத்தை நிலைநாட்டிவிட முயற்சிக்கிறது, நாம் தமிழைப்பற்றிநன்கு அறியாத காரணத்தால். தமிழுக்குக் கேடு விளைவிக்கும் முயற்சிகளையும், முறைகளையும், கூட்டத்தையும் வன்மையாகக் கண்டிக்கிறது இந்தப் புத்தகம்.

டில்லி சலோ: [ஆசிரியர்கள்: கு. சேதுராமன், வெ. முத்துராமலிங்கம்.

கிடைக்குமிடம்: 'டில்லி சலோ மாளிகை', கல்லுப்பட்டிப் போஸ்டு, திருமங்கலம். விலை: அணா 0-2-6.]

நேத்தாஜியிடம் உயிரையே பணயம் வைத்திருக்கும் அன்பர்களின் நல்ல முயற்சி.

இராவணன் வித்தியாதரனா? [ஆசிரியர்: ராவ்பஹதூர்—பேராசிரியர்—திரு A. சக்கரவர்த்தி நயினர் M. A., I. E. S. வெளியிட்டோர்; முத்தமிழ் நிலையம், 75, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை. விலை: அணா 0-6-0.]

ஆசிரியர், தம்முடைய ஆராய்ச்சிக்குப் பின் வித்தியாதரர் தமிழரென்றும், இராவணன் கூட்டமும், ஹனுமானும் தமிழர்கள் என்றும், இராமாயணப் போர் வெளிநாட்டி லிருந்து படை யெடுத்து வந்த ஆரியருக்கும் அவர்களை எதிர்த்துத் தடுக்க முயன்ற நாட்டு மக்களாகிய இராக்கதர்களுக்கும் நடந்த போர் என்னும் முடிவுக்கு வருகிறார். இது எல்லோருக்கும் உடன்பாடாக இருக்குமா?

தென்றமிழ்ப் பாவை [ஆக்கியோர்: பண்டித இராம சுப்பிரமணிய நாவலர். கிடைக்குமிடம்: செந்தமிழ் நிலையம், பதுமநாபபுரம், தக்கலை. விலை அணா 0-8-0.]

கண்ணகிதான் தென்றமிழ்ப் பாவை. இதைச் சுருக்கிய சிலப்பதிகாரம் எனச் சொல்லலாம். சிலப்பதிகாரத்தின் அளவைக் கண்டு பயந்து, படிக்காமல் விட்டவர்களெல்லாம் இந் நூலை வழி நூலாகக் கொண்டு சிலப்பதிகாரத்திற்குள் புகலாம். நல்ல சுத்தமான இனிய தமிழ் நடையில் இருக்கிறது நூல். இம் மாதிரியே மற்றைய பெருந் தமிழ் நூல்களுக்கும் வருவது நல்லது-வரத்தான்வேண்டும்.

ஆரியர் தமிழர் கலப்பு [ஆசிரியர்: ந. சி. கந்தையா பிள்ளை. வெளியிட்டோர்: முத்தமிழ் நிலையம், 75, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை. விலை அணா 0-8-0.]

மிக மிகப் பயனுள்ள நூல். ஆரியர்—திராவிடர்—தமிழர் என்ற பிரச்னை மிகவும் குழப்பமான பிரச்னை; யாருக்கும் தெளிவாகப் புரியாத விஷயம். இந்தக் குழப்பமான பிரச்னையைத் தீர்க்கமாகத் தீர்த்து வைக்கிறது இந் நூல். 'தமிழுக்கு அந்நியமான ஒரு மொழியைத் தனது சாதி மொழி யென்றும், தமிழரல்லாத பிறரைத் தமது கோத்திர முதல்வர்கள் என்றும் கூறிக்கொள்ளும் ஒரு கூட்டத்தினரைத் தமக்கு மதக்குருக்களென்றும், மோட்ச வழிகாட்டிகள் என்றும் உழலுகின்ற தமிழ் மக்களின்... இவ் வகை நூல்கள் வெளியிடப்படுகின்றன' என்று ஆசிரியர் கூறுவதை ஒப்புக்கொள்கிறோம்.

வெற்றி [டாகுர் சிறு கதைகள். மொழிபெயர்ப்பு: த. நா. குமாரஸ்வாமி. வெளியிட்டோர்: புத்தக நிலையம், இராயவரம், புதுக்கோட்டை ஸ்டேட்: விலை: ரூபாய் 2-8-0.]

இது மகாகவி தாகூரின் ஏழு சிறு கதைகள் அடங்கிய தொகுப்பு. இந்த ஏழு கதைகளில் 'சீட்டு ராஜ்யம்' என்ற சித்திரத்தில் மகா கவியின் ஆழம்காண முடியாத திறமை காணக் கிடக்கிறது. 'இனிது முடிந்தது' என்ற இன்பமான கதை சிருங்கார ரசத்தை அள்ளிக் கொட்டுகிறது. 'வெற்றி' உள்ளத்தில் படிந்து விட்ட வாழ்க்கையின் வெற்றி. பண்படையாத அரசியல் வாதிகளுக்குச் சூடு கொடுக்கிறது 'தேசாபிமானம்'. 'அசட்டு ராமகானுபி' உலக நிலையை விளக்கும் மற்றொரு புத்தன். உலகியலைச் சொல்கிறது 'நல்ல வரன்'. உலகோர் அறிய வேண்டிய குடும்பம் 'ஹால்தார் குடும்பம்'

த. நா. கு.வின் மொழிபெயர்ப்பில் வழக்கமாக—விசேஷமாக—அமையும் சொல்லழகும், இழையும் நடை யழகும், பொருளழகும் சற்றும் மாறுமல் படிந்திருக்கின்றன.

பேச்சு முறை வரும் இடங்களில் குறிப்பிட்ட வர்க்கத்தின் பாஷையையோ, அல்லது குறிப்பிட்ட பிராந்தியத்தில் நடை முறையில் இருக்கும் பாஷையையோ ஒரே மாதிரியாக முறைப்படி கையாண்டிருந்தால் நன்றாக இருக்கும்.

சந்திப் பிழைகள் நிறைய—ஏராளமாக—இருக்கின்றன. இவற்றை மறு பதிப்பில் களைவது அவசியம்.

பூர்ண சக்தி [ஆசிரியர்: கி. லக்ஷ்மண சர்மா, பி. ஏ., பி. எல். கிடைக்குமிடம்: இயற்கை இல்லம், கணேச நகர், புதுக்கோட்டை. விலை: அணா 0-8-0.]

நோயற்ற இன்ப வாழ்வு நடத்த விழைபவர்களுக்கு இந் நூல் பெரிதும் உதவும். எனவே, எல்லோருக்கும் இந் நூல் பயனுடைத்தே. மருந்தைக் குடித்து மாயாமல், இயற்கை வழியில் வருகின்ற நோய்களைத் தீர்த்து வாழ்கின்ற வாழ்க்கையே மனித வாழ்க்கை. அதற்கு வேண்டிய விவரங்கள் இந்நூலில் இருக்கின்றன.

வரப் பெற்றோம்

சுதந்தர வீரன் (தேசிய வாரப் பத்திரிகை): ஆசிரியர்: ஜே. பி. ராட்ரிக்ஸ். சுதந்தர வீரன் காரியாலயம், பிராட்வே, சென்னை. வருஷச் சந்தா ரூ. 6-0-0.]

கர்னாடக சங்கீதம் (ஐந்தாம் பாகம்): ஆக்கியோன்: ஸங்கீத வித்வான் S. R. குப்புஸ்வாமி, B. A., Mus., எக்ஸ்டென்ஷன், கோயம்புத்தூர்.

வாலாஜாபாத் இந்து மத பாடசாலை 30-ம் (1947) ஆண்டு அறிக்கை: வள்ளலார் மாணவர் இல்லம், வாலாஜாபாத்.

தமிழ் முரசு (மாதம் இரு முறை): ஆசிரியர்: ம. பொ. சிவஞானம். வெளியிடுவோர்: தமிழ் முரசு பதிப்பகம், 1/29, இருசப்ப கிராமணித் தெரு, சென்னை 2. விலை. 4 அணா.

தக்ஷிண தீபம் (மாதம் ஒரு புத்தகம்): பதிப்பாசிரியர்: பிரான்சிஸ் மோசஸ். காரியாலயம், 53, சாலைத் தெரு, திருநெல்வேலி. விலை 3 அணா.

விமர்சனம் (மாதம் இரு முறை): நிர்வாக ஆசிரியர்: காண்டீபன். கிடைக்குமிடம்: விமர்சனம் காரியாலயம், எக்ஸ்டென்ஷன், சேலம். விலை 2 அணா.

கவியின் கர்ஜனை: ஆசிரியர்: சாரண பாஸ்கரன். வெளியிட்டோர்: இக்பால் வாசக மன்றம், கூத்தாநல்லூர் (தஞ்சை ஜில்லா). விலை இலவசம்.

தொழிலாளர்கள் போராடுகிறார்கள்: வெளியிட்டோர்: தொழிலாளர் சங்கம், சேலம். விலை 6 பைசா.

ஜென்ம தேசம். ஆசிரியர்: அல்லாமா இக்பால். தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டோர்: இக்பால் வாசக மன்றம், கூத்தாநல்லூர் (தஞ்சை ஜில்லா). விலை 4 அணா.

மாயூரத் திருப்பதிகங்கள்: ஆசிரியர்கள்: சம்பந்தர், நாவுக்கரசர். 2. **திருப்புன்கூர்த் திருப்பதிகங்கள்**: ஆசிரியர்கள்: சம்பந்தர், அப்பர், சுந்தரர். 3. **திரு அன்னியூர்த் திருப்பதிகங்கள்**: ஆசிரியர்கள்: சம்பந்தர், அப்பர். 4. **திருநீடூர்த் திருப்பதிகம்**: ஆசிரியர்: சுந்தரர். இந்த நான்கும் தருமபுர ஆதீன வெளியீடுகள். விலை தெரியவில்லை.

நிலவு: மாசம் ஒரு புத்தகம். பதிப்பாசிரியர்: புத்தூர் கிழார். முகவரி: நிலவு நிலையம், ராயப்பேட்டை, சென்னை. விலை 4 அணா.

கேரள வீரர் முஹமது அப்துர் ரஹ்மான் நினைவு மலர்: பதிப்பாசிரியர்: கே. ஏ. சுப்ஹான். கிடைக்குமிடம்: 16/261 ரங்கே கவுடர் தெரு, கோயம்புத்தூர். விலை 4 அணா.

முல்லை: தை வெளியீடு. ஆசிரியர்: ரகுநாதன். கிடைக்குமிடம்: முல்லைப் பதிப்பகம், சென்னை-4. விலை 8 அணா.

—ராமையா

88869

21N36

சுய ரூபம்

ஒரு ஸ்திரீ தன் வயசை மறைக்கத் தொடங்கும் போதுதான், உண்மையாகவே தன் வயசைக் காட்டத் தொடங்குகிறாள். —அநாமதேயம்

Edited, Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115 - E, Mowbrays Road, Royapettah, Madras - 14

சுளுக்கு, வாயுப் பிடிப்பு, நரம்பு வலி, கால்-கை மரத்துப் போதல், பார்ச வாயு, அல்லது பல்வலி எதுவானாலும்

நிச்சயமாக
குணமடைய இதை
உபயோகியுங்கள்

பாதிக்கப்பட்ட இடத்தில் சிறிது ஒத்தடம் கொடுத்து அங்கு தினம் மும்முறை 10-15 நிமிஷம் லிட்டில்ஸ் ஓரியண்டல் பாமைத் தேயுங்கள். விரைவில வலி நீங்கும்.

LITTLE'S
ORIENTAL BALM

இந்தியா முழுதும் மிகவும் பிரபலமான சிறந்த ஔஷதம்.

வாயுவால் இடுப்புப் பிடிப்பு, நரம்புநோய், தலைவலி, வாயு, உபத்திரவங்கள் பூச்சிக்கடி மூக்குவலி, ஜலதோஷம், மார்ச்சளி, ஆஸ்த்மா, தொண்டைக் கட்டு, இருமல் ஆகிய இவைகளுக்கு:

கைகண்ட ஔஷதம்

வெளிவந்துவிட்டது!

சாம்ராஜ்யங்களை அழித்த
சரசிகளின் சொல்லோவியம்

ரோமாபுரி ராணிகள்

சி. என். அண்ணாத்துரை, எம். ஏ.
எழுதியது

விலை ரூ. 2-4-0
தபால் செலவு தனி

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் : : திருச்சி

உயர்தரமான கைக் கடிகாரங்கள்

ஸ்விட்ஸர்லந்தில் செய்யப்பட்டவை, உயர்ந்த வேலைப்பாடுள்ளவை, ஒவ்வொன்றும்மூன்று வருடங்கள் உத்தரவாதம். படத்தில் காண்பதைவிட அழகானவை. ப்ளாஸ்டிக் ஸ்ட்ராப் அல்லது சங்கிலியுடன் அழகிய பெட்டியில் வைத்து சப்ளை செய்யப்படும்.



No. W—101

பளபளப்பான குரோமியம் கேஸ்
(ஜுவெல் இல்லாதது) ரூ. 28/-
உயர்தரம் ,, 4-ஜுவெல்கள் ரூ. 38/-
,, ,, 7 ,, ரூ. 40/-
,, ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரூ. 58/-
15-ஜுவெல்கள்ஸ்டெயின்லெஸ்ஸ்டீல் ரூ. 68/-
,, ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரூ. 88/-



No. W—102

பளபளப்பான குரோமியம் (ராஸ்கோப் மூவ்மெண்ட்) ரூ. 30/-
உயர்தரம் ,, 4-ஜுவெல்கள் ரூ. 40/-
,, ,, 7 ,, ரூ. 44/-
ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரூ. 60/-
15-ஜுவெல்கள்ஸ்டெயின்லெஸ்ஸ்டீல் ரூ. 70/-
,, ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரூ. 90/-

No. M—103

பளபளப்பான குரோமியம்
4-ஜுவெல்கள் ரூ. 42/-
உயர்தரம் 7-ஜுவெல்கள் ரூ. 45/-
,, ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரூ. 62/-
15-ஜுவெல்கள்ஸ்டெயின்லெஸ்ஸ்டீல் ரூ. 72/-
,, ரோல்ட்கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரூ. 92/-

மேல்கண்டவைகைகளில் லேடி, ஸைஸிற்கு 12½% அதிகம். பாகிங் போஸ்டேஜ் 0–12–0 தனி. ஒரே சமயத்தில் இரண்டு கடிகாரங்களுக்கு ஆர்டர் செய்தால தபால் செலவு இனம். ஆர்டர் செய்யும்பொழுதும் கடிகாரத்தின் நம்பர் எழுதவேண்டும்.

பயோனிர் வாட்ச் கம்பெனி

போஸ்ட் பாக்ஸ் நம்பர் 11428, கல்கத்தா
ஷோ ரூம்: 318-A சித்தரஞ்சன் அவென்யூ

கவிராஜ் R. N. சென்குப்தாவின்

அமிர்த ஸலஸா

(ரிஜிஸ்டர்ட்)

(தங்க ஸத்துக் கலந்தது)

எல்லா விதமான சரும வியாதிகள், ரத்த அசுத்தம், கட்டிகள், வாத நோய்கள், ரத்தசோகை முதலியவற்றிற்கும் குழந்தை பிறந்தவுடன் ஏற்படும் பலவீனத்திற்கும் ஓர் சிறந்த ஒளஷதம்.

ஒரு வாரம் உபயோகித்தால் அதன் குணம் நன்கு தெரியும் ரத்தம் சுத்தம் அடைந்து நாளடைவில் நல்ல ரத்தம் அதிகரிக்கிறது. எல்லா வியாதிகளும் நீங்கி அவயவங்கள் நல்ல சுவாதீனம் அடைகிறது. யௌவன சக்தியை மீண்டும் பெறுகிறது.

பாடில் 1க்கு ரூ. 1-0-0

1-டஜன் ரூ. 10-0-0

(தபால் செலவு தனி)

ஏஜண்டுகள் தேவை

Mahat Ayurvediya Ausadhalaya

144/1, Upper Chitpore Road, Calcutta

அணில்

●

குழந்தைகளின்
வாரப் பத்திரிகை

●

கதை, விடுகதை, கணக்கு, கட்டுரை, சயன்ஸ், பாட்டு, விளையாட்டு, பெரியார் சரித்திரம்—இன்னும் குழந்தைகளுக்கான எல்லா விஷயங்களும் வெளியிடப்பெறும்

முதல் பத்திரிகை மே மாதம் வெளிவரும்

தனிப் பிரதி
ஒரு அணா ★ வருட சந்தா
ரூ. 3

●

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை 14

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப் பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகாணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்



லெனின் பிறந்தார்

ரூபாய் மூன்று

ஆர். ராமனாதன் எழுதியது ★

தபால் செலவு தனி

ார் 200-பக்கம் — படங்களுடன்

•

சக்தி காரியாலயம் :: ராயப்பேட்டை, சென்னை-14

அணு

அணு அளவுள்ள ரத்தினம், வை... இவைகளின் மதிப்பைக் கொண்டு பெரி... பர்வதத்தையும் விலைக்கு வாங்கக்கூடு...

அளவற்ற ஐஸ்வரியத்தை ஒருவ... மல் கையில் அடக்கிவைத்துக்... கூடியது **வைரங்களே.** ... எத்தேசத்திலும் நன்மதிப்பை... வைரங்கள்

அன்றியும் அப்பொருள்கள் உ... இருக்கும்பொழுது பறஸ்தல... படுத்த வேண்டும் என்பது அ...

வைரம் வாங்குவதில் நம் ... விநியோகப்படாமல் என்று... **மூலதனமாகவும் ஐஸ்...** **வும்** உள்ளது

உயர்தர ரத்தினங்கள் ... **ஆயுளை விருத்திசெய்து...** **ஸையும்** கொடுக்கின்றன...

ஜுவல்ஸ்

சென்ற ஐம்பது ஆண்டுகளாக நாணயமும் நன்மதிப்பும் பெற்ற வைர வியாபாரிகள்

தரகர் உதவியின்றி நேராக நன் நம்பிக்கையுள்ள வியாபாரியிடம் உங்கள் வைரங்களை வாங்குங்கள்

313-எஸ்பிளநேட் — மதராஸ்